
# ஆவணம்

இதழ் 11 சூலை 2000



**தமிழகத் தொல்லியல் கழகம்**

*தஞ்சாவூர்*

உறுப்பினர் கட்டணம்

தமிழகத் தொல்லியல் கழக வாழ்நாள் உறுப்பினர் கட்டணத்தை (ரூ. 600) பொருளாளர், தமிழகத் தொல்லியல் கழகம், மே/பா. கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், *613 005* என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். காசோலை வரைவோலைகள், தமிழகத் தொல்லியல் கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

பிற தகவல்களுக்கு செயலர், தமிழகத் தொல்லியல் கழகம், மே/பா. கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், *613 005.* என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

# ஆவணம்

இதழ் 11

# AVANAM

## VOL. 11

சு. இராசகோபால்
பதிப்பாசிரியர்

**தமிழகத் தொல்லியல் கழகம்**
தஞ்சாவூர்

**2000**

ஆவணம் : 11 (2000)

© தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்

**Avanam**, Journal of the Tamil Nadu Archaeological Society
Thanjavur.

இவ்விதழ் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின்
(INDIAN COUNCIL OF HISTORICAL RESEARCH)
நல்கையுடன் வெளியிடப்படுகிறது.
செய்திகளுக்கு அவ்வக்கட்டுரையாசிரியரே
பொறுப்பு.

அச்சிட்டோர் : அலமு பிரிண்டிங் வொர்க்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

# பொருளடக்கம்


பக்கம்

1. பேரூர் பண்டைய ஓட்டுப் பொறிப்புகள் — 1
ர. பூங்குன்றன்
2. பல்லவ மன்னன் தந்திவர்மனின் கல்வெட்டு — 7
ம. காந்தி
3. பிரம்மதேசம் கல்வெட்டு — 8
சூ. சுவாமிநாதன்
4. பூந்தோட்டம் வாலீசுவரர்கோயில் கல்வெட்டுகள் — 9
இல. தியாகராஜன், இரா. தனபால்
5. பாலேகுப்பம் கல்வெட்டுகள் — 15
ப. வெங்கடேசன், ப. பூபாலன்
6. ஏம்பலம் செக்குக் கல்வெட்டு — 17
எம். நம்பிராசன்
7. விழுப்புரம் மாவட்டத்தில் அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புகள் — 18
சி. வீரராகவன், மங்கையர்க்கரசி
8. அத்தித்தாங்கல் கல்வெட்டு — 23
கி. குமார்
9. காளியாம்பட்டி அய்யப்பொழில் ஐந்நூற்றுவர் கல்வெட்டு — 24
நாக. கணேசன்
10. ஐந்நூற்றுவர் செக்குக் கல்வெட்டு — 25
நாக. கணேசன்
11. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் — 26
கரு. இராசேந்திரன்
12. வரஞ்சுரம் இடங்கைக் கல்வெட்டு — 32
க. பன்னீர்செல்வம்
13. மங்கலம் சிவன் கோயில் கல்வெட்டுகள், — 33
வெ. வேதாசலம், ஆர். பாலசந்திரன்
14. அழகரைக் கோயில் கல்வெட்டு — 38
ப. சண்முகம்
15. சேலூர்க் கல்வெட்டு — 40
க.அ. புவநேசுவரி
16. பட்டலூர்க் கல்வெட்டுகள் – 3 — 41
அ. பழனியப்பன்
17. காளியாம்பட்டி அம்மன் கோயில் கல்வெட்டு — 43
நாக. கணேசன்

18. மகளூர் இராசேந்திர சோழன் கல்வெட்டு 44
ஆ. பத்மாவதி, சி. வீரராகவன்
19. சொக்கலிங்கபுரம் அழகியசோழீசுவரர் கோயில் கல்வெட்டுகள் 45
வெ. வேதாசலம், கு. சேதுராமன்
20. புதுப்பாளையம் சுந்தரபாண்டியன் கல்வெட்டு 53
ப. வெங்கடேசன்
21. வீரகேரளரின் இருகூர் செப்பேடுகள் 55
இரா. நாகேசுவரசிவம்
22. ஏழுசெம்பொன் கல்வெட்டுகள் 59
இல. தியாகராஜன்
23. வேட்டமங்கலம் புற்புவன ஈசுவரர்கோயில் கல்வெட்டுகள் 65
நாக. கணேசன்
24. உத்திரகோசமங்கை கல்வெட்டுகள் 71
சொ. சாந்தலிங்கம், சொ. சந்திரவாணன்
25. கீரமங்கலம் கல்வெட்டுகள் 75
அ. சந்திரபோஸ்
26. தானவர் பற்றி குறிப்பிடும் சிதம்பரம் கல்வெட்டு 77
அ. சந்திரபோஸ்
27. சீரங்கராயர் காலத்து அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் செப்பேடு 78
மா. கலைவாணன், ப. வெங்கடேசன்
28. சோமாண்டார்குடிக் கல்வெட்டுகள் 81
ஆ. பத்மாவதி, சி. வீரராகவன்
29. ஐய்யங்கார்குளம் கல்வெட்டு 86
க. ஈஸ்வரன்
30. மிரசிபுரம் சத்திரம் கல்வெட்டுகள் 87
து. துளசிராமன்
31. மண்ணிவாக்கம் கல்யாணமண்டபக் கல்வெட்டு 90
கோ. உத்திராடம்
32. வை.ச.மோட்டூர் சத்திரக் கல்வெட்டு 91
ப. வெங்கடேசன்
33. திருக்கோயிலூர் ஆங்கிலக் கல்வெட்டு 93
சீ. வசந்தி
34. வாலாசப்பேட்டை சத்திரக் கல்வெட்டு 94
ப. வெங்கடேசன்
35. பெரிய கொல்லபட்டி கல்வெட்டுகள் 95
தே. கோபாலன்
36. குடந்தை காகித ஆவணம் 97
சு. இராசகோபால்

37. ஆங்கிலேயர் கால உடமை ஆவணம் 99
ஆர். பாலச்சந்திரன்

38. உரப்பனவிளை கல்வெட்டு 100
தே. கோபாலன்

39. தஞ்சை பிரசன்ன பெருமாள் கோயில் கல்வெட்டுகள் 101
மு. ராஜேஷ்

40. கண்டவராயன்பட்டிக் கல்வெட்டுகள் 102
நா. வள்ளி

41. வாங்கல் மற்றும் செட்டிபாளையம் கல்வெட்டுகள் 105
இரா. செயராமன்

42. உசிலம்பட்டிப் பகுதியில் தொல்லியல்
கண்டுபிடிப்புகள் - 1999 106
வீ. செல்வகுமார், ம. காந்திராசன்

43. தலைப்பலி நடுகல் சிற்பம் 111
நாக. கணேசன்

44. அரிய இராவண அனுக்கிரக சிற்பம் 112
த. சந்திரகுமார்

45. மாபூசுகான் காசு 114
ஆறுமுக சீதாராமன்

46. கான்சாகிப்பின் தமிழ்க் காசு 115
ஆறுமுக சீதாராமன்

47. தென் இலங்கையில் பழந் தமிழ் நாணயங்கள் 116
ஐராவதம் மகாதேவன்

48. யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது நாணயங்கள் 121
ப. புஷ்பரட்ணம்

49. பள்ளித்தொங்கலுடையார் 128
ந. முத்து

50. இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுகள் கூறும்
நாணயப் பெயர்களும் அவற்றின் புழக்கமும் 130
மா. பவானி

51. தி.ந. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு 135
Evolution of the Early Brahmi in Historical Outline,
M.R. Raghava Varier

52. செய்தித்திரட்டு 145

53. புதிய வெளியீடுகள் 155

54. புதிய கருத்துக்கள் 160

கட்டுரையாளர்கள் 161

தணிக்கையறிக்கை 164

# தமிழகத் தொல்லியல் கழகம்

மே/பா. கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் | கொடுமுடி ச. சண்முகன், சென்னை |
| துணைத்தலைவர் | எஸ்.எம். கமால், ராமநாதபுரம் |
| செயலர் | கா. ராஜன், தஞ்சாவூர் |
| இணைச்செயலர் | சு. இராஜவேலு, சென்னை |
| பொருளாளர் | பா.ஜெயக்குமார், தஞ்சாவூர் |
| பதிப்பாசிரியர் | சு. இராசகோபால், சென்னை |
| செயற்குழு உறுப்பினர் | நடன. காசிநாதன், சென்னை |
| | எம்.டி. சம்பத், மைசூர் |
| | வி. ஜீவானந்தன், ஈரோடு |
| | கே. சதாசிவன், திருநெல்வேலி |
| | பி. சந்திரசேகரன், ராஜபாளையம் |
| | மா. கணேசன், அவினாசி |
| | சொ. சாந்தலிங்கம், மதுரை |
| | வெ.இரா. துரைச்சாமி, நாமகிரிப்பேட்டை |

---

**பதிப்புக் குழு**

எ. சுப்பராயலு, தமிழ்ப்பல்கலைக்கழகம்
ப. சண்முகம், சென்னைப் பல்கலைக்கழகம்
கோ. விசய வேணுகோபால், பாண்டிச்சேரி

# 1. பேரூர் பண்டைய ஓட்டுப் பொறிப்புகள்

*ர. பூங்குன்றன், கோயம்பத்தூர்.*

பேரூர் பெருங்கற்காலம் முதல் இன்றுவரை மக்கள் வாழ்ந்து வரும் ஊராக இருந்து வருகின்றது. காலந்தோறும் பதிந்த வரலாற்றுச் சுவடுகளைப் பெற்று விளங்கும் பெருமை பெற்ற ஊர். முதுமக்கள் தாழிகள், ரோமானியக்காசுகள், வீரகேரளர் செப்பேடு, பண்டைய அணைகள், கல்வெட்டுகளோடு கூடிய வரலாற்றுப் புகழ்மிக்க கோயில்கள், போன்றவை இவ்வூரில் கிடைத்த வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. 1960–களில் இங்கு நடைபெற்ற அகழாய்வுகள் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரையிலான வரலாற்றுத் தடையங்களை அளித்தன.

**சுடுமண் தகட்டுப் பொறிப்புகள்** *(படம் 1:1,2,6,7,8)*

1998ஆம் ஆண்டு முதல் இவ்வூர் நொய்யலாற்றங்கரையில் கணக்கிலடங்காத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. பேரூரைச் சேர்ந்த திரு. கருப்புசாமி என்பவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புலவர். ஐ. இராமசாமி அவர்களுக்கு மூன்று ஓட்டுத்தகட்டுப் பொறிப்புகளையும் பத்துக்கும் மேற்பட்ட சுடுமண் பொம்மைகளையும் அளித்தார். மேலும் வெண்கலவில்லை, கருப்புக்கல் வில்லை ஆகியவற்றையும் அளித்திருக்கிறார். தொடர்ந்து அவருக்கு அளித்த ஓடுகள், சுடுமண் பொம்மைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகம். கடந்த ஓராண்டாகக் கோவை அகழ்வைப்பகத்திற்கும் ஓட்டுத் தகடுகளையும் சுடுமண் பொம்மைகளையும் அளித்து வருகிறார். இத்தொல்பொருள்களின் முக்கியத்துவத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

ஓட்டுத் தகடுகள் வட்டம், கால்வட்டம், அரைவட்டம், நீள் சதுரம் ஆகிய வடிவங்களில் செய்யப் பெற்றுள்ளன. இந்தப் பொறிப்புகளில் எருமி நாடு குமுழூர் காடன் என்ற பாடம் பயின்று வருகின்றது. இப்பாடம் பல்வேறு விதமாக எழுதப் பெற்றுள்ளது. எருமி என்ற சொல் எஎஎருமி என்றும் எருருமி என்றும், எருமிமிமி என்றும் எழுதப் பெற்றுள்ளது. நாடு என்ற சொல் நாட்டு என்றும் எழுதப் பெற்றுள்ளது. சில இடங்களில் ட, ம என்ற எழுத்துகள் தமிழ்பிராமி வடிவத்திலும், வடபிராமி வடிவத்திலும் மாறிமாறி எழுதப் பெற்றுள்ளன. இடை இடை பயின்று வரும் சில குறியீடுகள் விளங்கிக் கொள்ள முடியாதவையாக உள்ளன.

தமிழ் சிறப்பு ழகரம் மூன்று வகையான குறியீடுகளால் குறிக்கப் பெறுகின்றது. மழன் என்ற சொல் ஓர் ஓட்டில் பயின்று வருகின்றது. மேலும் மழஅநான்மகள் என்ற தொடரும் குறிப்பிடத்தக்கது.

வே(சே)யாகடஅன் என்ற வாசகம் அடிக்கடி பயின்று வருகின்றது.

எழுத்து வடிவங்களில் சில முற்காலத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. சில பிற்காலத்தவையாக உள்ளன. சான்றுக்கு நாடு என்பதில் உள்ள டு என்ற எழுத்தினைக் காட்டலாம். இது சிலவற்றில் 4ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து உருவம் போல் காணப்படுகிறது. இந்த எழுத்துக்கள் பொறித்த சுடுமண் ஏடுகள் பண்டை நாளில் எழுத்துப் பயிற்சிக்காக உருவாக்கம் பெற்றவையா? அல்லது பூடகமாக எழுத்துக்களை மாற்றி எழுதும் வழக்கத்திற்குரியவையா? என்பது ஆய்வு செய்யப்பட்ட வேண்டிய ஒன்றாகும்.

இந்த ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ள எருமி நாடு குமுழூர் காடன் என்பதன் மூலஓட்டுப் பொறிப்பு ஒன்று இருந்திருக்க வேண்டும். கி.பி. 1–3ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்திற்கு இந்த வழக்கம் தொடர்ந்திருக்க வேண்டும். இதுவரையில் கிடைத்த ஓடுகளில் மூன்றாம் நூற்றாண்டு வரையிலான எழுத்துக்கள் மட்டும் பெரும்பாலும் கிடைக்கின்றன. சில ஓடுகளில் உள்ள பின்நாளைய வடிவத்திலான எழுத்துகள் மிகவும் திரிந்து எழுத்துகள் தானா என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தும். இந்தப் பாடத்தின் மூலவடிவம் சித்தன்னவாசலில் உள்ள தமிழ் பிராமி கல்வெட்டில் உள்ள 'எருமிநாடு குமுழூர் பிறந்த காவுடி' என்ற தொடரைப் பெயர்த்து எழுதியது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

அண்மையில் கிடைத்த மூன்று ஓடுகளில் எருமி நாடு குமுழுர் காடன் என்ற பாடத்துடன் மாங்குளம் கல்வெட்டை நினைவுபடுத்தும் பாடம் பயின்று வருகின்றது. ஓர் ஓட்டில் பெருமளவில் மாங்குளம் கல்வெட்டின் பாடம் பயின்று வருகின்றது. மேலும் இவ்வெழுத்துகள் பெரிதும் தமிழ்பிராமி வடிவத்தைப் பெற்றுள்ளன. மாங்குளம் கல்வெட்டின் பாடம் முழுமையாக எழுதப் பெறவில்லை. மாங்குளம் கல்வெட்டில் பயின்று வரும் வழுத்திய், நெடுஞ்சழியன், சலகன், இளஞ்சடிகன், தந்தைய் சாடிநா(கா)ன் செஈய பாளி, நந்தசிரி ஆசிரியர், கொட்டுபித்தபாளி ஆகிய சொற்கள் பயின்று வருகின்றன. இடையிடையே நன்னன், எ ஈசர், கோ அ ஊர், கோட்டுப் பாளி ஈய் ஆகிய சொற்கள் பயின்று வருகின்றன. எருமி நாடு குமுழூர் காடன் என்ற பாடம் பொறித்த ஓடுகளில் எழுத்துக்கள் முறை மாறி வந்துள்ளன. ஆனால் இவ்வோடுகளில் எழுத்துகள் முறைப்படி வரிசையாக எழுதப் பெற்றுள்ளன. பூடகமான குறியீடுகள் ஏதும் இந்த ஓடுகளில் இல்லை.

அண்மையில் பேரூர் பாலத்தின் அருகில் கிடைத்த கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பானைகளைச் சேர்ந்த செம்பழுப்பு வண்ணம் தீட்டிய இரண்டு பானைகளில் எருமிநாடு குமுழூர் காடன் என்று எழுதப் பெற்றிருந்தன. (படம் 1:3) இவை சுட்டபின் எழுதப் பெற்றவை. ஆனால் எழுத்துபொறித்த தகட்டு ஓடுகள் சுடுவதற்கு முன் எழுதப் பெற்றவை.



1:1



1:3



1:2



1:4



1:5

படம் 1:1,2. சுடுமண் தகடுகள்; 1:3 நாக சிற்பம், முன் பக்கம்;
1:4, நாக சிற்பம், பின்பக்கம்; 1:5. கருப்பு சிவப்பு பானையில் எழுத்துக்கள்.

இன்னொரு குறிப்பு, மட்கலன்கள் செய்யப் பயன்பட்ட மண்ணும் ஓட்டுத்தகடுகள் செய்யப்பட்ட மண்ணும் வேறு வேறானவை என்பது.


**எழுத்துப் பொறிக்கப்பட்ட சுடுமண் பொம்மைகளும், நாக சிற்பமும்**

போளுவாம்பட்டி புலவர் இராமசாமி அவர்களிடம் இருபதுக்கும் மேற்பட்ட சுடுமண் பொம்மைகளும் ஓர் கருங்கல் நாக சிற்பமும் உள்ளன. அவற்றில் சிலவற்றின் பீடப்பகுதியில் சில குறியீடுகளுடன் காடன் என்ற சொல் பொறிக்கப் பெற்றுள்ளது. மேலும் சுடுமண் பொம்மையின் பின்புறம் பதினேழு வரிகள் பொறிக்கப் பெற்றுள்ளது. இதன் உயரம் 33 செமீ. அகலம் 16 செமீ. வலது கையில் வேல் ஏந்தியும் இடது கையைத் தொடைமீது வைத்தும் பீடத்தின் மீது நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. தலையில் முடியும், காதில் தடித்த அணியும், கழுத்தில் பட்டையான கழுத்தணியும், மேற்கை தோளில் கடகம், இடையில் முழங்காலுக்குக் கீழ்வரை ஆடையும், காலில் தண்டையும் அலங்கரிக்கின்றன. இந்த சுடுமண் பொம்மையின் பின்பக்கத்தில் வழவழப்பாகச் செய்யப்பட்டுள்ள பலகை போன்ற பகுதியில் தமிழ் பிராமி எழுத்துக்களும் இடையிடையே வடபிராமி எழுத்துக்களும் காணப்படுகின்றன.


கருங்கல் நாகசிற்பத்தில் (படம் 1:4,5) முன்புறம் நாகத்தின் வடிவமும், பின்புறம் தமிழ் பிராமி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த முன் பகுதி நீள்வட்ட வடிவில் அமைந்து அதன் முன்புறம் 5 தலை நாகம் வாலை சுருட்டிக் கொண்டு படம் எடுக்கும் நிலையில் காணப்படுகிறது. பின்புறம் பொறிக்கப்பட்டுள்ள பண்டைத் தமிழ் எழுத்தின் கீழ் கோட்டு உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. பொம்மையில் உள்ள இந்தப் பொறிப்பு சுடுமண் ஓட்டு ஏடுகளில் உள்ள பாடமே திரும்பத் திரும்ப மந்திரம் போல் எழுதப் பெற்றுள்ளது. காடன் என்பதற்குப் பதிலாக இறுதிப் பெயர் நாடன் என்றும், நாகன் என்றும் எழுதப் பெற்றுள்ளது. மேலும் எழுத்துக்கள் மாறி மாறி பொறிக்கப்பட்டுள்ளன. நாக சிற்பத்தின் பின்புறம் பதினொரு வரிகளில் பொறிப்புகள் உள்ளன.

சுடுமண் ஓடுகளில் வடிவங்கள் பல வகையில் அமைந்துள்ளன. நீள் சதுர வடிவம், செவ்வக வடிவம், வட்டவடிவம், அரைவட்ட வடிவம், அரைச் செவ்வக வடிவம், மீன் போன்ற வடிவம் ஆகிய வடிவங்களில் சுடுமண் ஏடுகள் கிடைத்துள்ளன. ஏட்டின் விளிம்பு கருக்கு போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. மறு பக்கத்தில் பெரிய அளவில் மீன் காட்டப்பட்டுள்ளது. இதன் கீழ்பகுதியில் நத்தை காட்டப்பட்டுள்ளது. 3 பாய் மரங்களுடன் கூடிய படகு காட்டப்பட்டுள்ளது. சுடுமண்ணாலான அம்மி போன்ற பொம்மையிலும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த வடிவ வேறுபாடுக்கான காரணம் புரியவில்லை. இது அந்தக் காலத்தில் பயன்படுத்திய எடைக்கற்களா?


அல்லது முத்திரைகளாக? என்ற கேள்வி எழுகின்றது. தகடுகளுக்குப் பின்புறம் பல குறியீடுகளும், சில எழுத்துக்களும் எழுதப் பெற்றுள்ளன. மலைகள், ஆறு, சந்திரன், சூரியன், நாகம், செடிகள், படகு ஆகியவை பல ஓடுகளின் பின்புறம் வரையப்பட்டுள்ளன. சில வரைபடங்கள் நிலவியல் வரை படங்களாகலாம். இந்த வ்ரைபடங்களின் கட்டங்களில் அ.மி.ரு.எ.நா.டு. ஆகிய எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன. இந்தக் கட்ட



1:6



1:7



1:8

படம் 1 6 சுடுமண் பொம்மையின் பின்புறம் எழுதப்பட்ட பாடம்;
1·7,8 மாங்குளம் கல்வெட்டைப் பின்பற்றிய தகட்டுப் பொறிப்புகள்

எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன என்பது புலப்படவில்லை. பல்வேறு வகையான கோட்டு உருவங்கள் பற்றித் தனியே ஆய்வு செய்தால் பண்டைய குறியீடுகள் ஓவிய எழுத்துகள் ஆகியவை பற்றி விளங்கிக் கொள்ள முடியும். அந்தக் குறியீடுகளின் பொருளைக் கண்டறிய முடியும். பொறிப்புகளின் இறுதியில் சில எழுத்துக்கள் பிற எழுத்துக்களைக் காட்டிலும், பெரிதாகவும், வகை வகையாகவும், வளைத்தும் எழுதப் பெற்றுள்ளன. இந்த எழுத்துக்கள் குறிப்பிட்ட மனிதனின் கையொப்பமா? அல்லது குறிப்பிட்ட குடியின் குறியீடா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்த சுடுமண் ஏடுகளின் பின்புறத்திலும், சுடுமண் பொம்மைகளின் பக்கவாட்டிலும் நாகத்தின் உருவம் வரையப்பட்டுள்ளது. ஒரு சுடுமண் ஓட்டின் பின்புறம் தன் உடலை வளைத்து வளைத்து நிற்கும் நிலையில் நாகம் படமெடுத்து ஆடும் காட்சி கோட்டு வடிவில் வரையப்பட்டுள்ளது. அதன் வால் பகுதியில் நாகஅன் என்று தமிழ் பிராமி எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது. அதன் நடுப்பகுதியில் உடலுக்கு மேல் குடிசை போன்று வரையப் பெற்றுள்ளது. இந்தப் தொல்பொருட்கள் கிடைக்கும் பகுதிக்கும் நாகத்திற்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும்.

போளுவாம்பட்டி கோட்டைக்காட்டில் உள்ள சிவன்கோயில் நாகேசுவரம் என்று பெயர் கொண்டுள்ளது. இந்தப் பெயர் நாக வழிபாட்டோடு தொடர்புடையதாகலாம்/ இருப்பினும், புத்த, சமண, சமயங்களோடு நாகம் தொடர்புடையதாக உள்ளதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். போளுவாம்பட்டிக் கோட்டைக்காட்டில் புத்தர், மைத்ரேயர் (புத்தரின் ஒரு அவதாரம்) ஆகிய சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. அது மட்டுமின்றி சமணத் தீர்த்தங்கரர் பார்சுவ நாதர் வழிபாடுடன் தொடர்புடையதா என்ற கேள்வி எழுகின்றது. புத்த விகாரக் குடைவரைக் கோயில்களிலும், சாஞ்சி தூபியிலும், ஐந்து தலைநாகம், மூன்று தலை நாகம், ஆகியவை வடிக்கப் பெற்றுள்ளன. தனிச் சிற்பம் ஒன்றில் மூன்று தலை நாகம் ஒன்று ஆந்திரத்தில் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளது. இந்த உருவம் எந்த சமயத்தைச் சேர்ந்தது என்று அறிய முடியவில்லை. பேரூரில் கிடைக்கும் சப்தமாதர் தொகுப்புடன் (கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டு) ஐந்து தலை நாகராஜன் உருவம் ஒன்று கிடைத்துள்ளது. மனித உருவத்தின் பின்புறம் நாகத்தின் உருவம் உள்ளது.

நாக வழிபாடு இறந்தோர் வழிபாட்டுடன் தொடர்புடையது என்ற நோக்கிலும் தற்போது கிடைத்த நாக உருவங்களைப் பார்க்க வேண்டும். எகிப்து, கிரேக்கம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் ஈமச் சின்னங்களில் நாகத்தின் உருவங்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலும் இறந்தவர்கள் பாதாளத்தில் உள்ள நாகலோகத்தில் வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அதனால் பேரூரில் கிடைக்கும் நாக உருவங்கள் இறந்தோர் வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் கொள்ளலாம்.

---

# 2. பல்லவ மன்னன் தந்திவர்மனின் நடுகல் கல்வெட்டு

ம.காந்தி, வேலூர்.

இடம் : *வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலாங்குப்பம் என்ற ஊரில் பொன்னியம்மன் கோயில் மண்டபத்தில் புதைக்கப்பட்டுள்ள நடுகல்.*

காலம் : *தந்திவர்மன் யா:14, (கி.பி. 810).*

செய்தி : *வீரனின் வலது கையில் வாளும் இடது கையில் கேடயமும் உள்ளன. தலையில் தலைப்பாகை அணி செய்கிறது. மார்புப் பகுதியில் அம்பு தைத்துள்ளது. வலது புறத்தில் கண்ணாடியும் குத்து விளக்கும் இடது புறத்தில் கெண்டியும் பழமும் உள்ளன.*

1 ஸ்ரீ கோவிசைய தந்தி விக்கரம பரு
2 மற்க்கு யாண்டு பதின் நா
3 ல்காவது அடையாறு நாடு ம
4 லையன்னாராள ஒருகில் மணற்
5 ச்சுனை மேற் படை வர ஊர் அழியா
6 மைய் காத்து பட்டான் சத்தி
7 ம வகிலவன் வீரையர்க் கல்
8 பென்னை

# 3. பிரம்மதேசம் கல்வெட்டு

சூ. சுவாமிநாதன், மைசூர்.

*இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், பிரம்மதேசம் கிராமத்திலுள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயிலின் கருவறைத் தென்சுவர்.*

*காலம் : சக ஆண்டு 830 (கி.பி. 908).*

1 சுவத்தி ஸ்ரீ சகரயாண்டு எண்ணூற்று முப்பது திருவேகம்பபுறத்து ராஜமல்லச் சதுர்வேதி மங்கலத்துத் திருப்போந்தை பெருமாநடிகள் ஸ்ரீ கோயிலில்..

2 பன்னிரு கழஞ்சரை இப்பொன்னால் வந்த விருத்தி கொண்டு ஒரு நந்தா விளக்கு சந்திரா. த.ம். இத்தளி கணப்பெருமக்கள் முட்டாமை எரிப்பார்களாக வைத்தேன் இத்தந்மம்...

3 ங் மாசியா . இதி ரக்ஷிப்பார் அச்வமேதஞ் செய்த பலம் பெறுவதாகப் பணித்தோம் கணப்பெருமக்களோம்

*இக்கல்வெட்டு முற்காலச் சோழர் வரலாற்றுக்கு முக்கியமானது. சோழ மன்னர் முதலாம் ஆதித்தன் பல்லவமன்னர் அபராசிதனை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றியது குறித்து திருவாலங்காடு செப்பேடு கூறுகின்றது. முதலாம் ஆதித்தரின் தக்கோலக் கல்வெட்டும் இதனை உறுதி செய்கின்றது. ஆதித்த சோழர் கி.பி. 871 முதல் கி.பி. 898 வரை சுமார் 27 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவரது மைந்தர் முதலாம் பராந்தகன் கி.பி. 907ல் ஆட்சிக்கு வந்தார். இடைப்பட்ட காலத்தில் கி.பி. 898 முதல் 907 வரை எந்த அரசரின் கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பிரம்மதேசம், கப்பலூர், செண்டத்தூர் கிராமங்களில் கிடைக்கும் கல்வெட்டுகள் அரசன் பெயரைக் குறிக்காமல் சக வருடம் என்றே துவங்குகின்றன. இவற்றின் காலம் சக வருடம் 826-830 (கி.பி.904-908). இந்த இடைப்பட்ட காலத்தில் இருந்த குழப்பமான அரசியல் நிலை பற்றி அறிய இக்கல்வெட்டுகள் பயன்படும்.*

---

1 *இந்தியக் கலவெடடு ஆண்டறிக்கை* 1915. எண் 228

# 4. பூந்தோட்டம் வாலீஸ்வரர்கோயில் கல்வெட்டுகள்

*இல. தியாகராஜன், அரியலூர்;*
*இரா. தனபால், காஞ்சிபுரம்.*

விழுப்புரம் பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதி பூந்தோட்டம் என அழைக்கப்படுகிறது. இங்கு வாலீஸ்வரர்கோயில் என்னும் சிவன்கோயில் உள்ளது. இக்கோயிலைப் பற்றி கு. தாமோதரன் தனது *விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு* என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கோயிலில் ஆறு கல்வெட்டுகள் உள்ளன. இவற்றின் பாடம் எதுவும் வெளியிடப்படவில்லை. மூன்று கல்வெட்டுகள் முதல் ராஜராஜன் காலத்தவை. ஒரு கல்வெட்டு முதல் ராஜேந்திரனுடையது. விக்கிரமசோழனின் 2 கல்வெட்டுகளில் ஒன்று முற்றுப்பெறவில்லை. அது தவிர ஏனையவை இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் மூன்று மட்டும் மையஅரசு கல்வெட்டுத்துறையால் 1947-48ல் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஒரு கல்வெட்டு இராஜகேசரிவர்மனின் 21ம் ஆண்டினது என்று அறிக்கை குறிப்பிடுகிறது. எனவே, இதனை முதல் ஆதித்தசோழனுடையது என்று கருதி இக்கோவிலும் இம்மன்னர் காலத்தது என்று கு. தாமோதரன் கருதுகின்றார். ஆனால், ஆட்சியாண்டு 4 என்று தெளிவாக உள்ளது. மேலும், கல்வெட்டின் எழுத்து அமைதியும் இங்குள்ள ராஜராஜனின் பெயர்கொண்ட 8, 13ஆம் ஆண்டு கல்வெட்டுக்களை அப்படியே ஒத்துள்ளது. எனவே, கோயில் இம்மன்னருடைய காலத்தது எனலாம். சிற்ப, கட்டட அமைப்புகளும் இதை உறுதி செய்கின்றன.

கல்வெட்டுகள் இவ்வூரை வடகரை பிரம்மதேயம் நிருபதொங்க செயந்தாங்கி சதுர்வேதிமங்கலம் என்றும், கோயிலை திருவாலீஸ்வரத்துப் பரமசுவாமிகோயில் என்றும் கூறுகின்றன. இதனால் இவ்வூர் நிருபதுங்க பல்லவ மன்னரின் காலத்தில் ஏற்பட்டது எனலாம். முதலாம் ராஜேந்திரனின் கல்வெட்டு இவ்வூர்ப் பெயரை ஸ்ரீ ஜனநாத சதுர்வேதிமங்கலம் என்று குறிப்பிடுகின்றது.

## 4.1

இடம் : அர்த்த மண்டபத் தென்சுவர்.
காலம் : இராஜகேசரிவர்மன் (முதலாம் இராசராசன்) யா:4, (கி.பி. 989).
இ.க 1947-48, எண். 36.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பந்மர்க்கி யாண்டு

2 4-ஆவது[1] வடகரை ப்ரஹ்மதேசத்து ந்ருபதொங்க
3 செயந்தாங்கி சதுர்வேதி மங்கலம் யாளுங்க
4 ணத்தாருள் ஏநூர் திருவேங்கட க்ரமவித்துநும்
5 ஏநூர் இருஷிகேசவ க்ரமவித்தநும் இவ்விருவோம் நி
6 ல விலை ஆவணம் இவ்வூர் ஸ்ரீ திருவாலீச்வரத்து ப
7 ரம ஸ்வாமிகளுக்கு நாஙகள் விற்றுக் குடுத்த நில
8 மாவது இவ்வூர் ஸ்ரீதர வதிக்கு கிழக்கு [ஸந்த்ரமதிஷ]
9 வாய்காலுக்கு தெற்கு மூன்றாங்கண்ணாற்று
10 ஏழாஞ்சதுக்கத்து கிழக்கடைய நாலு செறுவு
11 ம் எட்டாம் சதுக்கத்து மேற்கடைய நாலே கால் செ
12 றுவும் ஆக எட்டே கால் செறுவிலும் உள்ள துரவும் இத்துரவுகளில்
13 மேனோக்கின மரமும் இங்கே ஏழாஞ் சதுக்கத்து கண்ணாற்று ஏழாந்துண்
14 டச் சதுக்கத்து வடக்கடைய இரண்டு செறுவும் எட்டாந் துண்டச் சதுக்கத்தும் வ
15 டக்கடைய காலே அரைக்கால் செறுவும் எமப்பனால் விலை கொண்டுடைராய் எங்கள்
16 ...ந் பத்து செறுவும் நாங்கள் விலை கொண்டுடைய அரை ஏ அரைக்காற் செறுவும் ஆக ஸ
17 பையார் பக்கல் விலை கொண்டுடைய ஆயிரத்து அறுபத்து இரண்டரை குழியால் வந்த பத்த
18 ரையே அரைக்காற செறுவும் விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம் இருகாலாவது
19 முக்காலாவது இச்சுட்டின பத்தரையே யரைக்காற் செறுவும் விற்றுக் குடுத்து நாங்
20 கள் கொள்ளவுடைய எம்மிலிசைந்த ... நாற்பத்திரு கழஞ்சேகாற் பொன்னு[2]

## 4:2

இடம் : *கருவறைத் தென்சுவர்*
காலம் : *முதலாம் இராஜராஜன் யா: 8, (கி.பி. 993).*

*இ.க.* 1947-48, எண். 37

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜராஜகேஸரிப
2 ந்மர்க்கு யாணடு 8-ஆவது வேசா
3 விப்பாடி வடகரை வாகூர் நாட்டு

4 ச்சிக்கர் சிக்கருடையான் பெருஞ்

5 சாமன் புலியன் மாதேவ

6 ன் வடகரை ப்ரஹ்மதேயம் நி

7 ருப தொங்கச் சயந்தாங்கிச் ச

8 துர்வேதிமங்கலத்து

9 திருவாலீச்வரமுடை

10 ய பரமஸ்வாமிக்குச் சந்த்ராதி

11 த்தவல் வைத்த நுந்தா விள

12 க்கு ஒன்றிநால் நிறை 90-தொ

13 ண்ணூறு நிலை விளக்கு ஒன்

14 று

## 4:3

*இடம் : கருவறை வடசுவர்*
*காலம் : முதலாம் இராஜராஜன், யா:13, (கி.பி. 998).*

1 ஸ்வஸ்திஸ்ரீ காந்தளூர் சாலை கல

2 மறுத்த கோவிராஜராஜகேசரி பந்மர்க்கு

3 யாண்டு 13 ஆவது வடகரை ப்ரஹ்மதேயம்

4 நிருபதுங்க சயந்தாங்கி சதுர்வேதி

5 மங்கலத்து மஹாஸபையோம் விற்று

6 க்குடுத்த நிலவிலையாவணம் ஆர்க்காட்டு

7 க்கூற்றத்துப் பேரரைசூருடையான்

8 உதைய திவாகரனான அருமொழி மூவேந்த

9 வேளார் எங்களூர் நடுவில் ஸ்ரீகோயிலில்

10 கந்மார்ச்சனை கொள்ள எழுந்தருளுவி

11 த்த கந்மாச்சனையாளவார்க்கு நாங்

12 கள் விற்றுக்குடுத்த நிலமாவன இவ்

13 வூர் தென்பிடாகை அறிவாளவதிக்கு மே

14 ற்கு ஸ்ரீதேவி வாய்க்காலுக்கு தெற்கு நா

15 லாங் கண்ணாற்று நாலாஞ் சதுக்கத்து தெ

16 ற்கடைய இருநூற்றைம்பது குழியா

17 ல் வந்த இரண்டரைச் செறுவும் இச்செ

18 ... . ..

19 து வடக்கடைய இருநூற்றைம்பது குழியால் வந்த இரண்டரை செறுவும் இங்கே ஏழாஞ் சதுக்கத்து வடக்கடைய

20 நானூற்றைம்பது குழியால் வந்த [நால]ரைச் செறுவும் இங்கே எட்டாஞ் சதுக்கத்து வடகிழக்கடைய நூற்றைம்

21 பது குழியால் வந்த ஒன்றரைச் செறுவும் இங்கே மூன்றாங் கண்ணாற்று பதினாலாஞ் சதுக்கத்து கிழக்கடைய இருபத்

22 தைஞ்சு குழியால் வந்த கால்செறுவும் இங்கே.. பதிமூன்றாஞ் சதுக்கத்து மேற்க

23 டைய... இருபத்தைஞ்சு குழியால் வந்த கால் செறுவும் சங்கரவதிக்கு மேற்கு ஸ்ரீ

24 தேவி வாய்க்காலுக்கு தெற்கு ஐஞ்சாங் கண்ணாற்று முதற் சதுக்கத்து தெற்கடைய எழுநூற்றைம்பது குழியா

25 ல் வந்த ஏழரைச் செறுவும் இங்கே இரண்டாம் சதுக்கத்து தெற்கடைய எழுநூற்றைம்பது குழியால் வந்த ஏ

26 ழரைச் செறுவும் அறிவாள்வதிக்கு மேற்கு கமல நாராயண வாய்க்காலுக்கு தெற்கு முதற் கண்ணாற்று ஏழாஞ்சது

27 க்கத்து வடக்கடைய ஐஞ்நூறு குழியால் வந்த ஐஞ்சு செறுவும் ஆக ஆறாயிரத்தைஞ்நூற்று ஐம்பது

28 குழியால் வந்த அறுபத்தஞ்சரை செறுவும் விற்றுவிலையாவணம் செய்து குடுத்தோம் எங்க

29 ளூர் கந்மாச்சனையாள்வார்க்கு மகாசபையோம் இருகாலாவதும் முக்காலாவதும் இவ்வாறாயிரத்தைஞ்நூற்று ஐம்பது குழியால் வந்த அறுபத்து ஐஞ்சரைச் செறுவும் விற்று விலையாவணஞ்செ

30 ய்து குடுத்தோம்

## 4:4

இடம் : *கருவறைத் தென்சுவர்*
காலம் : *முதலாம் இராசேந்திரன், யா:3; (கி.பி. 1015)*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்தமராந ஸ்ரீரா

2 ஜேந்த்ர சோழ தேவர்க்கு யாண்டு 3-வது ஜயங்கொண்ட

3 சோழ மண்டலத்து ப்ரஹ்மதேயம் ந்ருபதுங்க ஜயந்தா

4 ங்கிச் சதுப்பேதிமங்கலமான ஸ்ரீ ஜநநாதச்சது

5 ர்வேதிமங்கல மியாளுங்கணத்தாருள் அரைகூர்

6 விஷ்ணுப்ருந்த நாராயணன்சோலையுமிவன்

7 தம்பி நாராயணன் தத்தனு மிவன் தம்பி நாரா

8 யணன் திருமாலிருஞ்சோலையும் இம்மூவோ

9 ம் நிலவிலையாவணம் இவூர் தேவர் திருவாலீ

10 ச்வர பரமஸ்வாமிகளுக்கு நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவது இவ்வூர் ஸ்ரீத

11 குஸந்த்ரமதிஷ்ட வாய்க்காலுக்குத் தெற்கு 2 ஆங்கண்ணாற்று

12 ஆறாஞ் சதுக்கத்துத் தெற்கடைய நாங்கள் விலையுடை...

13 வந்த நாலு செறுவும் இச்சதுக்கத்தே நாங்கள் இவ்வூர் யாளுங்கணத்தாருள் வங்கிப்புறத்து

14 ... லியடி க்ரமவித்த ஸோமயாஜி

15 யார் பக்கல் விலையுடைய 400 குழியால் வந்த நாலு செறுவும் ஆக 800 குழியால் வந்த எட்டுச் செறுவும் விற்று விலையாவணஞ் செய்து

16 குடுத்தோம் திருவாலீச்வரத்து பரமஸ்வாமிக்கு நாராயணன் சோலையும் இவன் தம்பிமாரும் இவ்வனைவோம் இருகாலாவது முக்காலா

17 வது மிவ்வெட்டுச் செறுவும் விற்று விலை ஆவணஞ் செய்து குடுத்துக் கொள்ளவுடைய எம்மில்லிசைந்த விலைப்பொருள். . ஆவணக்களியே கைச்

18 செலக் கொண்டு இதுவே பொருள்மாவறுதி பொருட்செலவோலை

## 4:5

*இடம் : கருவறை மேற்கு சுவர்*
*காலம் : விக்கிரமசோழன், யா:5; (கி.பி. 1123).*

1 ஸ்வஸ்திஸ்ரீ திருபுவநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு அஞ்சாவது கங்கை கொண்ட

2 சோழவளநாட்டு பனையூர் நாட்டு வாவலூர் நாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீ ஜெநநாதச் சதுர்வேதி மங்கலத்து திருவாலீச்வ

3 ரமுடைய மகாதேவர் கோயிலில் சிவப்ராஹ்மணரோம் ராஜராஜப் பாண்டி நாட்டு ராஜேந்திர சோழ வளநாட்டு முத்தூற்று கூற்றத்து

4 ... ... ...

5 நுந்தா விளக்கு சந்த்ராதித்தவற் எரிக்க கடவோமாக கொண்ட காசு எட்டு இக்காசு எட்டும் கொண்டு நுந்தா விளக்கு ஒ

6 ன்றும் எரிக்க கடவோமானோம் இக்கோயில் சிவப்ராமண... வெண்காடுதேவந் எடுத்த பாதம் உள்ளிட்டோ

7 ம் இக்குடியில் தழுவக்குழைஞ்சான் உள்ளிட்டோம் இவ்வனைவோம் இக்கோயில் படி கடந்து புக்காரே எரிக்க கடவநார் இத்தேவ

8 ர்கன்மி சண்டேச்வர தேவர்க்கு தீட்டு குடுத்தோம் இச்சிவ

பிராமணரோம் இவர்கள் சொல்ல எழுதிநேன் இக்கோயிலில் தவஸி
ஆட்கொண்

9 டாநேந் இவை எந் எழுத்து பந்மாஹேச்வர ரக்ஷை

---

1 ஆண்டறிக்கையில் ஆட்சியாண்டு 21 என உள்ளது

2 முற்றுப்பெறவில்லை

# 5. பாலேகுப்பம் கல்வெட்டுகள்

*ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்;*
*ப. பூபாலன், இராணிப்பேட்டை.*

## 5:1

இடம் : வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பாலேகுப்பம் என்னும் ஊரில் பெரிய களத்து பாறையில்[1].

காலம் : முதலாம் இராசராசன், யா: *25*, (கி.பி. *996*).

செய்தி : *அரசனது வாய்மொழி ஆணைப்படி நிலக்கொடை வழங்கப்பட்டுள்ளது. நடுவிருக்கை அதிகாரியும், பண்டாரப் பொத்தகம், திருமெய்க்காப்பார், திருப்பள்ளித் தொங்கல், கோயில் கணக்கு முதலிய அலுவலர்களும் குறிக்கப் பட்டுள்ளனர்.*

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை

2 மனக் கொளக் காந்தலூர்ச் சாலைக் கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியும் நுளம்

3 பபாடியுந் தடிகை வழியுங் குடமலை நாடும் கொல்லமுங் கலிங்கமு மெண்டிசை புகழ்தர ஈழமண்டலமு

4 இரட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தந்னெழில் வளரூழியுள் எல்லாவியாண்டுந் தொழுந்தெழில்வி

5 ளங்கும் யாண்டேய் செழியரை தேசு கொள்... ந்மராந ஸ்ரீராசராச தேவற்கு யாண்டு 25வது உடையார் ஸ்ரீராசராச தேவர் காணி

6 செய்து குடுக்கவென்றுத் திருவாய்மொழிந்தருள நடுவிருக்கைக்க... திரு வெண்காடபட்டரேவலாலு[ம்] துணாயகஞ் செய்கின்ற அழிஞ்சில் பாக்கமுடையான்

7 கண்காணியாலும் திருமெய்காப்பாரும் திருப்பள்ளி தொங்கலுடை ...ட்டர்கன்மி கோயிற் கணக்கரும் கோயிற் தச்சர் கோலளவிநாலும் சயங்கொண்

8 ட சோழ மண்டலத்து படுவூர் கோட்டத்து பெரும் பாணப்பாடித் தூய் [னாட்டு] ணாகல்வளையிற் சுற்றும் [முற்றும் நிலம்] பண்டாரப் பொ[த்தகமுடையான்]

9 கன்னாடுடைய அத்திவிசையித்தநும் தம்பிமாருங் கண்டன் மறவனும்

10 இவர்கள் வஞ்சி ஏத்தங்குழி எண்ணூறு இவர்கள் மு...க மாயிலெட்டிெ...

11 ணன்டி கண்ணாறு குழி ஆயிரம்...

12 பாங்குடையாந் தண்டன் முக்கணன் கண்டு கநெதங்

13 குழி எண்ணூறு இவன் பருமைக் கண்ணாறு குழி

14 ஆயிரம்

## 5:2

இடம் : வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பாலே குப்பம் என்னும் ஊரில், போட பாறையில் வெட்டப்பட்ட உரல்.


காலம் : கி.பி. 19 – நூற்றாண்டு.

செய்தி : பாலே குப்பத்தைச் சேர்ந்த துரயூரன் என்பவர் அமைத்துக் கொடுத்த உரல். 132 செ.மீ. வெளிச்சுற்றளவும், 44 செ.மீ உள் சுற்றளவும், 20 செ.மீ ஆழமும் கொண்டதாக உரல் வெட்டப்பட்டுள்ளது.

1 விய வருஷ கார்த்திக 15

2 துரயூரன் பாலெ குப்பம்

3 வெட்டி விச்ச உரல்



படம் 5:1. பாலேகுப்பம். முதலாம் இராசராசன் கல்வெட்டு.

1. இவ்வூர்க் கல்வெட்டு ஆய்வின் போது உதவி புரிந்த மேல் விஷராம்அப்துல் அக்கீம் கல்லூரி, ஆய்வு மாணவர் சி. இராசேந்திரன் அவர்களுக்கு நன்றி

# 6. ஏம்பலம் செக்குக் கல்வெட்டு

எம். நம்பிராசன், சென்னை.


இடம் : செஞ்சி வட்டம், ஏம்பலம் ஊரில் பழைய நத்தப் பகுதியில் உள்ள செக்கு. (படம் 6:1).

காலம் : 8–9 ஆம் நூற்றாண்டு

1 ஸ்ரீ[நொ]ப்பிக்கலி

2 ஏறாழி மகன்

3 மாதேவன் செக்கு



படம் 6:1. ஏம்பலம், செக்குக் கல்வெட்டு.

# 7. விழுப்புரம் மாவட்டத்தில் அண்மைக் காலத் தொல்லியல் கண்டுபிடிப்புகள்

*சி. வீரராகவன், மங்கையர்கரசி, விழுப்புரம்.*

## 7:1

**அரிய மூதேவி சிற்பம்** *(படம் 7:1).*

இடம் : *விழுப்புரம் வட்டம், அகரம் சித்தாமூர்.*

காலம் : *8–9 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *99 செ.மீ. உயரம், 72 செ.மீ. அகலம் உள்ள பலகைக் கல்லில் புடைப்பாக கருக்கப்பட்டுள்ளது. பிற்காலப் பல்லவர் கலை நயத்தைக் கொண்ட இம்மூதேவி கால்களை அகற்றி ஆசனத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கிறாள். தலையை கரண்ட மகுடமும், காதுகளை குண்டலமும், கழுத்தை தடித்த ஆபரணமும், தோள்களை வாகு வளையங்களும், இடைமுதல் பாதம் வரை ஆடையும் அலங்கரிக்கின்றன. வலக்கரம் தொடையிலும், இடக்கரம் கலசத்தின் மீதும் தங்கியுள்ளன. தேவியின் வலப்புறம் காக்கைக் கொடியுள்ளது. அருகில் மாந்தன் வலக்கரத்தில் கதாயுதம் ஏந்தியும், இடக்கரத்தை உயர்த்தி நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளான். இடப்புறம் மாந்தி வலக்கரத்தில் மலர்ச் செண்டு ஏந்தி, இடக்கரம் இடையில் தங்கியும் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளாள். மாந்தியின் தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது[1].*

## 7:2

**மூதேவி சிற்பங்கள்** *(படம் 7:2).*

இடம் : *கள்ளக்குறிச்சி வட்டம், சோமண்டார்குடி சோமீசுவரர் கோயில்.*

காலம் : *8–9 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *சோமீசுவரர் கோயில் மேற்குத் திருச்சுற்றுச் சுவரையொட்டினாற் போல் வடமேற்கு மூலையில் இருபலகைக் கற்களில் மூதேவி சிற்பங்கள் புடைப்பாக கருக்கப்பட்டுள்ளன. வலது பக்கம் காணப்படும் மூதேவி சிற்பத்தில் வலது பக்கம் மாந்தன் வலக்கரத்தில் கதாயுதத்துடன், மூதேவியைப் பார்த்த வண்ணம் நிற்கின்றான். இடது பக்கம் மாந்தி வலக்கரத்தில் மலர்செண்டு ஏந்தி நிற்கிறாள். வழக்கமாக இச்சிற்பத்*



7:1



7:2




7:3



7:4



7:5



படம் 7:1. அகரம் சித்தாமூர், மூதேவி சிற்பம்; 7:2. சோமாண்டார்குடி சோமீசுவரர் கோவில், மூதேவி சிற்பங்கள்; 7:3. கொண்டங்கி, ஐயனார்; 7:4. செண்டியம்பாக்கம், ஐய்யனார்; 7.5. சித்திலிங்கமடம், கொற்றவை; 7:6. சோமாண்டார் குடி, முதல் பராந்தகன் கல்வெட்டு.

தொகுதியில் காட்டப்படும் ஆயுதங்களான துடைப்பமும், காக்கைக் கொடியும் ஸ்தம்பத்தில் காட்டப்பட்டுள்ளன. வலது பக்கம் தேவியின் வாகனமான கழுதை காட்டப்பட்டுள்ளது ஓர் சிறப்பம்சமாகும். இடது பக்கம் நாகம் படம் எடுத்து சீறுவது போல் பீடத்திலும் மாந்தியின் தலையருகேயும் காட்டப்பட்டிருப்பது பல்லவர் கலை நயத்தை வெளிப்படுத்துகின்றது. இச்சிற்பத்திற்கு அருகே காட்டப்பட்டுள்ள மற்றோர் மூதேவி சிற்பம் முற்கால சோழர் காலத்தைச் சார்ந்தது. இதில் மூதேவி, மாந்தன், மாந்தி மூவரும் சுகாசனத்தில் அமர்ந்துள்ளனர்.

## 7:3

***அய்யனார் சிற்பம்** (படம் 7:3).*

இடம் : விழுப்புரம் வட்டம், கொண்டங்கி கிராம ஏரியின் மையப்பகுதி.

காலம் : 6–7 ஆம் நூற்றாண்டு.

செய்தி : 90 செ.மீ. உயரம், 85 செ.மீ. அகலம் உடைய செவ்வக வடிவ பலகைக் கல்லில் புடைப்பாக கருக்கப்பட்டுள்ளது. இது முற்காலப் பல்லவர் கலை நயத்திற்குச் சான்றாக உள்ளது. அய்யனாரின் வலது பக்கம் குதிரையும், இடது பக்கம் மதுக் கிண்ணத்தை வலக்கரத்தில் ஏந்தி, அமர்ந்த நிலையில் பெண் உருவமும் காட்டப்பட்டுள்ளன. அய்யனாரின் காலடியில் பாய்ந்து ஓடும் நாய் உருவமும், அதற்கு முன் மதுக்கலயம் ஒன்றும் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. சிற்பத்தின் விளிம்புப் பகுதியில் கரடு வெட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் சிற்பத்தை ''குறவன் சாமி'' என்று அழைக்கின்றனர்[4].

## 7:4

***அய்யனார் சிற்பம்** (படம் 7:4).*

இடம் : திண்டிவனம் வட்டம், செண்டியம்பாக்கம் திரு. சுந்தர ராமானுஜ ரெட்டியார் வயல்வெளி.

காலம் : 6–7 ஆம் நூற்றாண்டு.

செய்தி : 140 செ.மீ. உயரமும், 80 செ.மீ. அகலமும் உடைய கற்பலகை. அய்யனார் சிற்பம் ஆகம விதிப்படி புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் தமிழகத்தில் கிடைத்துள்ள அய்யனார் சிற்பங்களில் இச் சிற்பமே மிகவும் உயரமானது. இவ்வய்யனார் பாதங்களுக்கு கீழ் 22×10 செ.மீ பரப்பில் கொற்றி எனத் தொடங்கும் இரண்டு வரிக் கல்வெட்டு சிதைந்த நிலையில் காணப்படுகின்றது[5].

## 7:5

***கொற்றவை சிற்பம் (படம் 7:5).***

இடம் : *திருக்கோவிலூர் வட்டம், சித்திலிங்கமடம், தெற்கு மேடு, இராசு உடையார் காடு.*

காலம் : *6–7 ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *நீண்டசதுர கற்பலகையில் அழகிய மான் வாகனத்தின் முன் எருமைத் தலைமீது எட்டுக்கரங்கள் கொண்ட கொற்றவை சமபங்க நிலையில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றாள். இடது பக்கம் சிங்கத்தின் தலை காட்டப்பட்டுள்ளது. ஆறு கரங்களில் வழக்கமான ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. முன் வலக்கை அபய முத்திரையுடனும், இடக்கை ஊரு அஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. தலை முடி, ஆடை ஆபரணங்கள் யாவும் முற்காலப் பல்லவர் கலை நயத்துடன் காட்டப்பட்டுள்ளன. கொற்றவையின் இடதுபுறத்தில் மகிஷன் தலையருகே 6 வரிகளில் வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ளது. பக்கத்திலுள்ள ஏரித்தூம்பு அமைத்தது பற்றி இருக்கலாம். கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.*

| | |
|---|---|
| 1–3 ... | 5 ல்லையனி |
| 4 புலி[ர்]ம | 6 ர் தூம்பு |

## 7:6

**கல்செக்கு**

இடம் : *விழுப்புரம் வட்டம், விழுப்புரத்திற்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள காணை.*

காலம் : *9–ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *கல் செக்கு 98 × 75 செ.மீ. சதுரப் பரப்பில் நீள் வட்டக் கருங்கல்லினால் ஆனது. விளிம்பில் வட்டெழுத்துகளில் கல்வெட்டு உள்ளது. ஏழ்திசையாயிரத்தார் என்னும் வணிகக் குழுவினர் கணையம் என்னும் ஊரில் கல்செக்கு அமைத்து இருக்கின்றனர். கணையம் என்பதுதான் தற்போது காணை என்று மருவி அழைக்கப்படுகின்றதோ என்ற ஐயம் எழுகின்றது[4].*

1 ... யக்க நன்றெடு[செய] ஏழ்திசையாயிரத்து

2 கணையம் கல்பெருஞ்செக்கு

## 7:7

**சோமண்டார்குடி முதல் பராந்தகன் கல்வெட்டு** *(படம் 7:6).*

இடம் : *கள்ளக்குறிச்சி வட்டம், சோமண்டார் குடி சோமீசுவரர் கோயில் திருச்சுற்றுச் சுவரின் அருகே அமைந்துள்ள சிறிய கற்பாறை.*

காலம் : *முதலாம் பராந்தகன் யா:10, (கி.பி. 917).*

செய்தி : *மிலாடு நாட்டில் பாலூர் கூற்றத்தில் பாலூரில் அமைந்துள்ள சோமீசுவரம் ஆலயத்தில் வீற்றிருக்கும் சோமீசுவரர்க்கு பறை கொட்டுவதற்காக, அப்போதைய அரசு அதிகாரி அழிசுகடையார் கங்கசிகாமணியின் மாதேவியான அண்ணா வள்ளத்தி மல்லி என்பார் பொற்கழஞ்சு கொடுத்தது.*[5]

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பருமற்கு யாண்டு ப

2 த்தாவது மிலாட்டு பாலூர் கூற்றத்து பாலு

3 ர் திருச்சோமீச்சுவர்க்கு அழிசு கடையார் கங்க சிகாம

---

1. தகவல் தந்து உதவிய மருத்துவர் திரு சி மா பாலதண்டாயுதம், திரு சி.மா பாலகணேசன், வழக்குரைஞர் திரு த கண்ணன் ஆகியோருக்கு நன்றி.

2. தகவல் தந்து உதவிய திரு முகமது ஷேக் காசிம் அலி, விழுப்புரம் அவர்களுக்கு நன்றி

3. தமிழகத் தொலலியலதுறை முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் திரு. சு இராசகோபால் உடன கலந்து இதன காலம் கணிககப்பட்டது.

4 தகவல கொடுதத திரு சேதுராமன், ஆசிரியர், கோஹுர் மற்றும் ஓவிய ஆசிரியர் திரு கஜேந்திரன, காணை அவர்களுக்கு நன்றி சரியான கல்வெட்டுப் பாடம் வாசிக்க உதவிய திரு நடன காசிநாதன அவர்களுக்கு நன்றி

5 தகவல தந்து உதவிய ஆசிரியா ஏ தங்கவேல், சோமீஸ்வரா கோவில் அறங்காவலர் மற்றும் கோயில் குருக்கள், கலவெட்டுப்படிக்க உதவிய முனைவர் சு இராஜகோபால், முதுநிலை கலவெட்டு ஆயவாளர், தமிழகத் தொல்லியல துறை, சென்னை, முனைவர் வெ வேதாசலம், மதுரை ஆகியோர்களுக்கு மிகக நனறி

# 8. அத்தித்தாங்கல் கல்வெட்டு

**கி. குமார், சென்னை.**

இடம் : வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், அத்தித்தாங்கல் கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள மலைமீது எழுந்தருளியுள்ள பொன்னியம்மன் கோயிலுக்கு மேற்குப் பகுதியில் கன்னியம்மன் கோயிலின் எதிரே அமைந்துள்ள சுனை அருகில் உள்ள பாறையில் இக்கல்வெட்டு வெவ்வேறு கோணங்களில் மூன்று பகுதிகளாக அருகருகே செதுக்கப்பட்டுள்ளது.

காலம் : 10ம் நூற்றாண்டு.

செய்தி : செய்தி தெளிவாக இல்லை 'சம்புவரய' என்று சொல் சம்புவராயர் பற்றிய பழைய குறிப்பாகக் கருதலாம்

பகுதி 1

1 சம்புவ
2 ரயபடை
3 சந்தும்பு
4 கநகப்புடி
5 நமஸ


பகுதி 2

1 கைல்ல
2 சரண
3 நதசரந
4 ாத...
5 கெ...
6 ...குல

பகுதி 3

1 ஊச்சதசாடி
2 யிலாட

இக்கல்வெட்டுகளைத் தவிர கீழ்க்கண்ட சில குறியீடுகளும் கல்வெட்டுக்களில் அருகே செதுக்கப்பட்டுள்ளன.



# 9. காளியாம்பட்டி அய்யப்பொழில் ஐந்நூற்றுவர் கல்வெட்டு

நாக. கணேசன், கரூர்.

இடம் : திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம் காளியாம்பட்டி கிராமத்தில் நத்தக்காட்டுக்கருகிலுள்ள அம்மன் கோயிலின் முன்புறம், மூன்று வீதிகள் சந்திக்குமிடத்தில் நடப்பட்டுள்ள செவ்வக வடிவிலான கல் (130 X 54 செ.மீ).

காலம் : சுமார் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு.

செய்தி : மேல் மையப்பகுதியில் பசும்பைக்கட்டும் அதன் இருபுறமும் சாமரமும் விளக்கும் உள்ளன. பசும்பை கட்டுக்குக் கீழ் திரிசூலமும், அதன் வலதுபுறம் வாள், கேடயம், வில், விளக்கு ஆகியவையும் இடதுபுறம் அரிவாள், தகட்டுச்சுருள் (சாட்டை) சுத்தியல் ஆகியவையும் உள்ளன. இச்சிற்பங்களின் கீழே தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்கள் கலந்த கல்வெட்டு அய்யப் பொழில் ஐந்நூற்றுவர் பற்றிக் கூறும் மெய்கீர்த்திப் பகுதியாகும். வடமொழிப்பகுதி மட்டும் உள்ளது. முற்றுப் பெறவில்லை(?).

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ஸமஸ்தி பு$_4$வ

2 நாச்$_0$ரய பஞ்சத த$_3$ச$_0$வீ

3 ர ஸாத$_4$நம் லக்ஷுமி வி

4 ங்கி$_3$த வக்ஷஸ்தல பு$_4$வந

5 பராக்$_3$ராஜித வாஸுதே$_3$

6 வக$_2$க மூலப$_4$த்ரோப$_4$

7 வ: ஸ்ரீப$_4$ஷ்டாரகி மக்க

8 ளாகிய அய்ய பொழி

9 ல் அ[ஞ்]*ஞூற்றுவர்

---

* கலவெட்டினைப் படித்தளித்த முனைவர் சு. இராசகோபால், படியெடுக்க உதவிய ஆமூர் உயர்நிலைப்பள்ளி மாணவன் ஜெ. லெனின், கரூர் தொல்லியல்துறையின் பெ. மோகன் ஆகியோருக்கு நன்றி

# 10. ஐந்நூற்றுவர் செக்குக் கல்வெட்டு

நாக. கணேசன், கரூர்.

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வெள்ளியணை கிராமத்திலுள்ள நத்தமேட்டுப் பகுதி


காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு.

செய்தி : இங்கு மூன்று செக்குகள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இச்செக்கு 90 செ.மீ விட்டம் கொண்ட ஒழுங்கற்ற வட்டமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. பூமிக்கு மேல் 41 செ.மீ. உயரம் கொண்டதாக உள்ளது. செக்கின் வாய்ப்பகுதி 21 செ.மீ. விட்டமும், 40 செ.மீ. ஆழமும் கொண்டுள்ளது. இவ்வாய்ப் பகுதியைச் சுற்றி சுருள் வடிவில் இரண்டு வரிகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மாஹாதேவற்க்கு அஞ்ஞூற்றுவர் இடுவிச்ச

2 செக்கு





படம் 9:1. காளியாம்பட்டி, அய்ப்பொழில் ஐந்நூற்றுவர் கல்வெட்டு.

படம் 10:1. வெள்ளியணை, ஐந்நூற்றுவர் செக்குக் கல்வெட்டு.

---

* தகவல் அளித்த தாளியாப்பட்டி புவனேந்திரன் மற்றும் ஒளிப்படம் வழங்கிய கரூர் பரணன் ஆகியோருக்கு நன்றி.

# 11. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள்

கரு. இராசேந்திரன், மேலப்பனையூர்.

## 11:1

இடம் : குளத்தூர் வட்டம், அம்மாசத்திரம் குடகுமலையின் தென்புறமுள்ள இயற்கைக் குகைத்தளத்தில் தென்கிழக்கிலுள்ள சமணப்படுக்கைக்கு தெற்கிலுள்ள பாறை.


காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு.

செய்தி : சிறுவாயில் நாட்டு நீர்பழனியுடையான் திருப்பள்ளி மலையிலுள்ள சமணக்கோவிலுக்கு ஏழுநாள் திருவிழா செய்வதற்கு பொடுகாரிவயலில் நிலக்கொடை கொடுத்தது.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி ப
2 ன்மற்கி யாண்டு 5வது வடசி
3 றுவாயினாட்டுத் திருப்பள்ளிம
4 லை ஆழ்வார்க்குத் திருவிழா எழுநா
5 ளுங் கோட்டி செய்ய மீய்செங்கிளி
6 னாட்டு நல்லூரில் தியாடிகாரி இரண வ
7 யிரவனான திருப்பள்ளிமலை
8 ......க்குப் பொடுகாரி நல்லூரி வ
9 யலில் நீர்ப்பழனியுடையான் வ
10 யக்கின குடும்பு ஒன்றும் [ப] றம்
11 புபோன நிலம் உட்பட சந்திரா
12 தித்தவல் நிறகச் செய்து குடுத்
13 தேன் இககுளமும் வயலும்
14 . இவ்வூர்குடி ... ற. .த்தன்
15 . ரை யூரா சாற்றி பன்...

## 11:2

இடம் : குளத்தூர் வட்டம், வாகவாசல், சிவன்கோவிலுக்கு தெற்கிலுள்ள ஒரு சிறிய குளத்திற்குள் நடப்பட்டுள்ள பலகைக் கல். (படம் 11:1)





படம் 11:1. வாகவாசல், இராசகேசரி கல்வெட்டு; 2. மாதராபட்டி, கல்வெட்டு.

காலம் : *10ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *வெள்ளை நல்லூருடையான் தாழிகண்டன் செம்பியன் சிறுவாயி நாட்டு மூவேந்தவேளான் குளமங்கல பெரிய குளத்துக்கும் பூலாங்குளத்துக்கும் குளப்பட்டி செய்தமை.*[1]

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 கோஇராசகேசரி பன்மற்
3 கு யாண்டு 4ஆவது வடசி
4 றுவாயி னாட்டு வெள்ளை நல்லூ
5 ருடையான் தாழிகண்டன்
6 செம்பியன் சிறுவாயினாட்டு
7 மூவேந்த வேளான் குளமங்கல
8 நாட்டு பெருவிலைப் பெரியகுள
9 த்துக்கும் பூலாங்குளத்துக்குங்
10 சந்திராதித்தவல் நிற்க்க குளப்ப
11 ட்டி ஆக இவ்வூர் ஸபை$_4$ஓம் கை
12 வ்வழி பெரியகுளத்துக்கு வைத்த
13 நெல்லு 30கலம் பூலாங்குளத்து
14 க்கு வைத்த நெல்லு 10கலம் ஆக நெ
15 ல்லு 50 ஐம்பதின் கலத்திலும்
16 பலிசை ஆட்டை வட்டம் பதின்கல
17 நெல்லால் குழி கல்லுவிப்போமானோ
18 ம் ஸபை$_4$ஓம் இத்$_3$த$_4$ர்மம் இவ்வூரா
19 ளுங் கோவின் ரகைஷ உ

## 11:3

இடம் : *இலுப்பூர் வட்டம், மாதராபட்டி, ஊரின் வடபுறமுள்ள ஊருணித் தென் படித்துறைக்கு அருகில் கிடக்கும் தூண். (படம் 11:2)*

காலம் : *கி.பி. 9ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *உறத்தூர், கொடும்பாளூர் மின்னாமழை ஈசுவரம் காளமுக சமயத்தை ஏற்ற அசிதி பண்டிதர், வீரமுருக்கி நங்கை கோயிலை செய்து மண்டபம் எடுத்து திருநிலை செய்தது.*[2]

1 ஸ்வஸ்தி ஸ்ரீ உற
2 த்தூர் கொடும்
3 பாள் மின்னா
4 மழை ஈச்$_0$வர

5 மும் கபாலத்து
6 ஏற்று பெற்று அசி
7 தி பண்டிதர் வீ
8 ரமுருக்கி நங்கை
9 கோயில் பிரதி
10 டை செய்து ஆன
11 தின்பு அரள
12 வர் பாதி ஸிஙி
13 பண்[டி] தர் எ
14 டுபிச்ச மண்டமு
15 ந்த் திருநிலை
16 ப ...

## 11:4

இடம் : *திருமயம் வட்டம், ஓணான்குடி, ஊருக்கு வடகரையில் உள்ள கல்.*

காலம் : *கி.பி. 13ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *ஓணங்காரிகுடி சீராமன் பொய்சள தைவன் அமுதாண்ட ஊருணி நிர்வாகத்திற்காக சில நிலங்களை கொடையாகக் கொடுத்தது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ வீரபாண்டிய தேவற்
2 கு யாண்டு 3ஆவது ஓணங்காரிகு
3 டி சீராமன் பொய்சள தைவன்
4 கல்லின அமுதாண்ட ஊருணிக்கு குளப்
5 [புற] மாக நான் விலைகொண்ட நில
6 த்தில் தான்றிவட்டமும் பெருஞ்சோவனார் வ
7 யல் நாற்றங்காலும் பாடிவய வாக்கா
8 ல் நடுவில் ஆலந்துடவையும் மெழி
9 வாறுங் குளப்புறமாக விட்டேன் அ
10 ழிவ் செய்வார் நாட்டை அழிவு செத்தரா
11 வார். உ

## 11:5

இடம் : *குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம் ஊருக்கு வடபுறமுள்ள வடகாடு என்ற புஞ்சைக் காட்டிலுள்ள தூண்.*

காலம் : *கி.பி. 13ஆம் நூற்றாண்டு.*

செய்தி : *ராமன்நல்லூருக்கு ஊரவர் அடைக்கலம் கொடுத்தமை பற்றியது. இந்த ஊர் இறங்கலிலிருந்து திருக்கண்டனால் மீட்கப்பட்டது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 இவ்வூர் மெச்சத்
3 திருக்கண்டன் இறங்
4 கல் மீட்ட ராமன்
5 நல்லூர் இவ்வூர
6 [வர்] ஆச்$_{0}$ரயம்

## 11:6

இடம் : குளத்தூர் வட்டம், புல்வயல், காந்துப்பட்டி வயலில் பொ. துரைச்சாமி பழனியப்பன் வாகடிச் செய்யின் தெற்கு வரப்பிலுள்ள தூண்.

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு.

செய்தி : ஒரு வயலும், கிணறும் புல்வயல் மறவன் காடவராயன் மகன் சுந்தரபாண்டியனிடம் ஆசிரியம் காத்ததற்காகக் கொடுத்தமை.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ காந்தூர்
2 வெள்ளந் தாங்கினான்
3 ...பன் கண்ட வய
4 க்கல் கிணறும் செய்
5 பாதியும் புல்வயல்
6 மறவன் காடவராயன்
7 மகன் சுந்தரபாண்டி
8 யனுக்கு ஆசிரியம்

## 11:7

இடம் : இலுப்பூர் வட்டம், இலுப்பூரை அடுத்துள்ள மேட்டுப்பட்டி ஊரணிக்கு வடபுறமுள்ள பழைய கோவிலின் கருவறையின் கீழ்புறச் சுவரில் வாசற்படிக்கு தென்புறம்.

காலம் : *சகம்:1640; (கி.பி. 1718).*

செய்தி : இலுப்பூர் பாளையக்காரரில் ஒருவரான சின்னக்காமாட்சி நாயக்கர் குமாரன் முத்துக்காமாட்சி நாயக்கரது நாளில் வல்லத்து நகரத்தாரில் சேந்தமங்கலம் உடையார் மகன் சிவாயசெட்டியார் இலுப்பூர் பொன்னுக்கு வாசி கொண்ட நாயனாற்கு விடையாற்று மண்டபமும், ஊரணி படித்துறையும் கட்டி வைத்தது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிகவாகன சகாத்தம்
2 1640 இதன்மேற் செல்லா நின்
3 ற பராபவ வருஷம் ஆனி மாதம் 25 தேதி சத்த
4 மியும் உத்திர நட்சத்ரமும் பெற்ற சுபதின
5 த்தில் சி சின்னக்காமாட்சி நாயக்கர் கு
6 மாரன் சிவபூசா துரந்தர[ன]ான முத்து
7 க்காமாட்சி நாயக்கரய்யனாளில்
8 வல்லத்துறை நகரத்தாரில் சேந்
9 தமங்கலமுடையார் உகந்
10 த[டு] மை செட்டியார் மகன் .. ம
11 சிவாய செட்டியாருபயம் .. யிலு

12 ப்பையூர்ப் பொன்னுக்கு வா ...

13 சி கொண்ட சுவாமியார் எழு

14 ந்தருளவிக்கிறதுக்கு யிந்த விட ...

15 யாற்று மண்டபமும் திருவூரணி

16 யும் படித்துறையும் கட்டி வைய்த்

17 தது நமசிவாய வாத்தியார் கை எ

18 முத்து யிந்த வோலை மலையனாசாரி

19 திருசாதனாசரி செய்தது [அடம்பும] யான்

20 துணை

## 11:8

இடம் : *இலுப்பூர் வட்டம், இலுப்பூர் மேட்டுப்பட்டி குடிநீர் ஊரணிக்கு வடக்கிலுள்ள விடையாற்று மண்டபம் என்ற பழைய கோவிலுக்கு அருகிலுள்ள சிறிய கோவிலின் தென்புறச் சுவர்.*

காலம் : *சகம்,1630; (கி.பி. 1708).*

செய்தி : *இலுப்பூர் பாளையக்கார் சின்னக்காமாட்சி நாயக்கர் நாளில் பிறதாணி சேனாபதி பிள்ளை திருப்பணி செய்தது.*

1 சுப ஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1630 இதன்

2 மேற் செல்லா நின்ற சறுவதாரி வருஷம் வைகாசி மாதம்

3 5 தேதி முத்துக்காமாக்ஷி நாயக்கர் குமாரன் சி

4 ன்னக் காமாக்ஷி நாயக்கர் நாளில்

5 பிறதாணி பெரியதம்பியா பிள்ளை குமாரன்

6 சேனாபதி பிள்ளை சதாசேர்வை

---

1 புதுக்கோடடைக் கலவெட்டுகள தொகுதியில் எண் 25 இல கொடுக்கப்பட்டுள்ள வெள்ளனூராக் கல்வெடடு இதனுடைய ஒரு படி போலத தெரிகிறது ஆனால இரண்டு பாடங்களுக்குள் சிறிது வேறுபாடு உளளது கள ஆய்வில் உதவிய புதுக்கோட்டை இரா பாஸகரன். புலவா தமிழரசன ஆகியோருக்கு நனறி

2 உறத்தூா கொடும்பாா எனபதால. உறததூா கூற்றத்திலுள்ள கொடும்பாளுரை குறிக்கிறது எனலாம் மினனாமழை கொடும்பாளூா சிறறரசரில் ஒருவரான பூதிவிக்கிரம கேசரியின பட்டப பெயாகளில ஒன்று எனபதை கொடும்பாளூர் மூவா கோவிலுளள அவனது வடமொழிக் கலவெடடு தெரிவிககிறது ஆகவே மின்னா மழை ஈசுவரம் கொடும்பாளூரில இருந்து அழிந்த கோவில்களில் ஒன்று எனக் கருதலாம்

# 12. வரஞ்சுரம் இடங்கைக் கல்வெட்டு

*க.பன்னீர்செல்வம், மைசூர்.*

இடம் : *தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம் வரஞ்சுரம் பசுபதீசுவரர் கோயில்.*

காலம் : *சோழன் இரண்டாம் இராசராசன் யா.11; (கி.பி. 1157).*

செய்தி : *பதினோரு நாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த மலையமார், நத்த மக்கள் ஆகிய இரு சமூகப் பிரிவினர் இடங்கைப் பிரிவிலே சேர்ந்து இடங்கைக்கு என்றென்றும் கண்ணும் கையும் போல் நிற்பதாக உறுதியெடுத்துக் கொண்டார்கள். இக்கல்வெட்டு குறிப்பிடும் நாட்டுப் பிரிவுகளின் நிலப்பரப்பை ஆய்ந்தால் வடக்கே பாலாறு, தெற்கே காவேரி மேற்கே சேலம் ஆத்தூர், கிழக்கே சிதம்பரம் ஆகிய எல்லைகளுக்கு உட்பட்ட பெரும் நிலப்பரப்பைச் சேர்ந்த நாட்டவர் குழுயிருந்தார்கள் எனலாம்.*[1] *12ஆம் நூற்றாண்டில் ஒருவகை சமூக ஒருங்கிணைப்பு நடந்துள்ளதற்கு இக்கல்வெட்டு சான்றாக அமைகிறது.*

1 ஸுவதிஸ்ரீ திரிபுவனச் சக்கரவற்திகள் ஸ்ரீ இராச தேவற்கு யாண்டு 11வது உத்தம [நீ] திய்யா.

2 [பெ]ருங்கீத்தி முத்தமிழாலையாமும்மையு நிறைந்தோர் எழுபத்தொந்பது நாட்டு மில

3 டாகிய ஜனநாதவளநாட்டு மேலாராற்றூர் கூற்றத்து திருவலஞ்சுரத்தில் இருங்கோ

4 ளப்பாடி நாட்டோமுங் குந்றக் கூற்ற நாட்டோமும் துண்ட நாட்டோமுந் திருமுனைப்பாடி

5 நாட்டோமுஞ் செங்குந்ற நாட்டோமும் வாணகப்பாடி நாட்டோமுங் ஆடைய் நாட்டோ

6 மும் பங்கள நாட்டோமும் மேல் கரை நாட்டோமும் கங்கப்பாடி நாட்டோமும் பரணூற்[று] நா

7 ட்டோமும் எம்மிலிசைந்து உடையார் திருவலஞ்சுர உடையநார் கோயில் கல்வெட்டியாவது இந்

8 நாட்டு மலையமார்களும் நத்தமக்களும் இடங்கைத்திலே பாவாடை ஏறினோம் இடங்கைக்கு

9 கண்ணுங் கையுமாய் புல்லும் பூமியுள்ளவு நிற்க கடவோம் இதில் பிழங்கில் மாறுசாதிக்கு தாழ்வு

10 செய்தோமானோம்.[2]

---

1. *பார்க்க* Y. Subbarayalu, *Political Geography of the Chola Country*, 1973.

2. இக்கலவெட்டை வெளியிட அனுமதி நல்கிய இந்தியத தொலலியல் அளவீட்டுத்துறை இயக்குநா (கலவெட்டு) முனைவா M.D. சம்பத் அவாகளுக்கு நன்றி

# 13. மங்கலம் சிவன்கோயில் கல்வெட்டுகள்

வெ. வேதாசலம், மதுரை;
ஆர். பாலச்சந்திரன், திருத்தங்கல்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டத்தில் உள்ள மங்கலம் என்ற சிற்றூர் இடைக்கால, பிற்காலப்பாண்டியர் காலங்களில் கருநிலக்குடிநாட்டு குலசேகரச்சதுர்வேதிமங்கலத்துத் தென்பிடாகை மங்கலம் என்று அழைக்கப்பட்டுள்ளது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாரண்டியன் மங்கலத்தில் தங்கி ஸ்ரீ வில்லிபுத்தூர் கோயிலுக்குத் தானம் வழங்கியதாக ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள்கோயில் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

இவ்வூரில் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட சிவன்கோயில், பெருமாள்கோயில் உள்ளன. பெருமாள் கோயில் ஸ்ரீவல்லபவிண்ணகரம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட போது கல்வெட்டுகள் சிதைவுற்று தற்போது பல துண்டுக்கல்வெட்டுகளாக இவை எஞ்சியுள்ளன. இங்குள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு கருநிலக்குடி நாட்டுப் பரிநிரைகொண்டான் என்ற ஊரில் வீரபண்டித விண்ணகர எம்பெருமான்கோயில் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது.

கயிலாசநாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1162-1177) கல்வெட்டு பிராமணர்க்குரிய இம்மங்கலம் அழிக்கப்பட்டு கோயில் நிலஆவணங்கள் கொள்ளையடிக்கப்பட்ட செய்தியைத் தருகிறது. இடைக்காலப்பாண்டிய அரசு வலிவிழந்த நிலையில் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. மீண்டும் அரசு வலிவுபெற்ற போது மங்கலமும் கோயிலும் உண்டாக்கப்பட்டு கோயில் நில ஆவணங்கள் மீண்டும் பிரமதேய சபையாரால் உறுதி செய்து அளிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் முற்றிலுமாகப் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது.

## 13:1

இடம் : சிவன்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றின் மூன்று புறமும் உள்ள அதிட்டானம்.

காலம் : சடையவர்மன் குலசேகரன் யா:14; (கி.பி. 1176).

செய்தி : ஆயிரத்தெண்மீசுரமுடையார் கோயிலுக்குத் தேவதானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் குறித்த நில ஆவணங்கள் முன்பு மங்கலம் அழிந்தநாளில் அதனை அழித்தவர்களால்

*கொள்ளையிடப்பட்டு மறைந்தன. எனவே சிறிது காலம் கழித்து மங்கலமும் கோயிலும் உண்டாக்கப்பட்ட பின் பிரமதேயத்து மகாசபையார் தங்கள் ஊர் சிவல்லப விண்ணகராழ்வார் கோயில் திருமுற்றத்தில் கூடி அப்பிரமாணங்களுக்குரிய தானங்களை மீண்டும் உறுதி செய்துள்ளனர்.*

1 . ந்தை புகளோடும் பொலிய வேதமுந் தமிழும் மெய்மையில் விளங்க கற்புடைத் திருமகள் பொற்புயத் திருப்பத் திக்கிரு நான்குஞ் சக்கரவாளமும் சூழும் புவனமும் ஏழுங் கவித்து வெண்குடை நீ

2 ழல் செங்கோல் நடப்ப நாடோரும் மதியமுந் ஞாயிறு வலங்கொள் ஆடகப்பொருப்பின் லரசு மீனருப்பச் சுந்தரன் மார்பினிலிந்திரன் பூட்டிய ஆரமும் மலங்கமு மழகுடன் விளையும் புலியும் வில்லு

3 ம் சுரம்புக ஆணைமன்னவர் மயமலர் சூட மரபில் வந்து மணிமுடிசூடிய் விளங்கிய கதிரொளி வீரஸிம்ஹாதனத்து உலகமுழுதுடையாளுடன் வீற்றிருந்தருளிய மாமுதல் மதிகுலம் விளக்கிய கோமுதல் கோச்சடையவன்மரான [திரிபுவன- சக்கரவர்த்திகள் குலசேகரதேவர்க்கு யாண்டு] 14வது ஸ்ரீ பாண்டிமண்டலத்து மதுரை உதைய வளநாட்டுக் கருநிலக்குடிநாட்டுப் பிரமதேயம் சி குலசேகரச்சது

4 [ர்வேதிமங்க] லத்து மஹாஸபையோம் இவ்வூர் தென்பிடாகை மங்கலத்து உடையார் ஆயிரத்தெண்மீசுரமுடையார் கோயிலில் சீ ருத்திரர்க்கு சீமாயேசுவரர்க்கு பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது முன்பு இவ்வூர் நடு. எம்பெருமான் ஸ்ரீவல்லவ விண்ணகராழ்வார்கோயிற் திருமுற்றத்துக் கூட்டங்குறைவறக் கூடியிருந்து இவ்வாயிரத் தெண்மீசுரமுடையார்க்கு தேவதானமாகப் பணிபணிந்து இவ்வூர் மத்தியஸ்தன் சங்கன்.. தம்பிரான் தோளனுக்கு நாங்கள் விற்றுக்குடுத்தப்படி தென்னடியான வீரபத்திர நல்லூர்க்குப் பெருநான்கெல்லையாக கீள்எல்லை த. ளினார் நீர்நக்கலுக்கு மேற்கும் தென்னெல்லை சாத்தியேறி தென்தலைகொம்புக்கு வடக்கு கீழ்லெல்லை சிறுவழிக்கு கிளக்கும்.. ஒரு கண்ணாற்று வடவிழிபுக்கு தெற்க்கும் ஆக இப்படி இசைந்த பெருநான்கெல்லைக் குள்ளுமாக குளத்தில்

5 .. கிணோக்கின கிணறும் மேனோக்கின மரமும் புற்றுந் தெற்றியஉடும்போடி ஆமைதவளி உண்ணில ஒளிவின்றி விலைக்குறவிற்றுப் பொருளறக் கொண்டு இதுக்கு எப்பேற்பட்ட அந்தராயம் ஆண்டொன்றுக்கு காசு ஒன்றும் திரமம் ஒன்றுங் கொண்டு வருவதாக. செய்து குடுத்தோம் இப்பிரமாணம் இம்மங்கலத்து குளத்தின் செம்பெற்று மடையால் நீர்பாய்ந்து விளையுந் நிலம் ஆயிரத்தெண்மி வயக்கல் வுள்பட தடியுந் தல்லும் பன்னிரண்டினால் வீரபாண்டியன்கோலால் ஒருமா முக்காணியும் களத்துாற்குளத்தின் இராசேந்திரன்சோழன் மடையால் நீர்பாய்ந்து விளையுந் நீர்நிலம் மடை

முன்பு தேவதானமாய் அனுபவிபோத்து வருகிற நிலம் வீரபாண்டியன்கோலால் நிலம் ஒருமா முக்காணியும் இக்குளத்தில் மேலை மடையால் நீர்பாய்ந்து விளையுந் தடி ஐஞ்சு தடி ஒன்று நிம...சும் நி...லுக்கு ஒரு மா...ந்த நிலம் மும்மாவரையில் நிலம் நிமந்தங்களுக்கு நிலம் மூன்றுமாவும் விலைக்குற விற்று பொருளறக் கொண்...

6 ன்ற காசு ஒன்றுந் திரமம் ஒன்றுங் கொள்ளுவதாக விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்த இப்பிரமாணங்கள் முன்பு மங்கலம் அழிந்தநாளில் கொள்ளை கொண்டிடத்தே அந்தர்பட்டமையில் பிரமாணங் காட்டமாட்ட...றை அந்தராயம் ஆண்டாசறுதளாய் வந்தட்டிறைத்தா விட்டுப் பொருள் கொள்ளுதலால் இந்த திருப்படிமாற்று இன்றிக் கிடந்தமையி லித்தன்மம் அழிவுபடலாகாதென்று நடுவு நிருப எம்பெருமான் சிவல விண்ணகராழ்வார் திருமுற்றத்துக் கூட்டங்குறைவறக் கூடியிருந்து சேரிப் பணிபணித்து பண்டாடு பழநடையே சுட்டிறை அந்தராயம் ஆட்சி ஒரு காசும் ஒரு... முங்கொள்வதாகவும் இதுக்கு மேல் கடமை அந்தராயம் என்று கொள்ள.. வதாகவும் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம்.. தனுக்கு [மம. ஸ ம்] குலசேகரசருப்பேதி மங்கலத்து மாஸபையோம் இவ்வூர்தென்பிடாகை.. கலத்து உடையார் ஆயிரத்தெண்..

7 .. குளம் பாழாய் கிடந்த வா...றா யிக்குழமல மிருக்கக் கண்டு காடுவெட்டி பூமியும் வயக்கி திருக்கற்றளி செய்கைக்கு இவ்வூர் பெருநான்கெல்லைக்குள்ளு தண்டேசுவர விலையாக இக்கோயில் சிவபிராமணன் ஓரணையன் பெ

8 ...கான் சம்மதித்தவாறே யிக்கோயில் தானத்து சிஉருத்திர சிமயேசு [வராக்கும்] பெரிய திருத்தலத்தில் முதலியகளுக்கு மறி

9 விச்சபடி திருக்கற்றளி செய்கைக்கு இவன் இசைந்த பொருள் கொண்டு இச்சங்கன் திருமாளன் ஆயிரத்தெண்மி பட்டன் எழுத்து

10 ...த்தார் சத்தியமுகமும் வந்தவாறேய் சு விலையாக இக்கோயில் சிஉருத்திர சிமாஹேசுவரர்க்கும் தென்னகோனுக்கு குடிநீங்காத்தவரை நிற்பதாக நீங்காத காராண்மை குடுத்தோம் இக்கோயில் சிவபிராமணர் கற்றளிகாரர் பட்டன் எழுத்து...

11 கீலெல்லை சிறுவழி வடவெல்லை இக்குளத்தில் காண ஒருக்கிணற்றில் வடவிளிம்புக்கு தெற்கு இப்பெருநான்கெல்லைக் குள்ளு கீணோக்கின்னலில் சிஉருத்திரரும் சிமயேசுவரரோம் தேவன் தில்லையான் எழுத்து இக்கோயில் மிவரசிவன்ன உடையா...

12 யிள எமனைஞ் சகலத்துக்கு களுக்கு ஏழ்சாவி நீக்கிய நிலத்து நாச்சாண்கோலாய் ஒருமா நிலத்துக்கு மாவாசறுதித் திரமம் கடமை எண்ணாழிக்காலால் எண்கல...

13 ன்னகோனுக்கு இக்கோயில் சிவபிராமணன் சிங்கன் தண்டேசுவர...

14 இரண்டு திரமம் இறுப்பானாகவும் புன்செய்க்கு இக்கோயில் மாவறுதி ஒருமா நிலத்துக்கு ஒரு திரமம் கடமை இறுப்பானாகவும் இசைந்த நான்விரயத்திரபட்டன் எழுத்து

## 13:2

**இடம்** : *அதே கருவறை மேற்கு, தென்புற அதிட்டானம்.*

**காலம்** : *முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் யா:1, (கி.பி. 1190).*

**செய்தி** : *கருங்குடிநாட்டு குலசேகரசதுர்வேதிமங்கலத்து மகாசபையார் தங்களூர் தென்பிடாகை மங்கலத்து ஆயிரத்தெண்மீசரமுடையார்க்குத் திருமடைப்பள்ளிப் புறமாக குளம் ஒன்றினை விற்றுக் கொடுத்தது.*

1 பூவின்கிழத்தி மேவிவீற்றிருப்ப மேதினிமாது நீதியிற்புணர வயப்போர்மடந்தை செயப்புயத்திருப்ப மாக்கலை மடந்தை வாக்கினில் விளங்க திசையிரு நான்கு மிசை நிலா வெறிப்ப மறைநெறிவளர மனுநெறி திகழ அறநெறிச் [சமயங்களாறும்] திழைப்ப கானவேங்கையை வில்லுடன் துரந்து மீனம் கனகாசலத்து வீற்றிருப்ப எண்கிரி சூழ்ந்த எழுகடல் லெழுபொழில்வெண்

2 குடை நிழற்றச் செங்கோல் நடப்ப கொடுங்கலி நடுங்கி நெடும்புலத் தொளிப்ப வில்லவர் செம்பியர் விராடர் வராடர் பல்லவர் திறையுடன் முறைமுறை பணிய இருநேமியளவும் மொருநேமி ஓங்கிய யின்னமுதாகிய வியலிசை நாடகமன்னிய வளர மணிமுடி சூடி விளங்கிய கதிரொளி வீரசிங்காதனத்து வீற்றிருந்தருளிய மாமுதல் மதிக்குலம் விளங்கிய கோமுதற் கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகரதேவற்கு யாண்டு 1வது

3 சிபாண்டிமண்டலத்து மதுரோஉதைய வளநாட்டு கருநிலக்குடிநாட்டு சிகுலசேகர சதுப்பேதிமங்கலத்து மஹாஸபையோம் தென்பிடாகை மங்கலத்து ஆயிரத்தெண்மீசரமுடைய நாயனார்க்கு திருமடைப்பள்ளிப் புறமாக விற்றுக்குடுத்த குளமாவது இவ்வூர் கீழ்பிடாகை தென்கருங்குளமென்று பேர் கூவப்பட்ட ஆயிரத்தெண்மி நல்லூர்க்கு கீழ்லெல்லை [அடைஞ்சய] தாவளத்தில் நின்றும் பாலாத்துக்குப் போகிற பெருவழிக்கு கிழக்கு தடி ஐம்பதன்கோல் பொற் செவ்வைக்கும் மேற்கும் தென்னெல்லை ஆற்றுக்கு வடக்கும்...

## 13:3

**இடம்** : *அதே கருவறை, அர்த்தமண்டப அதிட்டானம்.*

**காலம்** : *முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், யா:5, (கி.பி. 1195).*

செய்தி : *ஆயிரத்தெண்மீசுரமுடையார் தேவதானம் தென்னடியான வீரபத்திரநல்லூர் சண்டேசுவரவிலையாக விற்றுக் கொடுத்தது.*

1 பூவின்கிழத்தி மேவிய வீற்றிருப்ப மேதினிமாது நீதியிற்புணர வயப்போர் மடந்தைய் செயப்புயத்திருப்ப மாக்கலைய் மடந்தைய் வாக்கினில் விளங்க.

2 திசையிருநான்கும் மிசைநிலா வெறிப்ப மறை நிரைவழி மனுநெறிய திகள் அறநெறிச் சமையங்களாலுந் தழைப்ப கானவேங்கையைய் வில்லுடன் துரந்து மீனங்கனகா

3 சனத்து வீற்றிருப்ப எண்கிரி சூழ்ந்த ஏழ்பொழில் வெண்குடை நிழற்றச் செங்கோல் நடப்பக் கொடுங்கலி நடுங்கிட நெடும்புகழ் தொளிப்ப

4 விராடர் விராடர் பல்லவர் திறையுடன் முறைமுறை பணிய யிருநேமி அளவும் ஒருநேமி ஓங்குக இன்னமுர்தாகிய இயலிசை நாடகம் மன்னிவளர மணிமுடிசூடி

5 விளங்கிய கதிரொளி வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளிய மாமுதல் மதிகுலம் விளங்கிய கோமுதல் கோச்சடையபன்மரான திரிபுவன சக்கரவத்திகள்.

6 குலசேகரதேவற்கு யாண்டு மூன்றாவதி னெதிராமாணடின் னெதிராமாண்டு ஸ்ரீபாண்டிமண்டலத்து மதுரோதைய வளநாட்டு கருநிலக்குடி நாட்டு... குலசேகர ..

7 மங்கலத்து தென்பிடாகை மங்கலத்து உடையார் ஆயிரத்தெண்மீசுவர முடையார் தேவதானம் தென்னடியான வீரபத்திரநல்லூர் காடுவெட்டியுங்.

8 கலநெல்லும் இக்காராண்மை காணியானாக இவ்வூர் கலங்காதகண்டப் பெருந்தெருவிலிருக்கும் வியாபாரி மருத்தூருடையான் தேவன்...

9 டேசுவரவிலையாக தெனாகோனுக்கு காராண்மையாக வீரபத்திரநல்லூர்க்குப் பெருநான்கெல்லை கள்ளியூர் நீர் நக்கலுக்கு மேற்கு சாத்தஎரி வடதலை

10 ...மையாக கல்வெட்டி குடுத்த பிரமாணமாவது தென்னாடியான் [விதவளி ஒளியாமே] உள்நிலம் ஒளிவின்றி நீர்நிலத்திலும் நத்தபற்று பதினாறு சாண்கோல்

11. ...கிணறும் மேனோக்கிய மரமும் புற்றுந் தெற்றியு முடும்போடியாமை...

# 14. அழகரைக் கோயில் கல்வெட்டு

ப. சண்முகம், சென்னை.

இடம் : கரூர் மாவட்டம், முசிறி வட்டம், அழகரை, சோமீசுரர் கோவிலில் தென்புறச்சுவர்.

காலம் : மூன்றாம் குலோத்துங்கன் (?) யா:13, (கி.பி. 1191).

செய்தி : திருத்தவத்துறையில் (இலால்குடி) பாடிகாவல் காணி உடைய குலதீப நாடாழ்வான் அலகறையில் சோமீசுரர் கோவில் எழுப்பி அங்கு பணிபுரியும் தேவர்கந்மிகள், பந்மாஹேசுவரக் கண்காணி செய்வார்கள் ஆகியோருக்கு கோவில் நிமந்தங்களை நடத்துவதற்கு ஏழரை வேலிக்குச் சற்றுக் கூடுதலான நிலம் அளித்துள்ளான். இந்நிலத்தின்மீது விதிக்கப்பட்ட வரிகள் விலக்களிக்கப்பட்டுள்ளன. ஒரு வேலிக்கு 50 கலம் நெல் என்று தீர்வை விதிக்கப்பட்டுள்ளது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவனச்சக்கரவத்தி கோனேரிந்மைகொண்

2 டான் பாண்டிகுலாசநி வளநாட்டு இடையாற்றூர் நா

3 ட்டு திருத்தவத்துறை பாடிகாவற் காணியுடை

4 ய செந்நிவாட்கைச் சேமந் தாயிலு நல்லானான குல

5 தீப நாடாழ்வான் இராசராச வளநாட்டு மீமலை ஐயங்கொ

6 ண்ட சோழச்சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை அலகறை

7 யான குலோத்துங்க சோழநல்லூர் ஸ்ரீ கயிலாஸமாக எ

8 ழுந்தருளிவித்த சோமீச்வரமுடையார் கோயிலில் தேவர்கந்மி

9 க்கும் ஸ்ரீ பந்மாஹேச்வரக் கண்காணி செய்வார்களுக்கும் இத்தேவர்க்கு வே

10 ண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக இப்பிடாகையிலு

11 ம் பிடாகை சிற்றூரான சோளராஜேந்த்ர சோழ நலூரிலு

12 (ஞ்சு). சிலும் இக்கோயிலாதி சண்டேச்வ

13 ர. திருநாமத்து ஸபை விலை கொண்டு குடுத்த ப்ர

14 மாணப்படி இந்நிலம் ஏழரையே மும்மாவரை முந்திரிகைக்

15 கீழரையே இரண்டு மாவும் முந்நிறை கட்டினபடியும் ஊர்க்

16 கீழிறையிலி நிலத்துந் தந்தோம் தரமிலி நிலத்தும் ஒபாதியேற்றுகையு

17 ந் தவிர்ந்து பந்நிரண்டாவதிந் எதிராமாண்டு முதல் அந்தராய

18 ம் பாட்டம் உட்படத் தேவதான இறையிலியாக விட்டும் இந்நிலத்து

19 க்கு வேலி ஒன்றுக்கு நெல்லு ஐம்பதின் கலமாக இறைக
20 ட்டினபடியும் எழுதிப்புகுந்தால் தர ஒபாதி நெல்லு ஊரில் சு
21 ருக்கி இந்நெல்லு இறைகட்டின நெல்லுக்கு ஏறுமா
22 கில் இந்நெல்லே இறைகட்டாகக் கொள்ளவும்
23 இந்நிலத்துக்கு அடைமுதற்படியாமிறுத்து வருகிற
24 நெல்லு இறைகட்டின நெல்லுக்கு ஏறுமாகில் அடை
25 முதற்படி நெல்லு நம் நத்தத்துக்குடலாகக் கொள்ளவு...

# 15. சேவூர்க் கல்வெட்டு

க.அ. புவனேசுவரி, அன்னூர்.

இடம் : கோயம்புத்தூர் வட்டம், சேவூர் அனுமந்தராயன் கோயில்.
காலம் : வீரபாண்டியன், யா : 11.
செய்தி : அக்கை சாலீசுவரமுடையார் கோயிலுக்கு வடபரிசார நாட்டு வாணிக மடிகை எனப்பட்ட எண்ணெய் வாணிகர் எண்ணெய்க் காப்புக்கு ஆண்டு ஒன்றுக்குச் செக்கு ஒன்றுக்கு காணத்தால் ஓர் உழக்கு எண்ணெய் அளந்து வருவதாக உறுதியளித்தது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ வீரபாண்டிய தேவற்
2 கு யாண்டு பதினொன்னாவது ஆடி
3 மாத முதல் வடபரிசார நாட்டு வா
4 ணிகை மடிகையோஞ் சேவூர் ஆ
5 ளுடையார் அக்கை சாலீச்வரமுடை
6 யார்க்கு திருஎண்ணெய்க் காப்புக்கும் யா
7 ண்டு ஒன்றுக்குச் செக்கொன்று
8 க்கு காணத்தால் உழக்கெண்ணை
9 நாட்டிலுள்ள செக்குக்கு ஆண்டொ
10 ன்று மளந்து வருவதாகக் கல்லில் வெ
11 ட்டிக் குடுத்தோம் இது பன் மா
12 ஹேச்வரரெக்ஷை

# 16. பட்டலூர்க் கல்வெட்டுகள் -3

*அ. பழனியப்பன், சம்பை.*

## 16:1

*இடம்* : *ஈரோடு மாவட்டம் பவானிக்கு அண்மையில் உள்ள பட்டலூர். ஈச்வரன் கோயிலில் தெற்கு மற்றும் கிழக்குச் சுவர்கள் சந்திக்கும் பகுதி*

*காலம்* : *கொங்குச் சோழமன்னன் வீரராசேந்திரன் யா: 31 (கி.பி. 1227).*

*செய்தி* : *ஒரு நிலத்தின் எல்லைகள் குறிக்கப்படுகின்றன.*

1 நன்மங்கலம் சிறக்க கோவிராஜகேசரிபந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் வீரராசேந்திர தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு 21 எதிர் பத்தாவது ஆநிமாஸ முதலாக வடகரை பட்டில்லூராளிகளும் நடுவில் நித்யகண்ட சக்கரவத்திகளும் தேவர்க்கு எம்மிலி...

2. ... யாவது .. கல்லுக்கும் . கிழக்கும் கிழக்கு பிடாரியர் தேவதானத்துக்கு மேற்கும் ... வடக்கும் இவ்வெல்லைக்குட்பட்ட நிலமும் இந்நாயனாற்கு பூசிக்கும் நம்பியர் பட்டில்காணியாளரு .. மாண்போகத்துக்கும் பட்டில் காணியான உவச்சரில் பாரெசிவர் பூமந்வந்நியான வீரபத்திர சக்கரவத்திக்கு மாண்போகம் மேற்கு பிடாரியார் தேவதானத்துக்கு கிழக்கும் கிழக்கு இட்ட கல்லுக்கும் மேற்கும் தெற்கு ஒழுகு கல்லிச் சிறு பொழிக்கு வடக்கும்...

## 16:2

*இடம்* : *கோயிலின் கருவறை தென்மேற்கு ஜகதிப்படை.*

*காலம்* : *கொங்குச் சோழ மன்னன் வீரஇராசேந்திரன், யா:38, (கி.பி. 1254).*

*செய்தி* : *ஊராரும், ஊராளிகளும் ஏரி ஒன்றை வெட்டிக் கொடுத்துள்ளனர். ஏரி நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்பவர் தம் வருவாயில் மூன்றில் ஒரு பங்கை இறைவனுக்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்கள் ஏழு தலைமுறைக்குக் குழந்தைப்பேறு இல்லாது போவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீவீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதற்கெதிர் ஒன்பதாவது வ

2 டகரை நாட்டு பட்டில் ஊரும் ஊராளிகளோம் எங்களூர் நாயனார் வாகீஸ்வர முடையாற்கு னாங்கள் ஏரியிட்டுக் குடுத்த படியாவ

3 து பசுங்கண்ணித் தாழையோடுற்று இதில் நீர் பாஞ்சு நிலங்கண்டிட மெல்லாம் இறையின்றி ஏகபோகமாக இட்டு

4 குடுத்தோம் வாகீசுரமுடையாற்கு இக்கோயில் காணியுடைய பிராமணரில் பாலாசிரிய கோத்திரத்து பொ[ல்]லாத பிள்ளை ம

5 கன் மாதேவபட்டனும் இக்கோயில் காணியுடைய உகச்சரில் பாரெசிவரில் பூமந் வந்நியான வீரபத்திர சக்கரவத்தி இக்குளம்

6 உழுது முன்றிலொன்று நாயனாற்கு குடுப்பார்களாகவும் இவ்வேரியைக் கோயிற்றமந்நாதல் ஊராராதல் மாற்றுவான் யாதொருவன் வழி யேழெச்ச மறுவான் இது பன்மாஹேச்வாரட்சை[1]

---

1 இவவிரண்டு கல்வெட்டுகளையும் படியெடுத்துப் படித்து உதவியவர்கள் முனைவர் சு இராசகோபால், திரு. பொ இராசேந்திரன், திரு. சொ சாந்தலிங்கம்.

# 17. காளியாம்பட்டி அம்மன் கோயில் கல்வெட்டு

நாக. கணேசன், கரூர்.

இடம் : திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், காளியாம்பட்டி கிராமத்தில் நத்தக்காட்டிற்கருகிலுள்ள அம்மன் கோயிலின் வடகிழக்கு மூலையில் தனியாக கிடக்கும் தூண்.

காலம் : மூன்றாம் இராசராசன் யா:22, (கி.பி. 1238).

செய்தி : மேல் வள்ளுவப்பாடி நாட்டில் கண்டாற்றூர் என்னும் பெயரால் அழைக்கப்பட்ட ஊர் ஸ்ரீகரணத்தாரால் ஸ்ரீகரணநல்லூர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 திருபுவன
3 சக்கரவத்
4 திகள் ஸ்ரீஇரா
5 சராச தேவற்
6 கு யாண்டு
7 22வது
8 மேஷ நாய
9 ற்று பூர்வப
10 க்ஷத்து
11 ப்$_{3}$ரதியை
12 யும் சனி
13 க்கிழ
14 மையும் பெற்ற நாள்
15 மேல்வள்
16 ளுவப்பா
17 டினாட்டு க
18 ண்டாற்றூ
19 ர் இற்றை நா
20 ள் முதல் ஸ்ரீ
21 கரணத்
22 தார் ர
23 க்ஷை இ
24 ற்றை நா
25 ள் முதல்
26 இவ்வூர்
27 ஸ்ரீகரண
28 நல்லூர்

# 18. மகளூர் இராசேந்திர சோழன் கல்வெட்டு

ஆ. பத்மாவதி, சென்னை;
சி. வீரராகவன், விழுப்புரம்.

இடம் : விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், மகளூர் சிவன் கோயில்.

காலம் : மூன்றாம் இராசேந்திரசோழன் யா. 7, (கி.பி. 1253).

செய்தி : பரிநூற் கூற்றத்து கணங்கூர் உடையார் திருத்தான்தோன்றீசுவர முடையார் கோயிலுக்கு திருப்பணி, பூசைக்குமாக நன்செய் நிலம் ஒரு வேலி வன்னெஞ்சப் பெருமாளான வாணகோவரையனால் தரப்பட்டது. இவன் தனது உடல் நலத்திற்காக இந்நிலம் கொடுத்துள்ளார். இது இவனது நேர்முக ஆணையாகும். சிங்களராயர், புரவுவரி போன்ற அதிகாரிகள் உடனின்று கணக்கில் சேர்த்து வரிநீக்கி இத்தானத்தைச் செய்துள்ளனர்.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சி
2 இராசேந்திர சோழ தேவற்கு இ[யா]ண்டு 7 வ
3 து வன்னெஞ்ச பெருமாள்ளான வாண
4 கோவரையர் திருமுகப்படி சிங்களர
5 ாயரும் இரா‌ராப் பிரமராயரும் இரா
6 சேந்தி சோழப் பிரமராயரும் புரவரியாரு செ
7 ய்ய கடவபடி பரிநூற் கூற்றத்து கணங்
8 கூர் உடையார் திருத்தாதோன்றிசுரமு
9 டைய நாயனாற்கு பூசைக்கும் திருப்பணிக்கு
10 ம் உடலா ஏழாவது மாசிமாத முதல் இவ்வூ[ர்] ெ
11 பரி ஏரி நன்செய் நிலத்திலே ஒரு வேலி
12 நிலம் இறையி[லி] தேவதானம்மாக நம[க்]கு
13 நன்றாக விட்டேன் இப்படி கணக்கில் நி
14 றுத்தி அடைத்து குடுப்பதே இவை வா
15 ணகோவரையந் எழுத்து இவை திரும
16 ந்திர ஓலை எழுவர் நம்பிக்கு நல்லாந் எ
17 ழுத்து

# 19. சொக்கலிங்கபுரம் அழகிய சோழீசுவரர் கோயில் கல்வெட்டுகள்

வெ. வேதாசலம், மதுரை;
கு. சேதுராமன், மதுரை.

## 19:1

இடம் : *சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து கொட்டாம்பட்டி செல்லும் நெடுஞ்சாலையில் கொட்டாம்பட்டிக்கு அருகில் உள்ள சொக்கலிங்கபுரத்தில் உள்ள அழகியசோழீசுவரர் சிவன்கோயில்**

காலம் : *முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் யா:6 (கி.பி. 1274).*

செய்தி : *மேன்மலையூர் அழகியசெழீசுவரமுடையாரின் திருப்படிமாற்று உள்ளிட்ட நிவந்தங்களுக்கு வஞ்சியூர்குளமும் அமுதனேரியின் தென்பால் உள்ள துறையூர்குளமும் தேவதான இறையிலியாக வழங்கப்பட்ட அரச ஆணை. இதனை அரசன், காலிங்கராயன் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க அள்ளியூரில் (வள்ளியூர்) தங்கியிருந்த போது வழங்கியுள்ளான்.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு 5 வது நாள் 342னால் அள்ளியூரில் எழுந்தருளியிருக்க நினைப்பு சுரநாட்டு மேன்மலை அழகிய செழீசுவரமுடையார்க்கு திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நிமந்தங்களுக்கு இவ்வூர் வஞ்சியூர்குளமும் அமுதனேரித் தென்பாற்துறையூர் குளத்துக்கு நான்கெல்லை

2 நம் உழவுந் தவித்து காராண்மையாட்சியும் அந்தராய வினியோகமும் தருவதான அச்சும் காரியவாராய்ச்சியும வெட்டிப்பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்கிரகப்பேறும் வாசல்பேறும் இலாஞ்சினைப்பேறும தறியிறை செக்கிறை தட்டளிபாட்டமும் இடைவரி இனவரி பொன்வரி

3 வருவது முதல் தேவதானயிறையிலியாக இடப்பெற வேணுமென்று காலிங்கராயன் நமக்குச் சொன்னமையில் இவ்வழகிய செழீசுவரமுடையார்க்கு திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு இவ்வூர் வஞ்சியூர்குளமும்.. 8 முதல் [அமுத] னெரித் தென்பால் துறையூர் குளமும் உழவுந்தவித்து காராண்மையாட்சியும்

4 வெட்டிபாட்டமும் பஞ்சுபீலியும் சந்திவிக்கிரகப்பேறும் இலாஞ்சினைப்பேறும் தறியிறை செக்கிறை தட்டளிப்பாட்டமும்

இடைவரி பொன்வரியும் எப்பேற்பட்டன முள்பட இவ்வாண்டு முதல் தேவதானயிறையிலியாக இருக்கவென்றும் இப்படி சந்திராதித்தவரை செல்வதாக

5 இவை தொண்டைமான் எழுத்து இவை காலிங்கராயன் எழுத்து வஞ்சியூர்குளத்து நகரத்தான் மடபுற திரிபுவனசக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் சுரநாட்டு மேன்மலை அழகிய செழீசுவரமுடையார் ஸ்தானத்தாற்கு இத்தேவற்கு திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நிமந்தங்களுக்கு

6 கடமை அந்தராயம் வினியோகம் இலாஞ்சினைப்பேறும் தறியிறை செக்கிறை தட்டளிபாட்டமும். இடைவரி இனவரி பொன்வரியும் எப்பேறபட்டனவும் ஊள்பட்ட பஞ்சுபீலி...

7 ன்னமையில் அழகியசெழீசுவரமுடையாற்கு திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு இவ்வூர் வஞ்சியூர் குளமும் அமுதனேரியான தென்பாற்குத் துறையூர் குளமும் உழவுதவித்து காராண்மையாட்சியும் கடமை அந்தராயமும் விநியோகமும் தருவதான அச்சும் காரியவாராய்ச்சியும் வெட்டிபாட்டமும்

8 . றை செக்கிறை தட்டளிப்பாட்டமும் இடைவரி இனவரி... எப்பேற்பட்டனவும் உள்பட இவ்வாண்டு முதல் இக்குளத்து வயலில் நகரத்தான் மடப்புறமாக நீக்கி தேவதான இறையிலியாக தந்தோம் சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலும், செம்பிலும் வெட்டிலித்துக் கொள்ள இவை திருக்கான ...

## 19:2

**இடம்** : *கருவறை, மேற்குப்புறம், தெற்குப்புறம்.*

**காலம்** : *முதல்மாறவர்மன் குலசேகரபாண்டியன் யா:11, (கி.பி. 1279).*

**செய்தி** : *சுரநாட்டு மேல்மலை ஊரவையினர், தங்கள் ஊர்ப்பகுதியில் இருந்த புரவேரிக்குளத்தினை அனுபவித்த ஒருவர் அதற்குரிய கடமை, குடிமை முதலிய வரிகளைச் செலுத்தாதபடி இராஜதுரோகம், நாட்டுத்துரோகம், ஊர்த்துரோகம் செய்து வந்தமையால் புரவேரி குளத்தினைத் தங்களூர் அழகியசெழீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு விற்றுக் கொடுத்தனர். இக்கல்வெட்டின் தொடர்ச்சி கருவறை அர்த்தமண்டபத்தின் தென்புறத்திலும் உள்ளது. இப்பகுதியில் தட்சிணாமூர்த்தி சிற்றாலயம் பிற்காலத்தில் கட்டப்பட்டுள்ளதால் கல்வெட்டின் வரிகள் அதனுள் மறைந்துள்ளன.*

**அ. முதல் பகுதி**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மெற்கீத்திக்கு மேல் கோமாறபன்மர் ஆன திரிபுவன

2 சக்கரவத்திகள் எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீகுலசேகரதேவ

3 ற்கு யாண்டு 11வது ஆனிமாதம் 16 தீ புதன்கிழமையும் பெற்

4 ற மிருகசிரிஷத்து நாள் சுரனாட்டு மேன்மலை ஊரார் இசைந்த

5 ஊரோம் இவ்வூர் உடையார் அழகியசெழீசுவரமுடைய ந

6 ாயனார் ஆதிசண்டேசுவரர் ஸ்ரீமாஹேசுவரர் தேவர்க

7 ன்மிகள் ஸ்ரீகாரியஞ்செய்வார்கள் கோயில் கணக்கற்கு நிலவிலை பிராமாணம் பண்

8 ணிக்குடுத்த பரிசாவது இவ்வூர் பாற் புரவேரிக்குளமும் வயலும் முன்

9 னாள் மருதாலப்பேரையன் ஆண்டுபோதுகையில் இவன் ஈழத

10 ரையர்கு இசைய கடமை குடிமை செய்யாதபடியாலும் ராசத்து

11 ரோகம் செகையாலும் நாட்டுத்துரோகம் ஊற்துரோகமும் செ

12 ய்து இவன் மேப்போகையால் இப்புரவேரிக்கு 11துக்கு கடமை

13 க்கு இனாயனார்க்கு காராங்கிழமையாக விற்றுக்குடுத்த புரவ

14 ரிக்கும் ஏம்பலுக்கும் பெருநான்கெல்லையாவது வடபா

15 தலை மடை கோவைக்கு தெற்கும் மேல்பார்க் கெல்லைஇல்

16 (ல) நின்றும் அரசாத்துக்கு போகிற பெருவழிக்கு கிழக்கும் தென்பாற்கெல்லை

17 கிணற்றுக்கு .. கீழலாக போகிற கோபூகா[வா]க்கு வடக்கு

18 நான்கெல்லையும் கானகுடிகாட்டில் நீர்கோவைக்கு மேற்கு

**ஆ. இரண்டாம் பகுதி : கருவறை தென்சுவர்**

19 எப்பேறப்பட்டனவும்

20 நிற்செய்வித்த ப.30 இப்பணமும்

21 .. விலை பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் ஊரா

22 அழகிய செழீசுவரமுடைய நாயனார்க்கு

23 விருக்கும் . பொருட்

**இ. மூன்றாம் பகுதி : அர்த்தமண்டபம்**

24 சிலவோலை காணவுங் காட்டவுங் கடவதா

25 கவும் இப்படிக் காராங்கிழமையாக விறுக்க குடுக்க கடவோ..

26 யியோகம் .. எப்பேறப்பட்டனவையிற்றுக்கும் ஆண்டொன்றுக்கு வினியோக

27 மாக [இறுப்பின...] கொன்றும் ஆக இவச்சு ஒன்றும் கொண்டு எறிபிறா இறுத்துக் குடுப்போ

28 மாகவும் இப்புரவேரிக்கு சூலஸ்தாபனமும் பண்ணிக் குடுத்தபடி கல்லிலு

29 ம் செம்பிலும் வெட்டுவித்துக் குடுத்தோம் மேன்மலை ஊராய் இசைந்த ஊரோம் உடையார் அழ

30 கியசோழீசுவரமுடையனாயனாற்கு இப்படிக்கு ... பேரையன் தற்குறிக்கும் ... கோட்டை

31 க்கு

## 19.3

இடம் : *கருவறை, தெற்குப்புறச்சுவர்.*

காலம் : *முதல் மாறவர்மன் குலசேகரபாண்டியன், யா: 38, (கி.பி. 1306).*

செய்தி : *இக்கல்வெட்டும் இதனை அடுத்துள்ள கல்வெட்டும் மதுரையில் உள்ள சைவமடத் தலைவர்க்கு அகத்தியன் குளத்தினை மடப்புற இறையிலியாக அளித்ததைத் தெரிவிக்கின்றன. முதல் கல்வெட்டு மேல்மலை ஊரவையினர் இதற்குரிய முடிவினை எடுத்து கல்வெட்டு பொறித்ததைத் தெரிவிக்கிறது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ மெக்கீத்திக்குமேல் சிகோமாறபன்ம

2 ரான திருபுவனச்சக்கரவத்திகள் எம்மண்டலமுங்கொ

3 ண்டருளிய ஸ்ரீகுலசேகரதேவற்கு யாண்டு 38

4 கன்னிநாயற்று பூர்வபக்ஷத்து திருதியையும்

5 ...வாக்கிழமையும் பெற்ற சோதிநாள் மாடக்குளக்கீழ்

6 மதுரையில் உடையார் திருத்தொண்டர்களில் முதலியார்

7 திருமேனிக்கு சுரபிநாட்டு மேன்மலை ஊரோம் பிடிபாடு

8 பண்ணிக் குடுத்த பரிசாவது முன்னாள் 36வது ஆவணிமாதம்

9 நாங்கள் விற்ற அகத்தியன் குளத்தில் வளையில் சுற்றுமுற்றில்

10 அகத்தீசுரமுடைய நாயனார் தேவதானம் நீக்கிநின்ற நஞ்செய்

11 புஞ்செய்க்கு துண்டிப்பாக நிச்சயித்து எங்களுக்கு முதலி

12 ல் இறுத்தும் போந்த அச்சு இவச்சு ஒன்றும் இவ்வச்சால்

13 மடபாதி விநியோகமும் எங்களூரில் நின்றுங் கழித்து

14 [திருக்] காய்க்குடிக்குமாக ...

15 யுமாக இன்னாலூரிலும் இறுத்துக்கொண்டு இப்படிக்கு எங்களுக்

16 கும் முதலியார் சுரபித்திருமேனி மடபுற இறையிலியாக உத்தமப

17 லத்தாபனம் பண்ணிக் குடுத்தமையில் நா...

18 லூராரும் மடபுற இறையிலியாக உத்தமபலத்தா. .

19 குடுத்த இவ்வகத்தியன் குளத்துக்கு பெருநான்கெல்லையாவது கீழ்பா
20 ற்கெல்லை சேதாநாடாழ்வான் புஞ்சைக்கு தேவேந்திர நாடாழ்வான்...
21 மேற்கும் தென்பாற்கெல்லை ...யன்செய்கும்

## 19:4

இடம் : *அர்த்தமண்டபம், தெற்குப்புறச்சுவர்.*

காலம் ; *முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன், யா: 38, (கி.பி. 1306).*

செய்தி : *மேலேகண்ட கல்வெட்டுச் செய்தியே இதிலும் கூறப்படுகிறது. ஆனால் இக்கல்வெட்டு மடப்புற இறையிலியான அகத்தியன் குளத்தோடு தொடர்புடைய திருக்காய்க்குடி, சூழுமரசர்கண்டன், அறனூற்றுவனேரி, வீரசூளாமணி முதலிய நான்கு ஊரவையினர் சேர்ந்து மேல்மலை ஊரவையினர்க்கு இதுதொடர்பாக பிரமாணம் செய்து கொடுத்ததைத் தெரிவிக்கிறது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ மெற்கீத்திகு
2 மேற் ஸ்ரீகோமாற பன்மரா
3 ன திருபுவனச் சக்கரவத்திகள்
4 எம்மண்டலமுங் கொண்டருளிய
5 ஸ்ரீகுலசேகரதேவற்கு யாண்டு முப்பத்
6 தெட்டாவது கன்னிநாயற்று பூர்வபக்ஷத்
7 துவிதியையும் செவ்வாய்கிழமையு
8 ம்பெற்ற சோதிநாள் சுரபிநாட்டுத் திருக்காய்க்கு
9 டி ஊராரும் சூழுமரசர்க்கண்டன் ஊரவரும்
10 அறுனூற்றுவனேரி ஊரவரும் வீரசூளாமணி யூர
11 வரும் மேன்மலையூரவற்கு பிரமாணம் பண்
12 ணிக்குடுத்த பரிசாவது தாங்கள் முதலியார்
13 சுரபித் திருமேனிக்கு விற்ற அகத்திக்குளத்துக்குத
14 ங்களூரில் நிச்சயிப்பான அச்சுலே அகத்திக்குளத்து
15 க்கு ஒரு அச்சும் கழித்து எங்களூர்களிலே விருத்திக்கொ
16 ண்டு பா. வாட்டை...
17 டிறையிலி மடபுறமாக... செல்லும் படியாகத் தி
18 ருச்சூலக்கல் நாட்டிக்குடுப்பது இப்படி ஸம்மதித்து
19 மடப்புற இறையிலியாக திருசூலம் நாட்டி பிரமாணம் பண்ணி

20 க்குடுத்தோம் திருக்காய்குடி யூரவரும் சூழுமரச[ர்] கண்டன்

21 ஊரவரும் அறுனூற்றுவனேரி யூரவரும் சூ

22 ளாமணி யூரவரும் மேன்மலை யூரவற்கு இளங்

23 கோதரையனெழுத்து மங்கலா தேவநாடாழ்வான் எ

24 ழுத்து . .

25 சுந்தரபாண்டிய பல்லவதரையன் எழுத்து திருக்கு...

26 பல்லவதரையனெழுத்து எற்சோழ பல்

27 .. பல்லவதரையனெழுத்து நல்லசங்க தேவனெழுத்து

28 சுந்தரபாண்டிய நாடாழ்வான்னெழுத்து

29 . தரையன் எழுத்து வீரப்புலிநாடாழ்வான் எழுத்து

30 வஞ்சிமண்டல பரைய எழுத்து தொழு...வதரையன்னெழுத்து மங்கலா பல

31 னெழுத்து மங்கல பலவத்தரையன் எழுத்து

32 பூவன விச்சாபன்மன் எழுத்துய்ய பாண்டிய நாட்டு

33 கணபதிபரையன் எழுத்து பல்லவரையன் எழுத்து

34 வீரசங்கன் எழுத்து அதியமழகியநாடாழ்வான் எழுத்து

35 அஞ்சாத சங்கப்பேரையன் எழுத்து செயதுங்கன் எழுத்து

36 பரிமேல்வழகங்கன் நாடாழ்வான் எழுத்து காளை

37 இருக்கைவேழ்நாடாழ்வான் எழுத்து கசபைராயன் எழுத்து

38 வீரபுலிபன்மன் எழுத்து செயபாண்டிய பன்ம எழுத்து

39 வடமுகத்தரையன் எழுத்து வஞ்சுவராயன் எழுத்து

40 வண்டுவராபதி நாடாழ்வான் எழுத்து சடைப...நா

41 டாழ்வான் எழுத்து யாதவராயன் எழுத்து

42 புகல் இடங்குடுத்த நாடாழ்வான் எழுத்து

43 தென்னவராயன் எழுத்து வழிதிப்பன்மர் எழுத்து

## 19:5

*இடம்* : *கருவறை, வடபுற அதிட்டானம்.*
*காலம்* : *கி.பி. 13ஆம் நூற்றாண்டு.*
*செய்தி* : *திருநந்தவனப்புறமாக இறையிலி நிலம் அளித்ததைத் தெரிவிக்கிறது.*

***பகுதி -அ***

1 ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு 5வது நாள் 342 னால் சுரநாட்டு மேல்மலை அழகிய செழீசுவரமுடையாற்கு தலத்தாரில் திருச்சிற்றம்பல

2 முடையார்க்கு இவ்வூர்குளத்து வடக்கடைகொம்பில் நந்தவனஞ் செய்யும்.. மேற்கு ஜீவனமுள்ளிட்டு வேண்டுவனவுக்கு இவ்வூர் அதியமழகியான் எ

3 . உழவு தவித்த காராண்மையாட்சி யுள்ளிடடு தருவதான அச்சு காரியவாராய்ச்சி வெட்டிப்பாடடம் பஞ்சுபீலி சந்திவிக்கிறகப்பேறும் வாசல்

4 ...பெறும் இலாஞ்சனைப்பேறும் தறியிறை செக்கிறை இடைவரி இனவரி பொன்வரியும் மற்றும் எப்பேர்பட்டனவும் உட்பட அஞ்சாவது முதல் திருநந்தவனப்புறம் இறை

5 . .இறையிலியாக இடப்பெறவேணுமென்று அழகிய செழிகுவர முடையார்க்கு தவத்தாரில் திருச்சிற்றம்பலமுடையான் இவ்வூர் குளத்து வடக்கடைகொ

6 .. பில் செய்விக்கிற அரசுகண்டராமன். திருநந்தவனந். .இவன் அக்கு இவ்வூர் அதியமழகியான்குளம் உழவுதவுத்து மியாட்சியும் கடமையும் அந்

7 ..அந்தராயமும் வினியோகமும் தருவதான அச்சும் .. பஞ்சுபீலியும் சநதிவிக்கிரகப்பேறும் வாசல்ப்பேறும் இலாஞ்சனைபேறும் தறியிறை செக்கிறை

8 தட்டார்பாட்டமும் இடைவரி இனவரி இவ்வாண்டு முதல் திருநந்தவனப்புறம் இறையிலியாக இடப்பெறவேணுமென்று இப்படி சந்திராதித்தவல்

**பகுதி – ஆ**

9 ...மாட்டறிந்தேன் அடைவார் எழும்.

10 த்துப்பெருமாள் பெருங்கருணைப்பெருமா...

11 தன் தற்குறிக்கும் இவர் தம்பி உடையார்க்கு

12 ...குறிக்கும் ஆக இவ்விருவர் தற்குறிக்கும் தற்குறிக்கும்

13 டடெரி நகைகண்பெருநிதி ... பெருமாள்

14 எழுத்து இப்படிக்கு நம்பிரான்தோழன் உடை....

15 கல்விலும் செம்பிலும் வெட்டி. .

16 போகவும் இப்படிக்கு

## 19:6

*இடம் : அர்த்தமண்டபம், வடபுற அதிட்டானம்.*

*காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு.*

*செய்தி : இக்கோயில் அம்மனுக்கு இறையிலி அளித்த செய்தியை தெரிவிக்கிறது. இக்கல்வெட்டின் அடியில் சகதிப் படையிலும் கல்வெட்டு உள்ளது. இது புதைந்துள்ளது.*

1 குளத்தில் சிறுமடைப்போக்கில் நிலம் அரைமாவும் நம்உழவு தவிந்து

2 இறையிலியாக குடுத்தோம் இப்படிக்குடுத்த இந்நிலங்களுக்கு காராண்

3 கிழமை கடமை அந்தராயம் வினியோகம் பெறுதற் செக்கிறை தட்டளி

4 பாட்டம் இடைவரி இனவரி பொன்வரி எப்பேர்பட்டனவும் தவித்து இந்நாச்சியார்க்கு

5 திருநாமத்துக் .. ப்படிக்கு குடுத்த இது சந்திராதித்தவ... ரைச் செல்வ...

6 ...செம்பிலும் வெட்டிக்கொண்டு திருசூல

7 ஸ்தாபநமும் ப. . பாகனான துவராபதி வேளான் எழுத்து

8 சியாழிப்பிள்ளை சிவந்த பாதத்தான் எழுத்து இவை... மன்றமுடையான் எழுத்து இவை அரசநாராண... இவை ஸ... தேவன் எழுத்து

## 19:7

இடம் : *விநாயகர் கோயில், முன்மண்டபத்தூண்.*
காலம் : *விகாரி வருடம், (சுமார் கி.பி.1900).*
செய்தி : *திருச்சுற்றிலுள்ள விநாயகர் கோயிலை சொக்கலிங்கபுரத்தில் இருந்த கட்டசிம்பாம்பலக்காறன் பிச்சன்அம்பலம் அவன் மனைவி விராயி ஆகியோர் திருப்பணி செய்ததைக் கூறுகிறது.*

1 விகாரி ஸ்ரீ அற்பி

2 சி மீ ம் 9 சொ

3 க்கலிங்க புற

4 திலிருக்கும் வலை

5 யரில் கட்டசிம்பா

6 ம்பலக்காறன் பிச்

7 சநம்பலம் அவன்

8 பெண்சாதி விரா

9 யி மேற்படி குடும்பம் பிள்ளை

10 யாரிடத்தில் நித்தியசே

11 ருவை.

---

* கலவெட்டுகளைத் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை மாணவர் திரு செல்வராஜ் முனைவர் சு இராசகோபால ஆகியோர் தமது களஆய்வின்போது கண்டறிந்தனர்

# 20. புதுப்பாளையம் சுந்தரபாண்டியன் கல்வெட்டு

ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்.

இடம் : திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம், புதுப்பாளையம் என்னும் ஊரில் நடராசன் என்பவர் நிலத்தில் அமைந்துள்ள கற்பலகை.

காலம் : சுந்தர பாண்டியன், யா:13, (கி.பி. 1274).

செய்தி : திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள நாயனார்க்கு திருநாளும், பூசையும் செய்ய தேவதானமாக நிலக்கொடை அளிக்கப்பட்டமை.

1 ஸ்வஸ்திஶ்ரீ திருவாய்க்கேழ்வி முன்
2 பாக திருபுவன சக்கரவர்த்திகள்
3 ஶ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யா
4 ண்டு 13வது ஜெயங்கொண்ட
5 சோழ மண்டலத்து பல்குன்ற
6 கோட்டத்து பொய்நாட்டு சோ
7 ம சிறுப்பாக்கத்துக்கு வட திருவ
8 ண்ணாமலை உடைய நாய
9 நார்க்கு தேவதிருநாளும் எழுந்
10 தருளி பூசைக்கொண்டு போந்
11 த பின்பு இந்நாயனார்க்கு திரு..
12 குலைந்து ஊரும் நாடும் ஏழு
13 புலத்தார் ....
14
15 க்கரவர் திருப்பணியும்
16 பூஜையும் செல்வதாக
17 இவ்வூர் நாற்பாற்கெல்லையில
18 உள்ளிட்ட அனைத்தாயங்
19 களும் இழந்து இறையிலியாக
20 குடுத்து நாட்டிலே .
21 வேலி தூணிப் பதக்கு நெ
22 ல்லும் குடி குறுணி ப
23 ணம் . .
24 தெய்வ தானமாகக் கொண்டு
25 .. .. .
26 பொய் நாட்டவர்
27 சோம சிறுபாக்கத்து ...
28 .

# 21. வீரகேரளரின் இருகூர் செப்பேடுகள்

இரா. நாகேஸ்வரசிவம், இருகூர்.

இக்கட்டுரையாளர் குடும்பத்தில் காலங்காலமாக இச் செப்பேடுகள் பாதுகாத்து வரப்படுகின்றன. இந்தச் செப்பேடுகளை கோவைகிழார் இராமச்சந்திரன் செட்டியார் பார்வையிட்டார் என்று தெரிகிறது. அண்மையில் கோவை அகழ்வைப்பகத்துக் காப்பாட்சியர் ர. பூங்குன்றன் செப்பேடு வாசகத்தைப் படித்து விளக்கினார்[1]. மொத்தம் மூன்று ஏடுகள் இருந்துள்ளன. ஆனால் தற்போது முதல் மற்றும் மூன்றாம் ஏடு மட்டுமே உள்ளன.

இராஜராஜபட்டன் என்பவனுக்கு அரசனால் இந்தச் செப்பேடு அளிக்கப் பெற்றது. செப்பேடு 'ஸ்வஸ்திஸ்ரீ கோனேரின்மை கொண்டான்' என்று தொடங்குகின்றது. அதனால் இந்தச் செப்பேட்டை அளித்த அரசன் யார் என்பதை யுகித்து முடிவு செய்ய வேண்டியுள்ளது. செப்பேட்டைப் பெற்றவன் இராஜராஜபட்டன் என்று பெயர் வைத்திருப்பதால் வீரகேரளர்களில் இராஜராஜ தேவன் என்பவன் கொடுத்ததாக இருக்கலாம், அல்லது அவன் மகன் கரிகாலசோழ தேவன் கொடுத்ததாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பேரூரில் கரிகாலசோழ தேவன் கல்வெட்டுகள் ஐந்து கிடைத்துள்ளன. அந்தக் கல்வெட்டுகளில் இராஜராஜ கரிகாலசோழ தேவன் என்று குறிக்கப் பெறுவதால் கரிகால சோழ தேவன் என்பவன் இராஜராஜ தேவனுடைய மகன் என்று கொள்கிறார்கள். மேலும் கரிகால சோழ தேவன் பன்னிரண்டு ஆண்டுகள் ஆண்டுள்ளான். செப்பேடு பதினைந்தாம் ஆட்சி ஆண்டு என்று குறிக்கப் பெறுவதால் இச்செப்பேடு கரிகாலனுடைய தந்தை இராஜராஜதேவன் என்பவனால் அளிக்கப் பெற்றது என்று கொள்ளலாம். இந்த மன்னன் கேரளகேசரி அதிராஜராஜன் என்பவனின் மகன். தென் கொங்கில் ஆட்சி செய்த வீரகேரளமன்னனர்கள் வீர நாராயணன் வீர கேரளன் ஆகியோரோடு, ராஜராஜ தேவன் வரை எட்டு மன்னர்கள் ஆண்டதாக கே.வி. சுப்ரமணிய அய்யர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இராஜராஜ தேவனுக்குப் பின் கரிகாலசோழ தேவன், வீரநாராயணன் ஆகியோர் ஆண்டுள்ளனர். வீரகேரளர்கள் ஆட்சியாண்டைத் தவிர சக ஆண்டு எதையும் குறிப்பிடவில்லை. அதனால் ஒவ்வொரு மன்னனும் எந்த வரலாற்றாண்டிலிருந்து எந்த வரலாற்றாண்டு வரை ஆண்டான் என்பது உறுதிபடுத்தப் பெறவில்லை.

செப்பேட்டில் கொங்குச் சோழன் உத்தமசோழன் (1110-1117) என்பவன் கோடிக்காரைத் தொழுவில் இவனுடைய மூத்த அப்பாட்டர் பள்ளிப்படை அருகில் ஒரு கோட்டையுயைக் கட்டிய செய்தி உள்ளது. இந்தக் கோட்டையை அழிக்க வீரகேரள மன்னன் வஞ்சகர் வஞ்சகன் கோட்டை

என்ற பெயரில் ஒரு கோட்டையைக் கட்டினான். இந்தச் செய்திகள் முதல் ஏட்டில் உள்ளன. இடையிலிருந்த ஏட்டில் கொங்குச் சோழன் உத்தமசோழனுக்கும், இந்தச் செப்பேட்டை அளித்த வீரகேரள மன்னனுக்கும் இடையில் நடைபெற்ற போரைப் பற்றி விவரித்திருக்க வேண்டும். மூன்றாவது ஏட்டில் செப்பேட்டைப் பெற்றவன் குடும்பத்தினர் அமரபுயங்கர பெருமாள் காலம் தொடங்கி இராஜராஜ தேவன் காலம் வரை (985-1120) வெற்றிலைக் கொளு சுங்கத்தை சோழ நாட்டிற்குக் கொண்டு போய் கொடுத்து வந்துள்ளார்கள். போரில் பணியாற்றியதற்காகவும் இந்தச் சுங்கத்தை சோழ நாட்டுற்குக் கொண்டு சென்றதற்காகவும் இராஜராஜதேவன் பல ஊர்களின் சிவன் கோயில் காணியாட்சியை அந்தக் குடும்பத்திற்கு அளித்துள்ளான். அமரபுயங்கரன் காலத்தில் வெள்ளலூர் சிவன் கோயில்கள், வாயறைக்கா நாட்டுச் சிவன் கோயில்கள், கோளூர், கோப்பாடி ஆகிய ஊர்களில் இருந்த சிவன் கோயில்கள், ஆகியவற்றின் காணியாட்சி இவன் குடும்பத்திற்கு அளிக்கப் பெற்றது.

இவை மட்டுமின்றி இராராஜதேவன் குறிச்சி, தென்கரை சூரலூர், வடகரை சூரலூர், இருகாலூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களின் காணியாட்சியையும் இவன் குடும்பத்திற்கு அளித்துள்ளான். மேலும் இவன் குடும்பத்திற்கு சீர்வரிசைகளையும் தந்துள்ளான். ஆண்வழிக்கு ஒற்றைச்சங்கு ஊதுதல், பெண் வழிக்கு இரட்டைச் சங்கு ஊதுதல், வளையம் வைத்தல், காலுக்குச் சந்தனம் பூசுதல், படாம் போர்த்துதல், வீட்டிற்கு இரண்டு நிலைக்கால் எடுத்தல், அதற்குச் சாந்து இட்டுக் கொள்ளுதல் ஆகிய வரிசைகளைத் தந்துள்ளான்.

செப்பேடுகள் தமிழ் மொழியில் தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றுள்ளன. சில கிரந்த எழுத்துகளும் உள்ளன. எழுத்துக்களை முதலில் புள்ளியிட்டு சரிபார்த்து பிறகு கோடாக மாற்றியுள்ளனர். சான்றுக்கு 'வருவதாகவும்' என்பதில் உள்ள 'ரு' 'ரி' என்று புள்ளியிட்டு எழுதப் பெற்று பிறகு 'ரு' என்று திருத்தி எழுதப் பெற்றுள்ளது. எழுத்தமைதியில் செப்பேட்டு காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கருதப்படுகின்றது.

**முதல் ஏடு, முன்பக்கம்.**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோநேரின்மை கொண்டான் பே

2 ரூர் நாட்டு வெள்ளலூர் ஆளுடையா

3 ர் தெந்நூர் ஆண்டா [ர்] கோயிலி


4 ல் காணியுடைய சிவப்பிர

5 ாமணந் பாரதுவாச கோத்திரத்து

**முதல் ஏடு, பின் பக்கம்.**

6 ஸ்ரீ கயிலாயம் உடையாந் பஞ்சநெதிவானந்நான இரா

7 ச இராச பட்டநுக்கு நம் மோலை குடுத்த படியாவது இவந்



படம் 21:1–4. இருகூர், வீரகேரளரின் செப்பேடுகள்.

8 நமக்கு செய்த பணி பொங்கலூற்கா நாட்டு அளுகை தொழா
9 ர் கண்ட வீமநல்லூர் அணித்திரப் பல்லவரையன் உத்த
10 ம சோழரைக் கண்டு அவர் தாதையையும் கொண்டு
11 புகுந்து கோட்டிகாரைத் தொழுவில் மூத்த அப்பாட்டர்
12 திருப்பள்ளிபடைக்குத் தெற்காக உத்தம சோழர் இ
13 ட்ட கோட்டை யெறிய நாம்இட்ட கோட்டை வஞ்
14 சகர் வஞ்சகந் கோட்டையிலே நிந்று சமக்க ...

**இரண்டாம் ஏடு, முன்பக்கம்.**

15 சியற்கு அமர பயங்கரப் பெருமாள்ளுகும் இவந்பாட்டந்மார்
16 செய்த பணி வெள்ளலூர் வெற்றிலை கொளுப் பசுங்காய்
17 இவை உள்படச் சோழ நாட்டுகு போய்குடுத்த
18 பணிக்கு அக்காலத்தில் குடுத்த பழங்காணி வெள்ள
19 லூர் சிவத்தாநங்களும் வாய்யறைக்கா நாட்டு சிவத்
20 தாநங்களும் கொளுர் சிவத்தாநங்களும் கொப்பாடி சி
21 வத்தாநங்களும் நாம் குடுத்த காணி குறிச்சியி சி
22 வத்தாநங்களும் தெந்கரை சூரலூர் வடகரை சூரலூர்
23 இருகலூர் இவ்வூர்களில் சிவத்தாநங்கள் யெழுவந மு
24 ளைப்பந இவர்கள் மக்கள் மக்களுக்கு மாறக்காணியாக

**இரண்டாம் ஏடு, பின் பக்கம்.**

25 விலையொற்றி தந்மதாந ஸ்ரீதநத்துக்கும் தாகவும்
26 இவந்நுக்கு குடுத்த வரிசை ஆண் வழிக்கு ஒற்றைச் சங்
27 கு ஊதி வருவிதாகவும் பெண் வழிக்கு இரட்டைச் சங்
28 கு ஊதி வருவிதாகவும் வளையம் வைப்பாநாகவும் காலு
29 க்குச் சந்தனம் பூசிவிதாகவும் பச்சைபிடாம் போற
30 பாநாகவும் இவந் அகம் இரண்டா நிலை எடுத்து
31 சாந்து இட்டு கொள்ளப் பெறுவாநாகவும் மற்று ந
32 ம் பிள்ளைகள்ளுக்குள்ள வரிசையெல்லாம் இவந் மக்க
33 ள் மருமக்கள் செய்து கொள்ளப் பெறுவதாகவும் நம் மோலை
34 ப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ள நம் ஓலை குடுத்தோம்.
35 செம்பிய

**இடது ஓரத்தில்**

36 ன் உத்த
37 ரமந்தி

38 ரியெ

39 ழுத்து

40 யாண்டு 15

41 வது ள் 216

42 நம்தமர்

43 பாற்படு

44 த்து குடுக

1 இச்செப்பேடுகள் பற்றி கோவைகிழாா பேரூர்ப் புராணத்திற்கு அவரெழுதிய வரலாற்று முனனுரையில் குறிப்பிட்டுளளாா் இந்தச் செபபேடுகள் பேருா குருக்களிடம் இருப்பதாகவும. அவை கோனேரினமை கொண்டான் காலததவை என்றும் அவர் குறிபபிடடுளளார் அவற்றில ஓர் ஏடடில உத்தமசோழன் (கொங்குச் சோழமன்னன்) காளரததொழு கோட்டையை எறியலாகும விஷயங்கள் கூறப்பெற்றிருககின்றன எனறும மறறொரு ஏடடில பிராமணர்களுககு அளிக்கப் பெற்ற உரிமைகள் பற்றிய செய்திகள தரபபடடிருபபதாகவும குறிபபிடடுள்ளாா இசசெப்பேடுகளின் முழு வாசகத்தைக கணடறிய பேரூர் குருககளிடமும. வெள்ளலூா குருக்களிடமும் கேடடபோது அவர்களிடம செபபேடுகள் இல்லை எனறு கூறிவிடடார்கள் 1998ஆம் ஆணடு ஆகஸட மாதம இருகூா சென்றிருந்த போது திரு இராமசாமி அய்யர் அவாகள தன்னிடமிருந்த இரண்டு செபபேடுகளை வாசிததளிககும் படிக் கேட்டுக் கொணடாா. அசசெப்பேடுகளை வாசித்த போது அவை கோவை கிழார் குறிப்பிடும் செப்பேடுகள் என்று அறிய முடிந்தது.

–பூங்குன்றன்

# 22. ஏழு செம்பொன் கல்வெட்டுகள்

**இல. தியாகராஜன், அரியலூர்.**

விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் – வேட்டவலம் நெடுஞ்சாலையில் சூரப்பட்டிலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் ஏழு செம்பொன் என்னும் சிற்றூர் உள்ளது. ஏஷுமூர் எனவும் இவ்வூர் அழைக்கப்படுகிறது. ஏழு குடங்களில் பொன் நிரப்பப்பட்டு இவ்வூர்க் கோயில்களில் உள்ள சுரங்கங்களில் புதையாலாக வைக்கப்பட்டிருப்பதால் ஏழுசெம்பொன் என்ற பெயர் ஏற்பட்டதாக ஊர்மக்கள் தவறாக நம்புகின்றனர்.

இவ்வூரில் வழிபாடின்றி சிதைந்தநிலையில் உள்ள சிவன் கோவிலில் 2 கல்வெட்டுகளும் வழிபாட்டில் உள்ள பெருமாள்கோயிலில் 6 கல்வெட்டுகளும் உள்ளன. கல்வெட்டுகள் இவ்வூர்ப் பெயரை ஏழிசை மோகன் என்று குறிப்பிடுகின்றன. இதுவே ஏழுசெம்பொன், ஏகூமூர் என்று மருவி விட்டது. இவ்வூர் பனையூர் நாட்டு இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தின் (எண்ணாயிரம்) தென்பிடாகையாக இருந்தது. இவ்வூர்க் கோயில்கள் ஒட்ட (ஒரிசா) மன்னன் குமாரஹம்வீரர் என்பவரின் தமிழகப் படையெடுப்பின்போது (கி.பி. 1463) தாக்குதலுக்கு உள்ளாயின. சேதமுற்ற கோயில்களை விஜயநகர மன்னன் சாளுவநரசிங்கனின் அதிகாரி அன்னமரசன் என்பவர் சீர்செய்தார். இப்படையெடுப்பை ஒட்டியன் கலபை என ஏழுசெம்பொன் மற்றும் இப்பகுதியில் உள்ள திருவாமாத்தூர், நெற்குணம், ஆலூர், முன்னூார், ஐம்பை, இடையாறு ஆகிய ஊர்க்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஏழிசை மோகன் என்ற பெயரில் கூடலூரைத் (இன்றைய கடலூர்) தலைநகராகக் கொண்டு சோழர்காலத்தில் பல குறுநிலத்தலைவர்கள் ஆண்டுள்ளனர். ஏழிசைமோகன் குலோத்துங்க காடவராயன், ஏழிசை மோகனான ஜனநாத கச்சியராயன், ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள், கூடல்ஏழிசை மோகன் ஆளப்பிறந்தான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும், தனி அரசு செய்த காடவகுல மன்னன் கோப்பெருஞ்சிங்கனுக்கும் (1216–1279) ஏழிசைமோகன் என்ற பெயர் இருந்தது. இதனால் இப்பெயர், இப்பகுதியை ஆண்ட இம்மன்னர் காலத்தில் ஏற்பட்டது எனலாம். இருப்பினும், சோழர் மற்றும் கோப்பெருங்சிங்கன் காலத்துக் கல்வெட்டுக்கள் எதுவும் இங்கு இல்லை. இவ்வூர்க் கோயில்களில் உள்ள பழமையான கல்வெட்டு கி.பி. 1316க்குரிய ஐந்தாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டாகும். எனவே, கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பெற்றது எனலாம். சிவன்கோயில் தென் திருக்காளத்தி உடையநாயனார் எனவும், பெருமாள் கோவில் தென்திருவேங்கடபெருமாள் கோவில் எனவும் அழைக்கப்படுகின்றன.

## 22:1

*இடம் : பெருமாள் கோயில் மகாமண்டபத் தென்சுவர் பட்டிகை.*
*காலம் : ஐந்தாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், (கி.பி. 1316).*

1 திருமுகப்படி துல்யம் ஸ்வஸ்திஸ்ரீ மெகீர்த்திக்கு முன்னாக திருபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டாந் நடுவில் மண்டலத்துப் பனையூர் நாட்டு இராசராச சதுர்வேதிமங்கலத்து தென்பிடாகை அழகிய சீயநல்லூர்ப் பற்றில் ஏழிசை மோகனில் நாயனார் தென் திருவேங்கடமுடையான் கோயில் தானத்தாற்கு இன்னாயனார்க்கு நம் பேரால் கட்டின சுந்தரபாண்டியந் திருநாளுக்கும்

2 ஸந்திக்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்தநிமந்தங்களுக்கு உடலாக இப்பற்றில் கண்ணன் ஏந்தல் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய் ஊர்நத்தமும் ஏரியும் ஏரிநீர்க் கோப்பும் ஏரிவாய்ப் புறவடையும் குளவடை மாவடை மரவடை தறியிறை தட்டார்ப் பாட்டஞ் செட்டிறை செக்குக் கடமை நாட்டு வினியோகம் வெட்டி அமஞ்சி மற்றும் எப்பேர்ப்பட்ட அனைத்தாயங்களும் இழந்து பதின்மூ

3 ன்றாவது ஆடி மாதம் முதல் திருவிடையாட்டம் முதலடங்க இறையிலியாகத் தந்தோம் பன்னிரண்டாவது வரையும் இந்தக் கண்ணன் ஏந்தலுக்கு நாட்டு விழுக்காடு பொன் முப்பதும் பதின்மூன்றாவது முதல் வரியிலார் கணக்கிலுங் கழித்து விட்டோம் இன்னாள் முதல் கைக் கொண்டு காடுவெட்டி திருத்திக் குடியும் ஏற்றிப் பயிர்ச் செய்வித்துக் கொண்டு இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாக

4 க் கொண்டு நான்கெல்லையிலுந் நத்தத்திலும் திருவாழிக் கல்லும் நாட்டி ஸந்த்ராதித்தவரை செல்வதாக கோயிலிலே கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொண்டு அனுபவிக்கவும் பார்க்க யாண்டு 13–நாள் 300 இவை நெட்டூருடையான் எழுத்து.

## 22:2

*இடம் : பெருமாள் கோயில் மகாமண்டபத் தென்சுவர்.*
*காலம் : ஆறாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன், யா:2, (13.5. 1339).*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறுபந்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்ரமபாண்டிய தேவற்கு யாண்டு இரண்டாவது இஷப நாயற்று பூர்வ பக்ஷத்து ஸதுத்தியும் வியாழக்கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் ராஜராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டு அழகிய சீய நல்லூரப்பற்றில் நாட்டவரோம் பெருமாள் திருமேனிக்கு நன்றாக தேவர் கன்னனு மொவ்வாத பாண்டிய தேவர் ஆழ்வார் கந்தாடை உத்தாசி அகிலம்பே யாஜியாற்கு அஷ்டராக்ர முள்ளிட்ட குதுக்களுக்கு ஆலிஜாதக தக்ஷிணையாகக் குடுத்த

2 அகரம் கண்டமார்த்தாண்டை ஸதுர்வேதி மங்கலத்துக்கு திருமுகப்படி நிச்சயித்த ஸதுவேதி பட்டர்கள் பேர் ஐம்பத்திரண்டுக்குப் பங்கு ஐம்பத்து இரண்டு திருவிடையாட்டம் பங்கு ஒன்றும் தேவதானம் பங்கு ஒன்றும் ஆகப் பங்கு ஐம்பத்து நாலுக்கும் வெள்ளரிப்பட்டும் இலுப்பைப்பட்டும் தச்சபாடியும் நாற்பாலெல்லைக்கு உட்பட்ட நஞ்செய் நிலமும் புன்செய் நிலமும் அனைத்தாயங்களும் அனைத்து வரிகளும் உட்பட ஸர்வமாந்ய அகர இறையிலியாக ஸந்த்ராதித்தியவத் செல்லுவதாக உதகம் பண்ணிக் குடுத்தோம் இந் நாட்டவரோம் உ

## 22:3

*இடம் : பெருமாள் கோயில் மகாமண்டபக் கிழக்குச்சுவர் வாயில் வலப்புறம்.*

*காலம் : கி.பி. 16ஆம் நூற்றாண்டு(?).*

1 ஸ்வஸ்திஸ்ரீ க்ஷய வருஷ

2 ம் ஆடி மாதம் அஞ்சாந்திய

3 தி ஏழிசை மோகன் பெருமாள்

4 தென் திருவேங்கடப் பெரும

5 ாளுக்கு திருவிளக்கு குடி ஆக விட்ட

6 பள்ளி கட்டுச் சேனன் திரு வீரா

7 ண்டை சந்திராதித்தவரை

8 யும் செல்லக் கடவதாகவும்

9 இதுக்கு விகாதம் சொன்னார்

10 உண்டாகில் கெங்கைக் கரையில்

11 குரால் பசுவைக் கொன்ற பாவம்

12 கொள்வான்

## 22:4

*இடம் : பெருமாள் கோயில் அர்த்த மண்டபத் தென்சுவர் முப்பட்டைக் குமுதம்.*

*காலம் : ஆறாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் யா:6, (17.7. 1342).*

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறுபன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்ரம பாண்டிய தேவர்க்கு யாண்டு 6வது கக்கடக நாயற்று அபர பக்ஷத்து புதன் கிழமையும்பெற்ற

2 உத்திராடத்து நாள் ராஜராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டு அழகிய சீயநல்லூர்ப் பற்றில் நாடடவரும் அரசவல்லபுரப்பற்று நாட்டவரும் கந்தாடை உத்யதாசி அகிலம்பே யாஜியாற்கு உடையார்

3 ...உத்தமாக்ரத்துக்கு தக்ஷிணையாக குடுத்த மோழை ஏந்தலான விக்கிரம பாண்டியச் சதுர்வேதிமங்கலத்து நன்சை புன்சை நான் கெல்லைக்குள்ளு நாங்கள் கல்லு நட்டுக் குடுத்தபடியே சந்திராதித்த வரை செல்வதாக குடுத்தோம்.

## 22:5

*இடம் : பெருமாள் கோயில் அர்த்த மண்டப வடசுவர் முப்பட்டைக் குமுதம்.*

*காலம் : நரசிங்கராயர், சகம். 1393, (கி.பி. 1471).*

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் 1393–ன் மேல் செல்லாநின்ற விக்குறுதி வருஷம் அற்பசி மாதம் 16 தியதி த்ரயோதஸியும் ஸோமவாரமும் பெற்ற அஸ்வதி நாள் ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரந் மேதினி மீச்வரகண்ட கட்டாரி சாளுவ நரசிங்க உடையார் காரியத்துக்குக் கடவ அன்னம அரசர் அய்யன் நம்முடைய நாயக்கத்தனம் ஆன வழுதிலம்பட்டு உசாவடியில் தெய்வதானமும் உம்பளிச் சீர்மையில் தானத்தாற்கு குடுத்த தன்ம சாதனப் பட்டயம் இந்தப் பெருமாள் திருநாமத்துக்காணியில் முதல் உள்ளது தண்டிக் கொண்டு கிலமாய் இருந்த கோயில் கோபுரம் மண்டபங்களுங் கட்டுவித்து அங்கரங்க வைபோகம் அமுதுபடியும் நடத்திக் கொண்டு

2 தெய்வ ஸ்தானமும் படைவீட்டு உசாவடியில் தெய்வ ஸ்தானமும் யிவை எல்லாம் பத்து எட்டுக் காலம் ஒட்டியன் கலகத்திலேப் பாழாய் கோபுரங்கள் மண்டபங்கள் விழுந்து கிலமாய் இருக்கையாலே இந்த ஸ்தானங்கள் குடியும் வந்தேறி கிலமாய் இருந்த கோபுரங்களும் மண்டபங்களும் கட்டுவித்து பூசை புநஸ்காரமும் நடக்கதக்கது ஆக கட்டளை பண்ணின நரசிங்க இராச உடையார் தன்மம் ஆக பூறுவத்தில் தாங்கள்

3 அரைமனைக்கு இறுத்து வருகிற விபூதி காணிக்கை சூலவரி இடங்கை வரி உபாதி வினியோகமும் சோடியும் சறுவமானியம் ஆகவிட்ட அளவுக்கு படைவீட்டு உசாவடி அழகிய சீயநல்லூர் பற்று ஏழிசை மோகன் பெருமாள் தெந் திருவேங்கடப் பெருமாள் கோயிலில் இரேகை சோடி காணிக்கை உபாதி வினியோகம் உள்ளதும் இந்த தெந்திருவேங்கடப் பெருமாளுக்குச் சறுவமானியம் ஆக விட்டு இந்த கோயிலில் சறுவமானியம்

4 ஆக சந்திராதித்தவரையும் அனுபவித்துக் கொண்டு நரசிங்க இராச உடையார் தன்மமாக பூசை புநஸ்காரமும் நடத்தி சுகத்திலே இருக்கவும் இந்த சீர்மைகளில் பலதெளி உள்ளதும் சறுவமானியம் ஆக விட்ட அளவுக்கு இந்த தன்மங்களுக்கு அஹிதம் பண்ணினார் உண்டாகில் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாபத்திலே போக கடைவனாகவும் ஸுபமஸ்து

## 22:6

இடம் : *பெருமாள் கோயில் கருவறை மேற்கு, தெற்கு சுவர் முப்பட்டைக் குமுதம்.*

காலம் : *கிருஷ்ணதேவராயர், சகம். 1434, (கி.பி. 1512).*

1 ஸ்வஸ்திஸ்ரீமன் மஹாமண்டலேச்வர மூவராயர் கண்டன் ஸ்ரீ வீரப்ரதாப நரசிங்கய தேவமஹாராயர் குமாரர் க்ருஷ்ண தேவமஹாராயர் ப்ருதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற ஸகாப்தம் 1434ல் மேற்செல்லா நின்ற பிறசார்பதி வருடம் விருச்சிக நாயற்று பூறுவ பக்ஷத்து த்ருதியையும் உத்திராடமும் பெற்ற

2 அத்தத்து நாள் படைவீட்டு உசாவடி பனையூர் நாடான எண்ணாயிரம் தென் பிடாகை தனியூர் ஏழிசை மோகன் திருவேங்கடத்தபபனுக்கு [வெளய] கூடிய தெக்கல்பாடி திருநாமத்துக்காணியாக க்ருஷ்ணராயர் தர்ம்மமாக சந்திராதித்தவரையும் செல்லக் கடவதாகவும்

## 22:7

இடம் : *சிவன் கோயில் மகாமண்டப வடசுவர் முப்பட்டைக் குமுதம்.*

காலம் : *நரசிங்கராயர், விக்ருதி, (கி.பி. 1471).*

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்ருதி வருஷம் மாசி மாதம் 16தேதி ஸ்ரீமது அன்னம அரசய்யன் காரியத்துக்கு கடைவ திம்மு நாயக்கர் ஏழிசை மோகன் உடையார் கோயில் பெருமாள் கோயில் தானத்தாற்க்கு குடுதத தன்மசாதனப் பட்டயம் தங்களூர் உடையார் கோயில் பெருமாள் கோயில் கண்ணன் ஏந்தல் வேள் ஏந்தல் உட்பட இடங்கைவரி ஆயம வால்வரி உட்பட சறுவமானியம ஆகவிட்ட அளவுக்கு இந்தப் பொன் உள்ளது அனைத்தும்

2 நரசிங்க இராச உடையார் தன்மம் ஆக பூசை புநஸ்காரமும் திருவிளக்கும திருநாள் திருப்பணியும்

3 நடத்தி சுகத்திலே இருக்கவும் இந்த தன்மத்துக்கு அஹிதம் பண்ணினான் உண்டாகில் கங்கை கரையில் காராம்பசுவைக் கொன்ற பாபத்திலே போகக் கடைவன் ஆகவும்

## 22:8

இடம் : *சிவன் கோயில் கருவறைத் தென்சுவர் முப்பட்டைக் குமுதம்.*

காலம் : *கிருஷ்ணதேவராயர், சகம். 1440, (கி.பி. 1518).*

1 ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேச்வரன் மூவராய கண்டன் ஸ்ரீவீரப்ரதாப க்ருஷ்ணதேவ மஹாராயர் பருதிவிராச்சியம் பணணி அருளா நின்ற

சகாத்தம் 1440 மேல் செல்லா நின்ற ப்ரசாபதி வருஷம் வ்ருச்சிக நாயற்று பூறுவ பக்ஷத்து திரு

2 தியும் உத்திராடமும் பெற்ற அத்தத்து நாள் படைவீட்டு உசாவடி பனையூர் நாட்டு எண்ணாயிரம் தென் பிடாகை தனி ஊர் ஏழிசை மோகன் தென் திருக்காளத்தி உடைய நாயினாற்கு அரசலிபுர பற்று . .னாவிலங்காதான்பட்டு

3 திருநாமத்துக்காணியாக கிருஷ்ணராயர் தன்மமாக சந்திராதித்தவரையும் செல்ல கடவதாகவும் ஸ்ரீ விருபாஷ அம்பிகாமக்கிழவர் அழகப்பெருமாள் எழுத்து உ

* இலஹூாக கலவெட்டு ஆய்வில் உதவிய தமிழகத் தொலலியல கழக உறுப்பினர்கள் பேராசிரியா க விஸ்வநாதன் இரா தனபால் மற்றும வேடடவலம கே மணிகண்டன ஆகியோருககும ஊா மககளுக்கும. பாண்டியர் கலவெட்டுகளின தேதியைக் கணித்து உதவிய அமரா குடநதை என் சேதுராமன் அவாகளுககும நன்றி உரியது

# 23. வேட்டமங்கலம் புற்பவன ஈசுவரர் கோயில் கல்வெட்டுகள்

*நாக. கணேசன், கரூர்.*

*கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம் கிராமத்தில் நத்தமேட்டுப்பகுதிக்கருகில் உள்ளது புற்பவன ஈசுவரர் கோயில். இதன் கருவறையின் அதிட்டானப் பகுதியிலுள்ள குமுதவரியில் வீரராசேந்திரனின் கல்வெட்டுகள் காணப்படுவதால் இக்கோயில் அம்மன்னன் காலத்தில் கட்டியதாகலாம். வீரராசேந்திரனின் 26வது ஆட்சியாண்டில் அரையநாட்டு துடுமலைச் சேர்ந்த காட்டு வேட்டுவன் முத்தன் சக்கையன், தெண்ணலைச் சேர்ந்த உய்யவந்தான் கையிலாயன், கிழங்கநாட்டு வேட்டமங்கலத்தைச் சேர்ந்த தட்டான் நடுவிலாகக்கண்ணான் உண்மையுணர்ந்த தேவன் ஆகியோர் இக்கோயிலிலுக்கு நொந்தாவிளக்கு எரிப்பதற்காக தனித்தனியே பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தனர். வீரபாண்டியனின் ஆறாவது ஆட்சியாண்டில் கிழங்கநாட்டு வேட்டமங்கலத்து ஊராரும் அரையர்களும் இக்கோயில் இறைவனுக்கு நிலக்கொடை கொடுத்தனர் விக்கிரம சோழனின் 14வது ஆட்சியாண்டில் வேட்டமங்கலத்து தென்சேரியைச் சேர்ந்த பூலுவவேட்டுவன் சிலம்பன் செஞ்சிறுப்பிள்ளை என்பவனும் நடுச்சேரியைச் சேர்ந்த கரடி வேட்டுவன் செய்யப்பிள்ளை என்பவனும் இக்கோயில் இறைவனுக்கு தனித்தனியே நொத்தா விளக்கு எரிப்பதற்காக பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தனர். அத்துடன் வேட்டமங்கலத்து தட்டான் ஆண்டப்பிள்ளை செந்தட்டான் என்பவனும் கிழங்கநாட்டு குமாரபுரத்து வெள்ளாளன் ஒருவனும் இக்கோயிலுக்கு திருநிலைக் கால்கள் செய்து கொடுத்துள்ளமையும் இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது.*

## 23:1

இடம் : *கோயில் முன்மண்டப மேல்புறச் சுவரின் தென்மேற்கு மூலை.*

காலம் : *13–ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யா
2 ண்டு 14ஆவது கிழங்கனாட்டு வேட்
3 டமங்கலத்து நடுவிற்சேரிக் கறடி வேட்டு
4 வரிற் செய்யபிள்ளை செய்யபிள்ளையேந்
5 வேட்டமங்கலத்தி னாயனார் புற்பவனமுடை

6 யாற்குச் சந்தியாதீப விளக்கொந்றுக்கு னா

7 ந் இக்கோயிலுற் பிராமணற்கு குடுத்த பழ

8 ஞ்சலாகை அச்சு ஒந்றுக்கும் சந்திராதி

9 த்தவரை குடங்கொடு கோயிற் புகுவாந் எரிக்

10 சு கடவாந் இது பந்மாஹேஸ்வ ரட்சை

## 23:2

இடம் : *கோயில் முன்மண்டபத்தின் தெற்குப்பக்கத்தில் சிதைந்து கிடந்த நிலைத் தூண்களைக் கொண்டு புதிதாக எடுத்துக் கட்டப்பட்டுள்ள வாயில் நிலையின் மேற்பகுதி.*

காலம் : *13-ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ வேடடமங்கலத்து தட்டாரில் ஆண்ட பி

2 ள்ளை செந்தட்டாந் தந்மம் இத்திருநிலைக்கால் நன்றாக

## 23:3

இடம் : *கோயில் முன்மண்டபத்தின் தெற்குப் பக்கத்திலுள்ள வாயில் நிலைக்கால்களில் மேற்குப்பக்க நிலைக்கால்.*

காலம் : *15-ஆம் நூற்றாண்டு.*

1 சுவஸ்த்

2 திஸ்ரீ வீர அ

3 ச்சுந்த இர

4 ாயற்கு செ ...

## 23:4

இடம் : *சிதைந்த கோயில் இடைக்கட்டுப்பகுதியின் தென்புறக் குமுதவரி.*

காலம் : *13-ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ வீ[ரரா] சேந்திர

2 தேவற்கு யாண்டு 26 [ஆவது] ... அரைய நாட்டுத் துடுமலில் இருக்கும் காட்டுவ்

3 வேட்டுவந் முத்[த]ந் சக்கையேந் புற்பவனமுடையார் கோயிலுக்கு சந்தியாதீப விளக்கு ஒ

4 ன்றுக்குப் பழஞ்சலாகை அச்சு ஒந்றுங் கொண்டு ஊற்பிராமண[ந்] குடங்கொடு கோயில்

5 புக்கா[ன்] இடக்கடவதாக இது மாயேசுர இரகைஷ

## 23:5

*இடம் : சிதைந்த கோயில் கருவறையின் தென்புறமுள்ள அதிட்டானத்தின் குமுதவரி.*

*காலம் : 13ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ [வீர] . .ாசேந்திர தேவற்கு .. தெண்ணலில் .. பாத்திக்குடையா .. க .

2 உய்யவந்தாந் கையிலா[ய]நேன் புற்பவனமுடைய நா . விளக்கொன்றுக்கும் குடுத்த அச்சுப் பழ..

3 லாகை ஒன்று ... கொண்டு த்து தேவ நடையா .. க நான் பொ[ற்] கோயில் நம்பியும் குடமுங் குச்சியும் கொண்டு கோயி

4 ல் புகுவாந் எ .ந பந்மாயேசுரரகைஷ

## 23:6

*இடம் : கோயில் முன்மண்டபத்தின் வடசுவர்.*

*காலம் : 13 ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 6வது கிழங்க னாட்டு

2 வேட்டமங்கலத்தி ஊரும் ய ரைய[ர்]களும் இளமாடமும் எங்

3 களூர் னாயனார் புற்புவனமுடையாற்கு னாங்கள் நீர் வா[ர்]த்துக் குடுத்த நிலமா

4 வது கீழ்பாற்கெல்லை தண்ணிக்கிணற் நிட்டேரிக்கு தெந்நிட்டேரிக்கு மேக்

5 கு தெந்பாற்கெல்லை பூலுவந் சோழந மனைக்கு வடக்கு மேல்பாற்கெல்

6 லை குடுமிசிறுவந் தறைக்கு கிழக்கு வடபாகெல்லை கழுப்பகள் தோட்

7 டத்துக்கு தெற்கு யிந்நான்கெல்லைக்குட்பட்ட நிலமுங் கிணறும் நீர் வா[ர்]

8 த்துக் குடுத்தோம் வேட்டமங்கலத்திற் புற்புவனமுடையாற்கு வேட்டமங்கலத்தூரோம்

## 23:7

*இடம் : கோயில் முன்மண்டபத்தின் மேல்புறச் சுவரின் வடமேற்கு மூலை.*

*காலம் : 13-ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யா
2 ண்டு 14 ஆவது கிழங்க நாட்டு வேட்டமங்கலத்
3 து தெந்சேரிப் பூலுவ வேடுவரிற் சிலம்பந் செஞ்
4 சிறுப்பிள்ளையேந் வேட்டமங்கலத்தினாயநார் புற்
5 பவநமுடையாற்குச் சந்தியாதீப விளக்கொந்றுக்
6 கு நான் இக்கோயிலுற் பிராமணற்கு குடுத்த ப
7 ழஞ்சலாகை அச்சு ஒந்றுக்குச் சந்திராதித்தவ
8 ரை குடங்கொடு கோயி[ல்] புகுவாந் எரிக்[க] கட
9 வாந் இது பந்மாஹேச்வரரக்ஷை

## 23:8

*இடம் : கோயிலின் தென்புறம் கிணற்றுக்கருகில் உடைந்து சிதைவுற்று கிடக்கும் நிலைக்கால்.*
*காலம் : 13 – ஆம் நூற்றாண்டு.*

1 ற்கு யாண்டு
2 8வது கிழங்
3 க நாட்டு வே
4 ட்டமங்க
5 லத்து உடை
6 யார் புற்பவ
7 னமுடை[ய] நா
8 யனார் திருவா
9 சலில் திரு
10 நிலைகாலிரண்டு
11 ம் படியும் மெ
12 ற்படி நாட்டு ப
13 குமரபுரத்து
14 வெள்ளாழன் பு
15 ரளந்தைகளில்
16 காடு கொண்
17 டான் தொண்
18 டைமா ....


## 23:9

*இடம் : கிழக்குத் திருச்சுற்றினருகில் இருக்கும் தனிக்கல்.*
*காலம் : 13 – ஆம் நூற்றாண்டு.*

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவ[ற்]க்கு யாண்
2 டு 26 ஆவது கிழங்க நாட்டு வேட்டமங்கல
3 த்தி தட்டாரில் நடுவிலாகக்கண்ணான் உண்மெ
4 ய்யுணர்ந்த தேவந் வடுகப்பிள்ளையார் கோயிலு
5 க்கு சந்தியாதீபம் விளக்கொந்றுக்கும் பழ
6 ஞ்சலாகை அச்சு ஒன்றுங் ஊற் பிராமணர் கொ

7 ண்டு சந்திராதித்தவலம் குடங்கொடு கோயில் பு

8 குவாந் விளக்கேற்றுவாந் யிது மாகேசரட்க்ஷை



படம் 23:1. வேட்டமங்கலம், புற்புவன ஈசுவரர் கோயில், வீரராசேந்திரன் கல்வெட்டு.

## 23:10

இடம் : கிழக்குத் திருச்சுற்றின் அருகில் கிடக்கும் சதுரவடிவிலான நீண்ட தூண்.

*காலம் : 13 -ஆம் நூற்றாண்டு.*

1–5 ...
6 ந சக்கர
7 வத்திகள்
8 ஸ்ரீவீரபா
9 ண்டிய
10 தேவற்கு
11 யாண்டு
12 11க்கு எதி
13 ராவது தண்
14 டீச்வர னோ
15 லை தாபர
16 ஞ் சூழ் வை
17 யத்து த
18 ண்டீசுர க
19 ன் கரும்மா
20 ராய்க ப
21 ண்டே அ
22 றஞ் செய்தா
23 ன் செய்தா
24 ன் அறங்
25 காத்தான்
26 பாதந் திறம்
27 மல் செ
28 ன்னி மே
29 ல் வித்து
30 கிழங்க
31 னாட்டு
32 வேட்ட
33 மங்கல
34 த்து மன்
35 றுப் பிச்
36 சையை
37 இவ்வூர் னா

38 யநார் பு
39 ஷ்பவனமு
40 டைய
41 னாயநா
42 ற்கு பல ம
43 ண்டல
44 த்து தே
45 சாந்திக
46 ளும் ப
47 ந்மாஹே
48 ச்வரரும்
49 ஆக நாற்
50 பத்தெ
51 ண்ணாயி...
52-54 ...
55 கு .. ற்
56 க . ன
57 னாயனாற்
58 கு ஆட்டை
59 க்கு முப்பது
60 பணம் திரு
61 ப்பணிக்கு
62 டலாக குடு
63 த்தோம் இ
64 வ்வறம் அ
65 ழித்தாருண்
66 டாகில் கெ
67 ங்கைக் க
68 ரையில் ஏ
69 ழு குராற்பசு
70 வதித்த ப்ர
71 ஹ்மத்யா தோ
72 ஷத்துக்கு
73 கடவனாகவு
74 ம் ஸ்ரீ மாகே
75 ச்வர வீரப
76 த்ர கைய்யா
77 ல் கொன்ற
78 முக்கக் கட
79 வராகவும்
80 கம்பம
81 பிள்ளை இ
82 நாயனாற்கு
83 டுனலெ
84 ன் உபை
85 யம்

1 கலவெட்டுகள பறறிய தகவல் அளித்த கரூா சமூக வரலாற்றுப பேரவையைச சேர்ந்த திரு பி ஆா குபபுசாமி, ஒவியர் திரு பரணன், கலவெட்டுகளைபபடியெடுதது படிக்க உதவிய தொலலியலதுறை கலவெடடாயவாளா திரு க குழந்தைவேலன மற்றும் படியெடுககும் பணிக்கு உதவிய தாளியாபபட்டி புவனேந்திரன கரூா தொல்லியல் துறையின பெ மோகன ஆகியோருக்கு நன்றி

# 24. உத்திரகோசமங்கை கல்வெட்டுகள்

*சொ. சாந்தலிங்கம், மதுரை;*
*சொ. சந்திரவாணன், குற்றாலம்.*

## 24:1

இடம் : இராமநாதபுரம் வட்டம், உத்திரகோசமங்கையில் அமைந்துள்ள மங்களநாதசுவாமிகோயில் முன்மண்டபத் தென்புறச் சுவர்.

காலம் : *ஸ்ரீ வீரபாண்டியன் யா:3, சகம்:1355; (கி.பி. 1433).*

1 சகாப்தம் 1355ன் மேல் ஸ்ரீ கோமாரபன்மரான திரிபு

2 வனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டியதேவற்கு யாண்டு 2வருஷம் எதிர் வருஷம்

3 மீநநாயற்று பூர்வ பக்ஷத்துலே தசமியும் புதன் கிழமையும் பெற்ற அத்தத்து நாள் முத்தூ

4 ற்றுக் கூற்றத்து பிரமதேசம் மருங்கூரான பண்டித சோழ சதிர்வேதி மங்கலத்து

5 பார்கவ கோத்திரத்து ஆஸ்ரயந சூத்திரத்து நாராயண ச$_0$ர்ம்மன். வீரபாண்டி

6 ய தேவனுக்கு தனக்கு நம்முடைய பேர் கூலிக்கு செம்பி நாட்

7 டில் நம்முடைய உழவுப் பற்றான புறக்குளம் உட்பட்ட ப

8 ற்றும் இவ்வூரில் புறஞ்சேரியில் தீண்டாஅடிமை உள்ளதும்

9 உதக பூர்வ தன்மதானமாக நாம் தருகையில் ...கு எல்லையாவது கீழ்பாற்கு எல்லை நல்

10 லாண் குடிக்கும் அச$_0$வத்ர குடிக்கும் மேற்கு தென்பாற் கெல்லை கடம்பங்குடிக்கு வட

11 க்கு மேற்பாற் கெல்லை வடவாலங் குளத்துக்கு கிழக்கு வடபாற் கெல்லை பனைக்குளத்து

12 க்கும் இயற்கைக குடிக்காலுக்கும் தெற்கும் ஆக இப்பெரு நான்கெல்லைக் குட்பட்ட ப

13 ற்றும் மண்திடல் ஊருணி உடைப்புகுளம் குளப்பரப்பு நன்செய் புன்செய் மேனோக்கிய

14 மரமும் கீனோக்கிய கிணறு தீண்டா அடிமை மற்றும் எப்பேர்பட்டனவும் ஸமஸ்த ப்ராப்திகளும்

15 கடமை வினியோகஞ் செக்கிறை தறிக்கடமை தட்டொலிப் பாட்டமும் மாவடை மரவடை

16 பஞ்சுபீலி சந்தி விக்கிரகப்பேறு முதலாக எப்பேற்பட்டவையும் சர்வ மான்யமாக நம் வரியிலார் கணக்

17 கிலும் பதினொன்றாவது முதலுக்கு கழித்த அளவுக்கு இம்மரியாதியிலே இந்தநாள் முதலுக்கு உதவ பூ

18 ர்வ தன்ம தானமாக ஆசந்திராதித்த வரை சந்ததிப் பிரவேசமே தான வினியோக விசயங்களுக்கு உரித்தாக கல்லி

19 லுஞ் செம்பிலும் வெட்டிக் கையாண்டு கொள்ளவும் இந்த உதக பூர்வ தன்ம தானத்துக்கு நம்முடைய வகை

20 யிலுள்ளாரிலும் மற்றும் ஆராகிலும் விக்கினஞ் செய்யிர பேர்கள் கெங்கைக் கரையிலே பிரம்ம ஹத்தியும்

21 கோ ஹத்தியும் செய்த பாவத்தை யெய்தக் கடவார்களாகவும் உ

## 24:2

*இடம் : மாமண்டபத்துத் தென்புறச் சுவர்.*
*காலம் : சகம் 1393; (கி.பி. 1471).*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1393ன் மேல்

2 செல்லா நின்ற கரவருஷம் கார்த்திகை மாதம்

3 25 தேதி பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் மங்கள வாரமும்

4 அபர யோகமும் பெற்ற அஸ்தத்து நாள் செம்பி நாட்டு

5 பிரம்ம தேசம் திருஉத்தரகோச மங்கை உடையறு மரை

6 மங்கைப் பெருமாள் நயினார்க்கு திருக்கானப் பேற் கூற்றத்து

7 நன்சல் உடையான் பூவாண்டான் சேதிராயன்

8 அபி₄ஷேகம் காத்து வித்தான் சுபமஸ்து

## 24:3

*இடம் : மாமண்டப வடபுறச் சுவர்.*
*காலம் : சகம் 1425; (கி.பி. 1503).*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1425ன் மேல் செல்லா நின்ற பிரமாதி வருடம் புரட்டாதி மாதம் 13

2 பூர்வ பக்கத்து ஏகாதசியும் சோமவாரமும் ஸுக்ள யோகமும் பெற்ற திருவோனத்து

3 நாள் செம்பி நாட்டு ஸ்ரீதேசம் திருஉத்தரகோசமங்கை உடைய நாயனார் கோயிலில்

4 ஸ்ரீருத்ர ஸ்ரீ மாகேசுவரரோம் பாலூர் நாட்டு வென்று முடிசூட்டிய சுந்தரபாண்டியபுரத்து

5 புலியூருடையான் வளந்து வாழ்விக்கும் ஸ்ரீரள அழகிய திருச்சிற்றம்பல முடையார்க்கு

6 விலைப் பிரமானம் பிடிபாடு பண்ணிக் குடுத்தபடி இன்னாயனார்க்கும் நாச்சியார் வாருறு பூண்முலை

7 யார்க்கும் சிவராத்திரி பூஜையிலே ளராதி$_3$ சண்டா$_3$ந்தம் நாலு ஸந்தியும் இவர் தர்மமாக

8 நடத்த கற்பித்து இதுக்கு இந்நாயனார் தேவதானமாக முஞ்சால் ஊரது புரவு நிலத்தில்

9 உடையார்க்கு விலையாக இற்றை நாள் இவரைக் கொண்டு கோவிற் பண்டாரத்துக்கு ஒடுக்குவித்து கொ

10 ண்ட நென்மேனி கலம்பத்து ப 303 இப்பணம் முன்னூற்று மூன்றும் விலையாவனக் களத்தே காட்டி

11 ஏற்றிக் கைச்செலக் கொண்டு பொருளறப் பற்றி விலைக்குற விற்று விலைப் பிரமானம் பண்ணிக் கொ

12 டுத்தோம் ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரரோம் அழகிய திருச்சிற்றம்பல முடையார்கு இப்பரிசு விற்ற முத

13 லில் ஒன்று பாதியும் ஸ்ரீபண்டாரத்திலே கைக் கொண்டு இவர் தர்மமாக நடத்துகிற ச$_0$வராத்திரி பூசை நாலு

14 சந்திக்கும் படித்தரத்துக்கும் வகை அமு[து]படி 400பளம் கறி அமுது துலாம் 4 உப்பு அமுது மிளகு அமுது

15 நெய் அமுது மஞ்சள் சாத்துபடி குங்குமம் 2 பலம் பச்சைக் கற்பூரம் ½ பலம் திருச்சாந்து 2 பலம் பனிநீர்ச் செம்பு

16 8 பரிவட்டம் 2 மஞ்சட் காப்பு பலம் 2 நெல்லிக்காய் பலம் 2 மாக்காப்பு இலை அமுது 100 அடைக்காய்

17 அமுது 5 அமுது செய்ய கற்பூரம் இப்பணிமா கற்பூரம் 2மா பூசா திரவியம் திருமஞ்சள் திரவியம்

18 உரி காப்பு 2 வெல்லம் 45 தேன் 2 வாழைப்பழம் 15 தேங்காய் 1 இளநீர் 4 பாலமுது

19 திரைச்சீலை 2 கும்பத்துக்கு 12 ஆச்சார்ய தட்சணை முதலாக அனைத்து கொத்துக்கும் சிவராத்திரியில்

20 ப 11 பணம் 11 ஆக இம்மரியாதியிலே இவ்வூர் ஒன்று பாதியும் விளையினும் விளையா தொழியினும் இந்த

21 ன் படியே பலகைத்தலையிலே முதலிட்டு சந்திராதித்தவரை நடத்தி நாலாஞ்சந்தியி

22 லே உடையவரும் நாச்சியாரும் அமுது செய்த அனுக்கன் தளிகை இரண்டும் இந்தச் சந்தியிற் சா

23 த்து படியும் இவர் சந்ததிப் பிரவேசமே அருளிப்பாடு குடுத்துப் போதும் படிக்குத் திருமலை

24 புறத்திலே கல்வெட்டிக் குடுத்தோம் ஸ்ரீருத்ர மாஹேஸ்வரரோம் அழகிய திருச்

25 சிற்றம்பல முடையார்க்கு இப்படிக்குத் திரு உத்தரகோச மங்கை பட்டன் எழுத்து இப்படிக்கு

26 பராக்கிரம பாண்டிய பிரம்மாதிராயன் எழுத்து இப்படிக்கு நாற்பத் தெண்ணாயிரபட்டன் எழுத்து

27 இப்படிக்கு சிவபாக்கிய முதலியான் எழுத்து உ

28 சுபமஸ்து தென்புலிசை வாழ்வளத்தான் சிற்றம்பலமுடையானன் புடனே கற்பித்தருளி

29 னானன்பு மிகத் தேசத்தார் போற்றுஞ் சிவராத்திரி மங்கையீசர் காம் பூசையிசைந்து.

# 25. கீரமங்கலம் கல்வெட்டுகள்

*அ. சந்திரபோஸ், தஞ்சாவூர்.*

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் யாவும் எழுத் தமைதியில் 14ஆம் நூற்றாண்டாகக் கருதலாம். முதற் கல்வெட்டில் பாண்டிய அரசன் பெயர் வீரசேகரசேகரதேவர் என உள்ளது. இது குலசேகரதேவர் ஆக இருக்கக் கூடும். கல்வெட்டுகள் திருப்பணியின் போது படியெடுத்து வெட்டப்பட்டுள்ளன போல் தெரிகிறது. அப்பொழுது இத்தவறு நேர்ந்திருக்கலாம். இக்கல்வெட்டுகள் யாவும் வட்டாரத்தலைவர்களின் தானங்களைப் பற்றிப் பேசுகின்றன.*

## 25:1

இடம் : *கோயிலின் மண்டபத்தின் தென்புறச் சுவர் குமுதப்பட்டி.*

1 கோமாற பண்மரான திருபுவன சக்கரவத்திகள்க்கு வீர சேகர சேகர தேவர்க்கு யாண்டு அஞ்சாவது செயசிங்ள நாட்டுத் தென்னாச்சனத்துத் தானவநாட்டு கீரமங்கலத்து உடையார் வாழவந்த ஈசுரமுடைய நாயனார்க்கு இவலூர் அரசு மழை தான் வாழவந்த பெருமாளான சுந்தரபாண்டிய தானவதரையனேன் இந் நாயனார் எழுந்தருளப்பண்ணிவித்த மதுராந்தகன் பெருமாளான குளோத்துங்க சோழ தானவதரயா் திருநாமத்து

2 கானியாக கொடுத்த வேம்பங்குடி குளத்து உள் வாயில் மேற்கே வயல் பிள்ளையார் சுந்தரபாண்டிய தேவர்..

3 த் திருவாய்கழியும் திருமும் புறப்பட்டபடியே என வரையும் அருளுப்பாடு இட்டு இன்னாயனார் திருமுன்பே இறையிலியாக நீரும் நீர்வார்த்துக்கொடுமென்று திருவாய் மலர்நதருளுகையில் நாமும் இப்படியே சந்திராதித்தவன் இந்நாயனாருக்கு காரண்கிழமையாக இறையிலி செய்து கொடுத்த இக்குடிக்காட்டுப் பெருநான் கெல்லையாவது கீழ்பார்க்கெல்லை தானன் வயக்கல் கீழ் வாமத்துக்கு மேற்கும் தென்பார்கெல்லை கிழக்கு நோக்கிபோகிற வரைத

4 லைக்கு வடக்கும் மேல்பார்கெல்லை பெருங்காட்டுக்குக கிழக்கும் வடபார்க்கெல்லை பெருமாள் பிள்ளை நததத்துக்கு போகர் பெருவழிக்கு தெற்காக இந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட க் காடு இன்நாயனாரு ரான கிழமையாக இறையிலி செய்து கொடுத்தோம் இந்நாயனார் உடையார் வாழவந்த ஈஸ்வரமுடையார்க்கு வாழவந்த பெருமாளான சுந்தரபாரண்டிய தானவதரையனேன். இக்குடிக்காடு அந்தராயன் கோமுற்றம் பெருமற்றுமுள்ளவன் போகங்களுக்குட்பாடி பெடடிட்ட

5 வம் இறையிலி செய்து கொடுத்தேன் இப்படிக்கு இவை சுந்தர பாண்டிய தானவதரைனெழுத்து இப்படிக்கு இவை... கணக்கு அரங்குளவர் எழுத்து குலோதது க... கனெழுத்து அ கியனான மதுராந்தக விழுப்பரைனெழுத்து சிற்றன் தானனான அபிமானி ராமப் பல்லவ தரையனெழுத்து

## 25:2

இடம் : *அம்மன் பிரகாரம் முன்பாக நுழைவு வாயிலின் இடது புறம் முதல் தூண்.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ராசநாரா
2 யணபுரத்துத் திரு
3 வேட்பூருடையான் தி
4 ருவன் கண்டனான
5 நந்தவனப்பெரு
6 மாள்
7 தன்மம் கு. .
8 ...யன்.

## 25:3

இடம் : *மேலே குறிப்பிட்ட தூணுக்கு எதிரில் வலதுபுறம் உள்ள தூண்.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திறு
2 வரம்பூர் கிழவ
3 ன் திருவானைக்
4 காவுடையான்
5 தன்மம்

## 25:4

இடம் : *இடது புறம் 4வது தூண்.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ நியமத்துச்
2 செற்றுடையார் திரு
3 ச்சிறம்பலமுடையா
4 ன் திருவையாறுடை
5 யார் தன்மம்

## 25:5

இடம் : *சுவாமி கோயிலின் மண்டபத்தில் வலது புறம் முதல் தூண்.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீ இந்த
2 கால் அண்ஒட்டு
3 .. பாத்தை நெட
4 ... ழங்கைக்கண்ணி
5 ... யையார் உடை
6 யவள் வளகண்ணு

# 26. தானவர் பற்றி குறிப்பிடும் சிதம்பரம் கல்வெட்டு


அ. சந்திரபோஸ், தஞ்சாவூர்.

இடம் : சிதம்பரம் நடராசர் கோயிலில் மேலைக் கோபுரத்தின் அருகில் நடப்பட்டுள்ள ஒரு தனிக்கல்.

காலம் : 14- ஆம் நூற்றாண்டு.

செய்தி : புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர், மாவட்டங்களில் ஆலங்குடி மற்றும் பேராவூரணி பகுதிகள் இரண்டாம் பாண்டியப்பேரரசு காலத்தில் தானவ நாடு என வழங்கப்பட்டன. இந்நாட்டை தானவர் ஆட்சி செய்தனர். இப்பாடல் கல்வெட்டு தானவரைப் பெருமைப் படுத்துவதாக உள்ளது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ உ மீனவற்கு விக்கிரம பா
2 ண்டியற்கு வேந்தரிடும்யா
3 னை திருவுள்ளத்தேறுமோ
4 தானவரை வென்றதல்ல
5 மேனி நிறம் வெள்ளையல்ல
6 செங்கனகக் குன்றதல்ல நா
7 ல்லங் கோடு உ.



படம் 26:1. சிதம்பரம், தானவர் கல்வெட்டு.

---

படம் உதவி : முனைவர் சு. இராசகோபால்.

# 27. சீரங்கராயர் காலத்து அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் செப்பேடு

*மா. கலைவாணன், தருமபுரி;*
*ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்.*

இடம் : தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நாயக்கன் கொட்டாய்க்கு அருகிலுள்ள சவுக்குத் தோப்பைச் சேர்ந்த மா. தங்கவேல் ஆச்சாரியிடம் உள்ள செப்பேடு.

காலம் : *சீரங்கராயர், கலி. 1592(?), (10.2.1671, சனிக்கிழமை).*

செய்தி : *பொன், வெள்ளி, செம்பு, வெங்கலம், இரும்பு ஆகிய ஐந்து உலோகங்களிலும் கம்மத்தொழில் செய்கின்ற ஆச்சாரிகளாகிய அஞ்சுசாதிபஞ்சான்னத்தார், தீத்தகிரியில் மடம் ஏற்படுத்தி, மடப்புறவறம் விட்டது.*

**முதல்பக்கம்**

1 ஸ்ரீமன் மகா மேரு பற்வத கயிலாச[யி]ம் கேதா
2 ரம் காசி ஸ்ரீசயில காஞ்சிபுரம் யிது முதலான [னூத்] தெ
3 ட்டு ஸ்தலமுமான தீர்த்தகிரி மகாதனம் வதிஷ்ட
4 டர் வால்மீகர் அகஸ்தியர் பாற்வதி சுப்பிற
5 மணியர் ராமபத்திரர் தேவேந்திரன் அக்கினி பக
6 வான் யெமன் அனுமந்தன் யிவர்களுக்கு முத்தி குடுத்த
7 ஸ்தலம் தீர்த்தசலம் கிருது பஞ்ச புதமலை சிவ சயில
8 ம் தீர்த்தகிரி கங்காகூடம் வீர அபுணற செடிலம் சீ
9 னிவாசம் நிரந்தர் மேல் வியாதினாசமதுரிக்காம தபச
10 சனம் சோப காமள மேஷட்டம் சாமி சிங்கம மறாவ
11 மினாபதி மூன்று பெரும் மலைக்குயிமை யொராவது
12 கதபெரெ யிப்படி விசெஷமான ஸ்தலதில் பூற்வ
13 ம் மல்லிகாற்சன மகாராயர் விருப்பாஷ ராயர் புற
14 புட தேவமகாராயர் வீர வசந்தராயர் அச்சுதராயர்
15 கிருஷ்ணராயார் ராமதேவராயர் பிறபுல ராமராச கோ
16 தாமான வீரவசந்தராயர் சதாசிவராயர் ராமராசர்
17 எறதிம்மராயர் வேங்கடபதிராயர் சீரங்கராயர் யி
18 வர்களுக்குச் செல்லாயி நின்ற கலியுக சகாவிதம்
19 1592 மேல் செல்லாநின்ற விரோதி வரு
20 ஷம் மாசி மாதம் 14 தேதி சத்தமி புதவாரம் னாள் ஸ்ரீகாளிக்க

21 த்தேவி கட்டேசுவரி திவ்வ ஸ்ரீபாத சேவிதரான
22 அஞ்சு சாதி பஞ்சான்னத்தாருங் யிந்த ஸ்தலத்தில்
23 புறம் மடபதியுண்டாக நிற்பந்திவிக்கும்படி தீத்
24 தகிரி ஸ்தலத்தில் குடுத்த தற்ம பட்டோலை ஸ்தலத்தார்
25 கூடலூர் பெத்த ஆசாரி கோநேரி ஆசாரி வெள்ளா
26 ம கலுப்பாசாரி இரிசியப்ப ஆசாரி அஞ்சு சாதி பஞ்
27 சான்னத்தர் அரியூர் .லிங்காபத்தர் கோனேரி ஆச
28 ாரி அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் தென்கரை கொடை
29 அரியவாராசாரி பச்சை ஆசாரி அஞ்சுசாதி பஞ்சான்
30 னத்தார் முரப்பூர் யிரிசியப்ப ஆசாரி பச்சை ஆசாரி
31 கணக்கப் பெரியண்ணன் பச்சையப்பன் தற்மபுரி
32 கம்பயநூர் அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் யி .
33 ா அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் வீரபத்திர துற்கம்
34 அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் காவேரிப்பட்டணம் அ
35 ஞ்சுசாதி பஞ்சான்னத்தார் செகதே துர்கம் அஞ்
36 சுசாதி பஞ்சான்னத்தார் திருப்பத்தூர் அஞ்சுசாதி பஞ்
37 சான்னத்தார் வாணி'.பம்பாடி அஞ்சுசாதி பஞ்சான்னத்த
38 ார் கிஷ்நகிரி அஞ்சுசாதி பஞ்சானனத்தார் பத்தூர் அஞ்
39 சுசாதி பஞ்சானத்தார், மலைபாடி அஞ்சுசாதி பஞ்சா
40 ன்னத்தர் ஆமுரு அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் கல்லாவி
41 அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் சிங்கிரிப்பட்டி அஞ்சுசாதி
42 பஞ்சசான்னத்தார் சிங்கிரிப்பட்டி அஞ்சுசாதி
43 பஞ்சான்னத்தார் கெங்கமா சித்தர் ஆசாரி ராமகுட்டி
44 ஆசாரி சின்னசாரி போளுரு கலசபாக்கம் நை
45 த்தாம்பூண்டி சேத்துப்பட்டு செஞ்சி வேட்டைவலம்
46 மணலூருப்பேட்டை படைவீடு வசு சாதி எழுபத்தி
47 ன[ா]லு அகணத்தாள் வத்தனூரு தெத்துருகம் அஞ்
48 சுசாதி வெளிச் சேலம் வெண்பானாடு வாலிகொ
49 கண்டபுரம் பெருங்குணம் தொண்ணாவ தொறை
50 யூரும் பாள வெங்கனூரு உள்பட அஞ்சுசாதி பஞ்ச
51 ன்னத்தர் ஆனந்தகிரி அஞ்சுசாதி

**இரண்டாவது பக்கம்**

52 பஞ்சான்னத்தார் னறசிங்கபுற வெளை
53 யூரு சேலம் அஞ்சுசாதி பஞ்சான்னத்தார்

54 ஓமலூரு அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் தூருர
55 கம் அஞ்சுசாதி பஞ்சான்னத்தார் சாமபள்ளி
56 சத்தியமங்கலம் யீரொடு கோயம்புத்தூர்
57 ரு அஞ்சசாதி பஞ்சான்னத்தார் ஆலம்பட்டி பென்
58 னாகறம அஞ்சுசாதி யிவர்கள் குலக்குரு வெ
59 ங்கிடா ஆசாரியிர் சிவராமசாரி ஆசா மஞ்னமூற்தி
60 அயினவகள் முன்பாக கட்டளையிட்டத் த
61 ற்மத்துக்கு விபராம் முன்னாள் னடந்த படி ஒவ்வொரு
62 பட்டடைக்கு காணியாச்சி காறாளைப் பட்டடை
63 க்கு கொல்லுக்கு அஞ்சுவள்ளம் தச்சுக்கு அஞ்சுவ
64 ள்ளம் தூள்ப் பட்டடைக்கு கொல்லுக்கு புது தச்சுக்கு
65 பணம் 1 காசாவர்கம் குடிக்கு பணம் 1 கலியாணத்துக்கு
66 மாபிள்ளை வீடு பணம் 1 பொண்ணுவீடு பணம் 1 யிந்த பிற
67 காரம் காசி ராமேஸ்சுரம் சமுத்திரம் மலைஆளம்
68 யிது உள்ளன அஞ்சுசாதி எழுபத்தினாலு அகணத்
69 தாய்வர்களும் யிந்த தர்மதமுவுவளமே அப்படி
70 யே குடுத்த னம்ம மடம் னீடுயுழி காலம் ன
71 டத்தி கொள்ளவும் தீத்தகிரி யாகிறவை உண்டாய்
72 னமுட வமுசம் குருவும் னீடுயுழி வாழ்ந்து யிரு
73 க்க யாதாமொருதன் அகிதம் பண்ணினால் கெ
74 ங்கை கரெயில் பசுவெ கொன்ன பாவத்
75 தில் போககடாவது பஞ்ச[மா] பாதகம் பண்ணினா பாவத்தி
76 ல் போக கடாவது அபடி வராமல் குரு சாமியும்
77 அஞ்சுசாதி எழுபத்துனாதலு அகணத்தருங் கூடி கட்டளையிட்ட
78 பிறகாரமே குடுத்துண்டாந யிந்த தற்மத்தே கயிக்
79 கொண்டு ஆனெகம் அட்டா அசுவரியம் இகபராசாதகம்
80 உண்டாயிருக் காடாவது தீத்தகிரி யீசுவரன் வடிவ
81 ழகி தாயும சுப்பிறமணியிற துணையாதாபிகதவு
82 ம் சேலம் அறததன[ா]ரி ஆசாரி குமாரன் பாலைய ஆசா
83 ரி கயி எழுத்து தந்த பரிகல்லத்தர் மடத்தாமின
84 பக மடமும் லிகிதமு களாத்தி பண்டாராத்துக்கு
85 கட்டளையிட்டோம்

* செபபேடடு ஆயவில உதவிபுரிநத கலவெட்டு ஆயவாளா டாக்டா சு இராசகோபால் அவாகளுககு நனறி

# 28. சோமாண்டார்குடிக் கல்வெட்டுகள்

***ஆ. பத்மாவதி, சென்னை;***
***சி. வீரராகவன், விழுப்புரம்.***

## 28:1

*இடம் : விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் சோமாண்டார் குடி சோமேஸ்வரர் கோயில்.*

*காலம் : சகம் 1604 ? (கி.பி. 1682).*

*செய்தி : சோமீஸ்வரம் உடையார் கோயில் இறைவனுக்கு சோமாண்டார் குடியில் உள்ள நிலங்களிலிருந்து கிடைக்கும் கடமை, பொன்வரி, காணிக்கை நாட்டு விநியோகம் ஆகிய வரி வருவாய்களை வழிபாட்டிற்காக உள்ளூர்த் தலைவன் தியாகன் கொடுத்துள்ளான். கூடுதலாக ஆளமஞ்சி செய்யக்கூடாது என்றும் குறிப்பிடுகிறது.*

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் [1604] இதன் மேல் செல்லா நின்ற பல வருடம் மாசி மாதம் அபர பக்ஷத்து அஷ்டமியும் சோம வாரமும் பெற்ற அநுழத்து நாள் திருசோ. . .தண்புரவு திரு சோமீச்₀வரமுடைய நயினாற்கு ஸ்ரீப

2 தியாகன் நாயத்தி நின்றயம் பண்ணிக் குடுத்தபடி இவ்வூர் நஞ்செயி புஞ்செயி உண்டான கடமை பொன்வரி காணிக்கை நாட்டு வினியோகம் உண்டாந பூசை திருப்படிக்கும் இட்டு நட நது போத கடவதாகவும் விளா

3 கத்தில் ஏறும் பலகுடிகளுக்கும் கடமை காணிக்கை[யி]ல் வினியோகம் உண்டாநதும் கோயில் பண்டாரத்துக்கு இறுத்து போத கடவதாகவும் பண்டாரத்துக்கு .. மியம் ஆளமஞ்சி என்று செயயகடவ

4 தல்லவாகவும் சந்திராதித்தன் வரையும் சறுவ மான்னியமாக[வு]ம் நடந்து போத கடவதாகவும் இமமர்யத்துக்கு குமு(மு)த படையிலே கல்லு வெட்டிகுடுத்தோம இந்த தன்மத்துக்கு அகுதம் பண ..

## 28:2

*இடம் : மேலது.*

*காலம் : கம்பண உடையார் மகன் செம்மண்புரம் உடையார் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு).*

*செய்தி : செம்மண்புரம் உடையார் என்பவர் சறுவமானியமாக தேவதானம் அளித்தது. இக்கோயிலின் திருமடைவளாகத்தில் குடியேறும் செட்டிகள், கைக்கோளர், வாணியர்,*

*சேனையங்காடிகள், பள்ளிகள் இவர்களிடமிருந்து பலவரிக்ள் பெறப்பட்டுக் கோயிலுக்கு கொடுக்கப்பட்டது.*

1 ஸ்ரீமத் மஹாமஹா மண்டலேசுரன் பாஷைக்குத் தப்பு
2 ம இராய கண்டன் ஸ்ரீ வீர பொக்கண உடையர் குமார கம்பண
3 உடையார் குமாரன் செம்மண்புரம் உடையார் திருச்சோ
4 மீசுரமுடைய நாயனார் தேவதானம் சறுவ மானிய இறையிலி
5 இத்திருமடை விளாகத்தில் ஏறும் செட்டிகள் கைக்கோளர் வாணிகர் சேனையங்காடிகள் பள்ளிகள் மற்றும் உட்ப
6 லது ... த்தம.. தாயி வருஷம் சித்திரை மாதம் [செ]லுத்த கடமை கொ
7 ள்ளும் நத்தவரி வாசல்பணம் பேர்கடமை தறிக்கடமை பற்று உட்பட்ட பலவரிகளும் பல உபாதிகளும் உட்ப
8 ண்டும் மேர்க்கால இதகும குடிக்கு கொளளும் மரியாதையில் ஒன்று பாதி கொள்ளக் கடவதாகவும் இபடிக்கு சந்திராதித்தவ
9 ரையும் செல்ல கலவெட்டி குடுத்தது இது பன்மாஹ
10 ச்ுவர ரக்ஷை

## 28:3

இடம் : *சோமாண்டார்குடி சோமஸ்வரர்கோயில் கருவறையின் வடபுறக் கண்டம் மற்றும் பட்டியில் உள்ளது.*

காலம் : *சதாசிவராயர், சகம் 1474, (கி.பி. 1552).*

செய்தி : *சூரப்பநாயக்கர் வாசல் அலுவலரான நமசிவாய பிள்ளை தம்பிரானார்கு பூசைத் திருப்பணிக்காக தென்னைமரம் மாமரம் வைக்கத்தக்க தோப்பு ஒன்றை கொடுத்தது. தோப்பு நிலத்திற்கு எல்லைகள் கூறப்பட்டுள்ளன. திங்கட்கிழமை நிகழும் சந்தை, தீய்ப்பாய்ந்தாள் வாய்க்கால் போன்றவையும் சொல்லப்பட்டுள்ளன.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீமந்மஹா மண்டலேசுரன் மேதினி மீசுர கண்ட கட்டரி சாளுவ பூறுவ தெக்ஷிண பச்சிம உத்தர சது சமுத்திராதிபதி கண்ட நாடு கொணடு கொண்ட நாடு
2 கொடாதான் துலுக்க தளவிபாடன் தேசதளவிபாடன் ஸ்ரீ இறங்கப்பய்ய தேவமகா இராய குமாரர் ஸ்ரீ புச பெல சதாசிவ தேவமகா இராயர் பிறுதுவி ராச்சியம் பண்ணி அருளா
3 நின்ற சகாத்தம 1474 இதன் மேற் செல்லா நின்ற தாபி சங்கச் சரத்து விருச்சிக நாயற்று பூறுவ பக்ஷத்து பஞ்சமியும் சோம வாரமும் பெறற நாள் சோமாண்டார் கோயில்

4 நயினார் திருச்சோமீசுரமுடைய தம்பிரனாக்கு சூரப்ப நாயகரய்யன் வாசல் தாமல் கோட்டத்து தாமல் நாட்டில் தாமலில் வசவய முதலியார் புத்திரன் நமசிவாய பிள்ளை தம்பிரானார்கு பூசை

5 திருப்பணிக் கட்டளை இட்டது சோமாண்டார் கோயில்

6 சோமவாரச் சந்தையும் சடையமல் சோமநாதன் தோப்புக்கு மேற்கும் தீய்ப்பாஞ்சாள் வாய்க்காலுக்கு கிழக்

7 கு ஆற்றுக்கு வடக்கு அக்கிறாம கருங்காலிப்பட்டு நஞ்செய்க்கு தெற்கு பள்ளக் குழியன் என்கிற நஞ்செ... தம்பிரானார் மகபூசை தி[ரு]ப்பணிக்கு தென்ன மரம் வைக்கத்தக்கதாகவும் குழியனுக்குத் தெ

8 ற்கு கொல்லையில் மாத்தோ[ப்பு] வைத்து குடுத்ததாகவும்

## 28:4

இடம் : *சோமாண்டார்குடி சோமேஸ்வரர் கோயில்*

காலம் : *வீரபிரதாபதேவமகாராயர், சகம் 1454; (கி.பி. 1532).*

செய்தி : *ஜனநாத வளநாட்டு நாட்டவர், பட்டண சுவாமி முதலியோர் சித்தப்பாதாளத்தியாண்டார் என்பவருக்கு மகதமண்டல சிவன் என்று பட்டமும் பல்லக்கு உரிமையும் கொடுத்தனர். அவருக்கு குடிவழி குறிப்பிட்ட பணக்கட்டணமும், கல்யாணத்துக்கு ஒரு பணமும், பேட்டை, சந்தை போன்ற அங்காடிகளில் அங்காடிக் கூலியாக பணம் வசூலித்துக் கொள்ளும், உரிமையும் தரப்பட்டது.*

1 ஸ்வஸ்திஸ்ரீமநு ராஜாதி$_4$ராஜ பரமேச்வரந் ஸ்ரீவீர ப்ரதாப ... தேவமகாராயர் ப்ராஜ்யம் பண்ணி அருளாநின்ற செ சகாப்$_3$த$_3$ம் 1454 ன் மேல் செ

2 ல்லா நின்ற நநதந ஸம்வத்ஸரதது துலா நாயற்று அபர பக்ஷத்து த்$_4$வாத$_4$சி சு$_0$க்ர வாரமும் பெற்ற பூ$_4$ஸ நக்ஷத்ரத்து நாள் பெண்ணை தென்கரை வென்பாராறுக்கு வடக்கு கூழையா

3 [ன்] போன பெருவழிக்கு மேற்குக் குன்றததுக்கு கிழக்கும் தை மாதம் 7ந்தேதியில் மலாடாகிய ஜநநாத நாட்டு நாட்டவரும் காசா[யம்] பலரும் பட்டண [சுவா]மியும் தையலான தேர

4 னும் திறிகுல பறுவதமருள சித்தப்பாதாளத்தியாணடார்கு மகத மண்டல சிவன [னென்]று பேர் குடுத்து கண்டிகையும குடுத்துத் திச்ச குடிக்கு ஒரு பணமும் கலகுடி

5 க்கு அரைப்பணமும் கல்யாணத்துககு ஒரு பணமும் பேட்டையிலும் சந்தையி[லு]ம் அள்ளும் சோமாண்டார் திருக்கை வழக்

6 கம பணம் இருபதும் இரு மடத்துக்கு மனையும் கச்சிபெருமாள்

திருக்கை வழக்கம் பணம் இருபது அகரங்கள் ஊரூர்க்

7 கும் பணம் அஞ்சும் இடங்கை வலங்கை தொண்ணூறு எட்டுச் சாதியு நடத்திக் குடுக்கக் கடவோமாவும் இதுக்கு யாதொருவன் அகிதம் பண்ணி

8 ன்னவன் கெங்கைக் கரையிலே காராம்வேம் தன் மாதா பிதாவேம் கொன்ற பாபத்திலே போகக் கடவாராகவும் இத்தை தருவேம் வீ..ரம் இந்தத்தன்மம ஆசந்திர ஸ்தாயி ஆக நடக்கக் கடவதாகவும் இந்தத் த

9 ன்மத்துக்கு யாதொரு அகுதம் பண்ணினவர் உண்டாக்கி

10 னால் கெங்கைக் கரையிலே காரம் பசுவைக் கொன்ற தோஷத்திலே

11 ப் போகக் கடவர்களாகவும் இப்படிக்கு இவை சிவாய பிள்ளை எழுத்து உ

## 28:5

இடம் : *மேலது*

காலம் : *சகம் 1447, (கி.பி. 1525).*

செய்தி : *மிருத்தஞ்செய நாயக்கர் அவருடைய தலைவர் திருமலை நாயக்கருக்கு தன்மம் ஆக திருச்சோமீசுரமுடையார்க்குத் திருநாமத்துக்காணியாக நிலம் கொடுத்தது.*

1 ஸ்வஸ்தி ஸ்ரீமந் சகாப்தம் 1447 இதன் மேற் செல்லா நின்ற பாத்திப ஸம்வத்ஸரத்து மகர நாயற்று பூர்வ பக்ஷத்து ஸப்தமியும் அச்வதி நக்ஷத்தரமும் பெற்ற சுக்ர வாரத்து நாள் ஸ்ரீமது மிறுத்தஞ் செய நாயக்கர் சோமாண்டாற்குத்த. திருமலை நாயக்கர் அய்யன் நமக்கு பாலித்து அருளின மகதை மண்டலம் மலாடகிய

2 செனநாத வள நாட்டு கல்கலருவச்சி பற்று பூவனேய் தென்கரை நரையூர் கூற்ற தங்குற்றம் பொறுத்தான் ஆன காளத்திபுரம் சோழாண்டார் கோயில் உடையார் திருச்சோமீசுரமுடைய நாயனார்க்கு திருநாமத்துக் காணிஆக இற்றை நாள் ரத சத்தம புண்ணிய காலத்திலே சுவாமி திருமலை நாயக்கர் அய்யனுக்கு தந்மம் ஆக இந்த தம்பிரானார் திருச்சோமீசுரமு

3 [டை] நாயனார்கு ஸர்வரண்யோசந்த்ரா பூறுவம் ஆக தாரை வாத்து குடுத்தோம இந்த குற்றம் பொறுத்தானாந காளத்திபுரத்துக்கு கீழ்பாற் கெல்லை

## 28:6

இடம் : *மேலது.*

காலம் : *சகம் 1454; (கி.பி. 1532).*

செய்தி : *திருச்சோமீசுவரமுடையார்க்கு பூசைக்கு நிலம் கொடுத்தது.*

1 சு$_0$ப$_4$மஸ்து ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1454 மே[மல்செ]ல்ல னின்ற னந்தந ஸம்வத்ஸரத்து துலா நாயற்று அபரபக்ஷ

2 மது வய்யப்ப நாயக்கர் அய்யன். ராயத்துக்கு வெங்கடாத்திரி நாயக்கர் நாயநார் திருச்சோமீச்$_0$வரமு[டைய நாயநார்]

3 க்கும் பூசைக்கும் விட்ட கீழைச்சடையபை.. மகதை மண்டலச் சிவனுக்கு திருக்கோயிலில் வருஷது ..

4 ருமனையும் விடக்கடவது ஆகவும்

---

# 29. ஐயங்கார் குளம் கல்வெட்டு

க. ஈஸ்வரன், சென்னை.

காஞ்சிபுரம் அருகில் ஐய்யங்கார் குளம் என்ற ஊர் உள்ளது. காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் தாத்தய்யங்கார் என்பவரால் இங்கு தாத்தய்யங்கார் சமுத்திரம் என்ற ஏரி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வேரியின் அருகில் மிக அழகான கிணறு ஒன்றுள்ளது. கிணற்றினுள் இறங்க கல் படிக்கட்டுகளும் அழகிய தோரணவாயிலும் உள்ளன. கிணற்றிலிருந்து ஒருபெரிய துலா ஏற்றத்தின் மூலம் நீர் இறைத்து வெளிச்செல்ல நல்ல கல்லமைப்பிலான நீரோடிகளும், துலாத்தூண்களும் உள்ளன. இக்கிணறு குடிநீருக்காகப் பயன்பட்டிருக்க வேண்டும். இதன் காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டாகலாம். இவ்வழகிய கிணற்றின் எதிரே ஏரிக்கரையின் முன்னதாக இதனுடன் தொடர்புடைய மற்றொரு கிணறு உள்ளது. அழகு வேலைப்பாடற்ற இக்கிணற்றில் பின்வரும் கல்வெட்டுள்ளது.

1 னெல்லு

2 கார தெரு

3 செங்கல்

4 ராயரு தரு

5 மம்

---

# 30. மிரசிபுரம் சத்திரம் கல்வெட்டுகள்

து. துளசிராமன், ஆர்காடு.

## 30:1

இடம் : *வேலூர் – பெங்களூர் நெடுஞ்சாலையில் வேலூருக்கு சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ள அப்துல்லாபுரம் (மிரசிபுரம்) என்னும் ஊரில் நெடுஞ்சாலைக்கு வலப்புறம் உள்ள சத்திரம்.*

காலம் : *சகம் 1734, (கி.பி. 1812).*

செய்தி : *கருங்கற்களாலான செவ்வக வடிவுடைய இச்சத்திரத்தை கி.பி, 1812–ல் ராய வேலூரில் இருக்கும் சோதி நகரைச் சேர்ந்த மாரப்ப செட்டியார் மகன் பொன்னப்ப செட்டியார் கட்டியது. இச்செய்தியைத் தெரிவிக்கும் தெலுங்குக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது.*

1 சிவாய நம
2 சாலிவாகன ச
3 க வருஷம் 1734 க்கு
4 கலியுக வருஷம் 4913க்கு
5 மேல் ஆங்க
6 கிரஷ வருஷம் காற்த்திகை
7 மாதம் 7ம் தேதி வெள்ளிகிழமை
8 உதையமான ஒரு நாழிக்கு
9 விருக்ஷிக லக்கினத்தி
10 ல் றாய வேலூரிலிருக்கும் சோ
11 தி நகரமாகிய மாரப்ப செ
12 ட்டியார் குமாறன் பொன்ன
13 ப்ப செட்டியார் கட்டி வைத்
14 த தற்ம்ம சத்திரம்

## 30.2

இடம் : *சத்திரத்தின் மேற்கு புறத்தில் கருங்கற்களாலான குளத்தில் கிழக்குப் புறத்தில் நடப்பட்டுள்ள பலகைக் கல்.*

காலம் : *சகம். 1789, (கி.பி. 1863).*

செய்தி : *கி.பி. 1863ல் ராய வேலூரிலிருக்கும் சோதி நகரைச் சேர்ந்த மாறப்ப செட்டியாரின் இளைய மகனும் பொன்னப்ப செட்டியாரின் தம்பியுமாகிய முத்துசாமி செட்டியாரால் குளம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு சோமயாகம் முதலியன செய்ய ஏற்பாடும் செய்யப்பட்டது.*

1 ஸ்ரீறாம ஜெயம்
2 ஸ்வஸ்தி ஸ்ரீ

3 விஜெயாபதுதய சாலி
4 வாகன சக வருஷம் 1789
5 கலியுக வருஷம்
6 4969
7 பிறபவாதி சென்
8 ற வருஷம் சாய
9 வற்த்தமான பிற
10 பவ வருஷம் வைய்யா
11 சி மாதம் 29 லே
12 காஞ்சி மண்டலம்
13 விரிஞ்சிபுற ஷேத்தி
14 ஸமீபம் க்ஷீறனதி
15 தீறம் மிரிசிபுரா அக்கி
16 றஹாறத்தில் மூலாண்
17 டர் அக்கிறஹாறவாசிக
18 ளான சாண்டில்லிய
19 கோத்திற
20 ஆபஸ்தம்ப சூத்திற
21 ராகிய சங்கற நாராயண
22 தீக்ஷதருக்கு நபத்திறராயும்
23 சுப்பிறமண்ணிய தீக்ஷ
24 தருக்கு பவுத்திறராயும்
25 சங்கற தீக்ஷதருக்கு புத்
26 திறரும் ஆகிய விதியாப
27 தி தீக்ஷதற் யென்றும் யெ
28 ச்சு வரவுனால் ஸ்தளமு
29 ம் றாயவேலூரிலிருக்
30 கும் சோதி நகறமாகிய
31 முத்து செட்டியாருக்கும்
32 நபத்திறராயும்
33 மாறப்ப செட்டியாருக்கு
34 பவுத்திறராயும்
35 முத்தைய்ய செட்டியா
36 ருக்கு
37 புத்திறரான
38 தாண்டவராய செட்டி
39 மேல்படி தேதியில்
40 மேல்படி முத்தைய்ய
41 செட்டியாருக்கு மூத்த
42 சகோதறரான
43 பொன்னப்ப செட்டியாரா
44 ல் முன் ஆங்கிஷ வருஷத்தில்
45 பிறதிஸ்ட்டி
46 செய்தருக்க பட்ட சத்திறம்
47 னந்தவனம் யிளைய
48 சகோதறரான
49 முத்துசாமி செட்டியாரால்
50 ருத்திரோத்துகாரி வருஷத்தி
51 ல் பிறதிஷ்ட்ட செயிவித்
52 த தடாகம் யிதுகளில்
53 சோம யாகம்
54 சோம பானம்
55 அவ பிருதஸ்தானம்
56 முதலாகியதும்
57 மேல் கண்ட
58 யெச்சு வரவுனால் செ
59 ய்ய வெச்சு அதற்கு
60 வேண்டிய
61 திரவியங்கள்
62 அளித்து
63 பிராம்மணற்களால்
64 யாகம்
65 சம்பூற்ன்னம் செய்வி
66 ச்சு யுகத்த படிக்கி மிகவ
67 தாம்பூலம்
68 தெஷ்ஷணை

69 தானங்கள்
70 முதலாகியதும் சம்பூ
71 றணமாக நடத்தி வெ
72 க்கபட்டுது
73 பராபவ வருஷம்
74 வைய்யாசி மாதம்
75 29 தேதி

---

# 31. மண்ணிவாக்கம் கல்யாண மண்டபக் கல்வெட்டு

**கோ. உத்திராடம், அன்னம்பாக்கம்.**

*இடம் : காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் வட்டம் மண்ணிவாக்கம் கிராமம் மண்ணீசுவரர் கோயிலில் உள்ள கல்யாண மண்டப தென்சுவர்.*

*காலம் : சகம் 1740; (கி.பி. 1818).*

*செய்தி : மண்ணியபாக்கம் பெரியலிங்கப்ப முதலியார் மனைவி பச்சையம்மாள் கலியாண மண்டபம் கட்டி வைத்ததைச் சொல்கிறது. நடுப்பகுதியில் மேடையமைப்புள்ளது. செவ்வகவடிவில் கிழக்குநோக்கி அமைந்துள்ள இம்மண்டபத்தில் 8 தூண்கள் உள்ளன. தூண்களில் திருமால், விநாயகர், லிங்கம், தவமிருக்கும் முனிவர்கள், செதுக்கப்பட்டுள்ளனர். தம்பதியர் சிற்பமொன்றுள்ளது கல்வெட்டின் தொடக்கத்தில் பிள்ளையார் சுழியும் சூரியன், சந்திரனும் உள்ளன.*

1 கற்பக விநாயகர் துணை
2 சுவ்விஸ்ரீ விசையாற்புத
3 சாலிவாகன சகாப்த்தம்
4 1740 கலயுகப்த்
5 தம் 4919 பிறப
6 வாதிக தாபத்தம் யக
7 யிதற்கு அமற் செல்லா நி
8 ன்ற பெகுதான்னிய வருஷம்
9 ஆவணி மாம் 28 தேதி பற்வப
10 ட்சம் சுக்கிரவாரம் துவாதெ
11 சி உத்திராட நட்சத்திரம் யி
12 ¸ப்படி கூடிய சுகதினத்தில்
13 ஸ்ரீ அகிலாண்ட கோடி விர
14 மாண்ட நாயகராகிய
15 மண்ணிச்சுவரர் மரகத
16 வல்லியம்மனுக்கு தொ
17 ண்டை மண்டலந் துளுவ
18 வெள்ளாழரில் மண்ணிபா
19 க்கம் பெரியலிங்கப்ப முதலி
20 யார் பச்சையம்மாளிவர்க
21 ளுடைய குமாரராகிய
22 ஐயாசாமி முதலியாருக்கு
23 பாரியாளும் புன்னைப் பாக்க
24 ம் அருணகிரி முதலியார் செ
25 செகப்பாத்தாளிவர்களுக்
26 குக் குமாரத்தியு மாகிய
27 திருக்கல்லியாண மண்டபம்
28 சுபம் ஸ்ரீ

# 32. வை.ச. மோட்டூர் சத்திரக் கல்வெட்டு

ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்.

இடம் : *வேலூர் மாவட்டம், வாலாசாப்பேட்டை வட்டம், வை.ச. மோட்டூர் என்னும் ஊரிலிலுள்ள சத்திரத்தின் நுழைவாயிலில் உட்கூரை.*

காலம் : *சகம் 1746; கி.பி. 1824.*

செய்தி : *பச்சையப்ப முதலியார் கட்டிய சத்திரத்தை பராமரிக்க பத்து காணி நஞ்சை நிலமும், நல்லம்மாள் கட்டிய மடத்தை பராமரிக்க ஏழு காணி புஞ்சை நிலமும், அதில் அமைந்துள்ள மாமரத்தோப்பும் தானமாக விடப்பட்டுள்ளன.*

1 சுபமஸ்து சொஸ்ஸ்ரீ விஜயாபுதா சாலிய வாகன

2 சக வருடம் 1746 கலியாப்பிதா 4925 பிர

3 பவாதி கதாபிதாய எத்துகாலம் தாரண வருஷம் தையி மாதம் 12

4 றாயவேல்லூர் காரக்கானா முத்தையா முதலியாரவருகளு

5 டைய தர்ம்ம பத்திநியாகிய நல்லம்மாள் செபுத்திரறாகிய பச்சை

6 யப்ப முதலியார் கட்டி வைத்த தர்ம்மச் சத்திரம் மேல்படி

7 சத்திரத்துக்கு நித்திய கட்டளை செலவுக்காக ஆனரெபில் கும்பி

8 நியார் கெவுனர் தாமஷ் மன்றோல் துரையவர்கள

9 திகார னாளையில் 1233 பசலி சுபானு வருஷம் முத

10 ல் கொண்டும் பால மான்னியமாயி காவேரிப்பாக்

11 கம் துக்கடியில் சேர்ந்த வன்னிவேடு கிறாமத்தி

12 ல் விட்டு யிருக்குர நஞ்சை கும்பினி அளவு கா

13 ணி பத்து யிந்த பத்துகாணியும் தர்மம்துரைகள் தர்ம்ம சத்தி

14 றத்துக்கு தும்பால மான்னியம் மேலெழிதிய கிறாமத்தில் குடுத்து யிருக்குரபடியால்

15 யிந்த தர்ம்ம சொத்து சூரிய செந்திராதிகளவுள்ள மட்டுக்கும் மேல்படி தர்ம்ம கர்

16 த்தருடைய புத்திர பவுத்தர பாரம்பரியம் நடக்கும் படியாயி குடுத்து [யிருககதாத்தை]

17 மைத்த யெந்தகாலத்திலாவது யாறாவது யிந்த தர்ம சொத்துக்கு விகாதம் நெ

18 னச்சாலவர்கள் காசியில் செயி[யர]த பாபத்தில் போவார்கள் பின்னு [மாவுரவாதி]

19 னரகத்தில் போவார்கள் யிது அரிஞிதி யிந்த தர்மம் மடபரிபாலனம் பண்ண வேண்

20 டியது உ

21 யிதல்லாமல்

22 மேல்படி ந

23 ல்லம்மாள்

24 கட்டிய தட்

25 டோட்டு ச

26 த்திரமான

27 மடத்துக்

28 கு விட்டு யிரு

29 க்குற புஞ்சை

30 நிலம் சுமா

31 ர் ஏழு காணி

32 யில் வைச்சு

33 யிருக்குற மா

34 மரம் முத

35 லாகிய பல வி

36 சேஷங்களில் வ

37 றப்பட்ட மாகுசுல் சத்திறத்துக்கும் மடத்துக்கும் சேறவேண்டியது

# 33. திருக்கோயிலூர் ஆங்கிலக் கல்வெட்டு

சீ. வசந்தி, சென்னை.

இடம் : விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் அரசு மருத்துவமனை மற்றும் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை அலுவலகத்திற்குப் பின்புறம் உள்ள நினைவுக்கல்.

காலம் : 20.9.1824.

செய்தி : அயர்லாந்தில் உள்ள பிரெஞ்சுபார்க் என்ற இடத்தைச் சேர்ந்த ஆர்தர் பிரெஞ்சு என்பவரின் மகன் வில்லியம் பிரெஞ்சு என்பவர் கடலூரில் கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது திடீரென பிணி ஏற்பட்டு இறந்தமையால் அவர் மீது கொண்ட அன்பின் அடையாளமாக அவரது இந்திய நண்பர்கள் இந்நினைவுச் சின்னத்தினை அமைத்துள்ளனர்.

1 Sacred
2 To the memory of
3 William French
4 Of the Hon. Company's Civil Service
5 son of Arthur French Esq-Rp Mp
6 of French Park in Ireland
7 Whilst zealonaly discharging
8 the duties of his official
9 employment at this his favourit
10 place of Residence he was
11 seized with the
12 fatal Malody which in his
13 Prime of life hurried
14 him to the grave at Cuddalore
15 which his remains were
16 interred April 1st 1823
17 Deeply lamenting the Lofs
18 of this truly excellent
19 Man his Friends in India
20 erected this Monument
21 Sept. 20th A.D. 1824
22 a lasting Record of their
23 affectionate respect.

# 34. வாலாசாப்பேட்டை சத்திரக் கல்வெட்டு

ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்.

*இடம் : வேலூர் மாவட்டம், வாலாசாப்பேட்டை மங்கலம்பாள் நடுநிலைப் பள்ளியில், சத்திர மண்டபத்தின் உட்கூரை.*

*காலம் : சகம் 1752, (கி.பி. 1830).*

*செய்தி : வாலாசாப்பேட்டை, நற்புழா மகாரிஷி கோத்திரத்தைச் சேர்ந்த மளிகை முத்துராமு செட்டியார் மகன் பாப்பு செட்டியார் கட்டிய சத்திரம்.*

1 சுபமஸ்து சொஸ்
2 திரி ஸ்ரீவிசையாபுது
3 தையா சாலிவாகன
4 சகாப்தா 1752
5 கலியாப்தா
6 4931 பிற
7 பவாதி கதாப்தா 23
8 க்கு மேல் செல்லா
9 நின்ற விக்குறுதி வ
10 ருஷம் ஆடி மாதம் தேதி
11 12 உ வாலாசாப்
12 பேட்டைலிருக்கும்
13 நற்புழா மகாரிஷி
14 கோத்திரம் மளிகை மு
15 த்து ராமு செட்டியார்
16 குமாரனாகிய பாப்பு
17 செட்டியார் அவர்கள்
18 தற்மம் சத்திரம்

# 35. பெரிய கொல்லபட்டி கல்வெட்டுகள்

கே. கோபாலன், நாகர்கோயில்.

## 35:1

இடம் : *விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், பெரிய கொல்லபட்டி கிராமம், சாத்தூரப்பன் எழுந்திருத்து மண்டபத்தின் விதானம்.*

காலம் : *கலி. **4945**; (கி.பி. **1844**).*

செய்தி : *பெரிய கொல்லபட்டி சமீன்தார் ஸ்ரீ ராமசாமி கெச்சிலப்ப நாயக்கரின் மனைவி சாத்தூரப்பனை எழுந்தருளி விப்பதற்காக மண்டபம் கட்டி முடித்ததைத் தெரிவிக்கிறது.*

1 உ சுதைதிரி கலி 4945
2 சாலிவாகன சகாப்தம்
3 1766 க்குச் சொல்லாநின்ற
4 கொல்லம் 1025 ..
5 வருஷம் பைங்கூனி மாதம் உயஉ உ
6 தி சுக்ர வாரம் பயி ... ம் உ
7 திர நட்செத்திரம் ... நா
8 .. யாகம் பவகரணம் ... சுபதி
9 னத்தில் உதையாதி நாளிகை
10 12 கு மேல் ... யள
11 ணமும் தாமிக ... அம்ப
12 ஞனாரையும் கட்டிய .. ாக
13 . ல் சாத்தூரப்பன் சுவாமி வெங்
14 கிடாசலபதி ாப
15 மை உச்செபத் திருநாள்
16 எழந்தருளியும் . . கொ
17 [ல்ல] பட்டி ஆதி சுர..
18 மன்னியஸ்ரீ வெங்கடேஸ்
19 வர எட்டப்பக் கெச்சிலப்ப
20 நாயுக்கரவர்கள் குமாரர்
21 [ஸ்ரீ] ராமசுவாமிக் கெச்சி

22 லப்ப நாயக்கரவர்

23 கள் பாரியா கி

24 . கட்டி முடித்த

25 திருப்பணி உபையம்

## 35:2

*இடம் : விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் சாத்தூரிலுள்ள சாத்துரப்பன் பெருமாள் கோவிலில் பெரிய கொல்லபட்டி சமீன்தார் செய்தளித்த பித்தளைக் குதிரை வாகனத்தின் புட்டத்தில்*

*காலம் : கொல்லம் 999; (கி.பி. 1823).*

1 ஸ்ரீமன் வெங்கடாசல சுவாமிக்கு வால

2 கெச்சிலப்பமுயர் செய பணிவிடை

3 யைப் புதுகாக்கின பரிவாகனமிவை

4 யாண்டு 999 திச சுபானு சித்திரை

5 மாதம் 1 தேதி பூறுவாசி முதல் இரு நாங்கா

6 மனு வெங்கட லட்சுமி வரபாலன்

7 வெங்கட்டேசுர எட்டயப்பப் பால குமாரன்

8 சுந்தரபாண்டிய ராமசுவாமிக் கெச்சில

9 ப்ப நாயக்கர் உபயம்

---

# 36. குடந்தை காகித ஆவணம்

சு. இராசகோபால், சென்னை.

இடம் : *சென்னை ஐ.ஐ.டி கணிப்பொறித்துறைப் பேராசிரியர் முனைவர் கல்யாண கிருஷ்ணனிடமுள்ள நகல்.*

காலம் : *30.3.1859.*

செய்தி : *கும்பகோணத்திலிருந்த சங்கராச்சாரி சுவாமியார் மடத்தோடு வியாசராய சுவாமியார் என்பவர் ஏதோ தகராறு பண்ணியதாகவும் அது மாமூலுக்கு விரோதமாக (வழக்கத்துக்கு மாறாக) இருந்த படியால் அதைத் தடுத்து கலகம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து கும்பகோணம் தாலுகா தலைமைக் காவலர் நாராயணராயருக்கு அனுப்பப்பட்ட ஆணை இது. நகல் என்பதால் ஆங்கிலத்தில்* A True Copy *என்று எழுதி மாஜிஸ்ட்ரேட் ஒப்பம் இட்டுள்ளார்.*

1 கும்பகோணம் தாலுகா யெட்போலீஷ் னாராயணறாயருகு அனு

2 ப்பின தாக்கீது கசுப்பா கும்பகோணத்திலிருக்குற ஸ்ரீ சங்கறாசாறி

3 சுவாமியாற் மடத்து வழியாய் மாமூலுக்கு விரோதமாய் வியாச

4 ராய சுவாமியார் பிராதுடன் வறயேத்தினமாயிருக் குறதாகவும் அப்படி

5 க்கி வறாமலிருக்கும்படி உத்திரவாக வேணுமெண்டும் ஸ்ரீமகாராஜா

6 சாயுபு அவர்களிலாக்காவிலிருந்து மிமொரண்டம் வந்திருக்குது

7 அதுகாரியத்துக்கு அப்படி மாமூலுக்க விரோதமாய் நடக்குறதுனால்

8 கலகத்துக்கு யேதுவாகுமானபடியினாலே அப்படிக்கி யாதொரு

9 கலகமும் நடக்க யெடமன்னியிலும மாமூலுக்கு விறோத மன்னியி

10 லும் சரியாய் நடந்து வரத்தக்கதாக தகுமான பந்தோபஸ்து செயிது

11 அது விபரம் ரிபோறட்டு செய்யவும் மு. நாகபட்டணம் 1859 இது

12 மாற்ச்சி மாதம் 25 தேதி (ஒப்பம்) மே. பிஷாபு யாதஸ்து

13 இதின் 9வது வரியிலும் 10வது வரியிலும் சிகப்பு இங்கியினால் யெழிதியிருக்குற

14, அக்ஷரங்களும் இதின் அசல்ப்படி மேல் பாகம் மேற்படி யெழுதப்பட்டிருக்கிறது

15 முகாபீஸ் ஸம்பிறதி வேலைபார்குற

16 ராமசாமிய்யன் அக்குறது


17 சாம்றாவு

18 ரிக்கார்ட் கிளர்க்

19 1859ம் வருஷம்

20 மார்ச்சு மாதம் 30ம் தேதி

21 குடுக்கப்பட்டுது



படம் 36 1 குடநதை. காகித ஆவணம். 1859

# 37. ஆங்கிலேயர் கால உடமை ஆவணம்

**ஆர். பாலச்சந்திரன், திருத்தங்கல்.**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், புதுக்கோட்டை ஊரின் தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. முத்து அய்யங்கார் அவர்களிடமிருந்து காகித ஆவணம் பெறப்பட்டது. இவ்வூர் 1896ல் திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் இருந்துள்ளது. புதுக்கோட்டையைச் சேர்ந்த வெங்கிடாசலபதி சுவாமி, விசுவநாதசுவாமி கோவில்களின் தர்மகர்த்தாவுக்கு ஆங்கிலேய அரசாங்கத்தின் மெட்ராஸ் கவுன்சிலின் கவர்னர் சார்பாக 10.5.1865-ல் இந்த நில உரிமைப் பத்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இக்கோவில்களின் நிர்வாகத்திற்காக 0.69 ஏக்கர் புஞ்சை வரிநீக்கம் செய்யப்பட்டு (தேவதாயம்) அனுபவித்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட்டுள்ளது. கவர்னர் சார்பாக இனாம் கமிசனர் கையொப்பம் இட்டுள்ளார். மீண்டும் சர்வே செய்தபோது நிலம் கூடுதலாக இருந்ததால் 29.4.1881ல் 5 அணா வரி (quit rent) வசூல் செய்யுமாறு விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் தலைப்பில் கவுன்சில் ஆப் மெட்ராஸ் கவர்னரின் சின்னம் ((Emblem) பொறிக்கப்பட்டுள்ளது. கீழ்பகுதியில் இனாம் கமிசன் மெட்ராஸ் (Inam Commission - Madras) முத்திரை இடப்பட்டுள்ளது.

---

# 38. உரப்பனவிளை கல்வெட்டு

கே. கோபாலன், நாகர்கோவில்.

இடம் : கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், திருநயினார் குறிச்சிக்கு அருகே அமைந்துள்ளது, உரப்பனவிளை கிராமம். இக்கிராமத்தில் திரு. பொ. பாலசுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான வீட்டு வளாகத்தில் உள்ள ஒரு சிறிய கல்தூண்.

காலம் : 18ம் நூற்றாண்டு.

செய்தி : திருவிதாங்கூர் மன்னர் வீர உதைய மார்த்தாண்டவர்மர் (கி.பி. 1729–1758) காலத்தில் அச்சச் சன்னாசி என்பவர் பெருவாய் கோயிலுக்கு கொடை வழங்கியதை இக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் உரப்பனவிளை பேரூர்விளை என்ற பெயரில் வழங்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. மொன்னவிளை என்ற பெயரும் தற்போதைய வழக்கில் உள்ளது. 'மொன்ன' என்றால் பெரிய எனப்பொருள் வழங்கப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பெருவாய் கோயில் என்பது ஒரு சாஸ்தா கோயிலாக இருந்திருக்க வேண்டும்.

1 அருளிச் செயல் ...
2 [பே] பரூர் விளை ..
3 வீர உதைய மாத்தான்
4 [ட]வர்ம்மர் செய ...
5 ஞ் யெரு ...
6 வ்ரைசி ... வா
7 யில் பத்து
8 அச்சச் சன்னாசி
9 பெருவாய் கோ
10 யில் ...

# 39. தஞ்சை பிரசன்ன பெருமாள் கோயில் கல்வெட்டுகள்

மு. ராஜேஷ், தஞ்சாவூர்.

## 39:1

*இடம் : தஞ்சை பிரசன்ன பெருமாள் கோயில் மண்டபத்தின் தரையில் இடப்பட்டுள்ள கல்.*

*காலம் : 18ஆம் நூற்றாண்டு.*

*செய்தி : செங்கல்பட்டைச் சேர்ந்த முத்துசெட்டி என்பவருடைய மகனும், கிழக்கிந்தியக் கம்பெனியில் சுபேதாரருமான பெருமாள் என்பவர் இக்கோயிலில் கருட மண்டபம் கட்டுவித்தது.*

1 ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோ
2 வில் கெருட மண்டபம் திருவடி கோ
3 லும் செங்கல்பட்டிலிருக்கும் முத்து செட்டி
4 யாற் குமாரர் கும்பினி கும்பினிசுபேதாற் பெருமாள்
5 ... தருமம் சதா சேவா சாலிவாகன....

## 39:2

*இடம் : சுவாமி பிரகாரத்திற்கு செல்லும் படிக்கட்டுகளில் சிதைந்து போன மராட்டி மொழிக் கல்வெட்டு.*

*காலம் : 18 ஆம் நூற்றாண்டு.*

*செய்தி : இக்கோயிலுக்கு கல்ப விருக்ஷ வாகனத்தை ரங்க உத்தவர் என்பவர் தானம் அளித்துள்ளார்.*

த$_4$ர்ம ரங்கோ$_3$உத$_4$வ கல்பவிருக்ஷ வாஹந

---

# 40. கண்டவராயன்பட்டிக் கல்வெட்டுகள்

நா. வள்ளி, காரைக்குடி.

இன்று பெரிதும் பேசப்படும் தன்னிறைவுத் திட்டம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே, செட்டிநாட்டுப் பகுதிகளில் செயல்பட்டதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. திருப்பத்தூருக்கு அருகிலுள்ள ஊர் கண்டவராயன்பட்டி. அந்த ஊருக்குத் தேவையான ஊருணி, குளம், பாலம், சாலை, ஆகியவற்றை நாட்டார்கள் உதவியோடு நகரத்தார்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் பின்வருமாறு

## 40:1

காலம் : *ஸ்ரீமுக வருஷம், 1933–34.*

செய்தி : கண்டவராயன் பட்டியில் உள்ள வல்லநாட்டுக் கருப்பர் கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக ஒரு பாலத்தை அவ்வூரைச் சேர்ந்த நகரத்தார் பெண்மணி அமைத்துக் கொடுத்தமை பாடல் கல்வெட்டாக வடிக்கப்பட்டுள்ளது.

1 வானார் சீர் கண்ட வராய நகர் வாழுஞ்
2 சீனாப் பெரியணனுஞ் சீர்த்தியற
3 மானான் றன் சீல மனைவி செழுமை
4 மீனாட்சி அம் பால மமைத்தார் அன்பால்
5 ஸ்ரீ முக வருஷம். சித்திரை மாதம்

## 40:2

இடம் : மேற்கண்ட கல்வெட்டின் எதிர்ப்புறம்.

காலம் : *1933–34*

செய்தி : வல்ல நாட்டுக் கருப்பரை வழிபட பாலம் அமைத்துத் தந்த அன்னாரை வாழ்த்தி பாடல் கல்வெட்டு.

1 சிவமயம்
2 வல்ல நாட்டுக் கருப்பர் கோயில் வழியதனில்
3 நல்லடியை யேத்தியருள நாடுமினென்று
4 எல்லோர்க்கும் சால உரை மத்தளம் போல்
5 பாலமமைத்த அன்னார் ஞாலமதில் வாழ்க பன்னாள்
6 ஸ்ரீ முக வருஷம் சித்திரை மாதம் 1 தேதி சி ந பெரி

## 40:3

இடம் : *அங்குள்ள ஊருணியில் உள்ளது*

1 உ

2 சிவமயம்

3 நல வருஷம் வைய்காசி மாதம் 5 தேதி

4 ஆத சு.பழ. பெரி. பெரியகருப்பன் செட்டி

5 செய்து வைத்த தருமம்

6 வல்லனாட்டு கருப்பையா துணை

## 40:4

இடம் : *திருப்பத்தூரிலிருந்து கண்டவராயன்பட்டிக்குப் போகும் வழியில் கண்டவராயன்பட்டி விலக்கில் இடதுபுறம் உள்ள பலகைக் கல்.*

காலம் : *1922.*

செய்தி : *கல்வெட்டு உள்ள ஊரிலிருந்து மற்ற ஊர்கள் எவ்வளவு மைல் தொலைவில் இருக்கின்றன என்பதையும், கைகாட்டியை அமைத்தவர் யார் என்பதையும் தெரிவிக்கிறது.*

| | | | |
|---|---|---|---|
| 1 | உ | 8 | 7 |
| 2 | சிவமயம் | 9 | நெற்குப்பை |
| 3 | திருப்பத்தூர் | 10 | 10 |
| 4 | 1M | 11 | பொன்னமராவதி |
| 5 | கண்டவறாயன்பட்டி | 12 | 14 |
| 6 | 2 | 13 | தெ.சி. நா. செ. தர்மம் 1922 |
| 7 | தெக்களுர் | | |

## 40:5

இடம் : முன்கல்வெட்டுக்கு வலதுபுறம்.

காலம் : *1922.*

செய்தி : *கண்டவராயன் பட்டியைச் சேர்ந்த தெ.சி.நா சொக்கலிங்கம் செட்டியார் திருமயத்திற்குச் செல்லச் சாலை அமைத்தது.*

| | | | |
|---|---|---|---|
| 1 | உ | 5 | தெ.சி றா |
| 2 | சிவமயம் | 6 | சொக்கலிங்கம் |
| 3 | திருமயம் | 7 | செட்டியாரவர்கள் |
| 4 | கண்டவறாயன்பட்டி | 8 | போடப்பட்ட ரோட்டு |
| 9 | தர்மம் | 10 | ஸ்தாபிதம் 1922 |

## 40:6

இடம் : கண்டவராயன்பட்டி.

காலம் : 10.2.1924.

செய்தி : கண்டவராயன் பட்டியிலிருந்து மகிபாலன்பட்டி செல்வதற்குரிய சாலையை அமைத்துக் கொடுத்தது. தேவகோட்டையைச் சேர்ந்த அ.கண வீரப்ப செட்டியார் மகிபாலன் பட்டியிலிருந்து தேவகோட்டைக்கு வளர்ப்புப்பிள்ளையாகச் சென்றவர். தான் பிறந்த ஊருக்கு ஏதாவது நன்மை செய்யக் கருதி பல்லாண்டு வரையிலும் மாட்டு வண்டிகள் போய் வருவதற்குரிய பாதை வசதிகளுமின்றி அவ்வூர் மக்கள் துயரப்பட்டதை அறிந்து மகிபாலன் பட்டிக்கும் கண்டவராயன் பட்டிக்கும் இடையில் சாலை அமைத்தார்.

1 சிவமயம்

2 வயிரவ மூர்த்தி துணை

3 மகிபாலன் பட்டி வழி (Road)

4 இது தேவகோட்டை

5 திருவாளர் அ. கண

6 வீரப்ப செட்டியாரவர்கள்

7 தருமமாக இயற்றியது

8 ருதிரோற்காரி வருஷம்
தை மாதம் 28 தேதி

9 10 2.1924

10 தேவகோட்டை

11 திருவாளர் பள.செ

12 இலக்குமணச் செட்டியார்

13 அவர்களால்

14 திறக்கப் பெற்றது

15 அறம் வாழ்க

# 41. வாங்கல் மற்றும் செட்டிபாளையம் கல்வெட்டுகள்

இர. செயராமன், தஞ்சாவூர்.

## 41:1

இடம் : கரூரிலிருந்து வடக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள வாங்கல் என்ற ஊரில் உள்ள வாங்கலம்மன் கோயிலின் முன் மண்டபத்தின் நுழைவு வாயிலின் இருபுறமும் சுதையால் செய்யப்பட்ட துவாரபாலகி உருவங்கள் உள்ளன. இடது பக்கம் உள்ள உருவத்தின் பீடத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. இரண்டு பகுதிளாகப் பிரித்து படிக்கவேண்டும்.

காலம் : கி.பி. 19ஆம் நூற்றாண்டு.

செய்தி : அரியான்மூப்பன் மகன் சின்ன அரியான் மூப்பன் என்பவன் இந்த துவாரபாலகி உருவங்களைச் செய்ய பொருளுதவி வழங்கியது.

**முதல் பகுதி**

1 அரியான்


2 மூப்பன்

**இரண்டாம் பகுதி**

3 மகன் சின்ன

4 அரியான்முப்ப

5 ன் உபையம்



படம் 41:1. வாங்கல், சுதைச் சிற்பத்தில் உள்ள கல்வெட்டு.

## 41:2

இடம் : கரூருக்குத் தெற்கே தான்தோன்றிமலை செல்லும் வழியில் 7 கி.மீ. தொலைவில் உள்ள செட்டிபாளையம் சிவன்கோயில் கருவறையின் உள்ளே நுழைவு வாயிலின் வலதுபுறத் தூண்.

காலம் : வீரபாண்டியன் யா:10 (கி.பி. 13–14ஆம் நூற்றாண்டு).

1. ஸ்வஸ்தி ஸ்ரீ வீர
2. பாண்டிய தேவற்கு
3. யாண்டு 10 ஆவது
4. வெங்கால நாட்டு...

# 42. உசிலம்பட்டி பகுதியில் தொல்லியல் கண்டுபிடிப்புகள் - 1999

வீ. செல்வகுமார், புணே;
ம. காந்திராசன், சென்னை.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் 1999ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பெற்ற கள ஆய்வின் போது ஒரு இரும்புக்கால- முன் வரலாற்றுக்கால ஊரிருக்கை, ஓர் இடைக்கால கல்வெட்டு மற்றும் எட்டு நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**செம்பட்டி (மேற்கு)**

செம்பட்டி (மேற்கு) உசிலம்பட்டியிருந்து 7 கி.மீ. தொலைவில் திருமங்கலம் செல்லும் சாலையில் உள்ளது. செம்பட்டிக்கு கிழக்கே அருகருகே அமைந்துள்ள கன்னியம்பட்டி மற்றும் செம்பட்டி கிராம கண்மாய்களுக்குள்ளே ஓர் இரும்புக்கால-முன் வரலாற்றுக்கால ஊரிருக்கை கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு கருப்பு, சிவப்பு மற்றும் இரசட் கலவை பூசப்பட்ட பானை ஓடுகள், விலங்கு எலும்புகள், சங்கு, வளையல் துண்டுகள் போன்ற தொல்பொருட்கள் காணப்படுகின்றன. மேலும் திருமங்கலம், உசிலம்பட்டி பிரதான சாலையிலிருந்து, கன்னியம்பட்டி செல்லும் மண் சாலை பிரியுமிடத்திற்கு அருகே முதுமக்கள் தாழிகள் கிடைத்தாக கூறப்படுகிறது.

**மேலஉரப்பனூர்**

மேலஉரப்பனூர், செக்கானூரணியிலிருந்து திருமங்கலம் செல்லும் சாலையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள கீழஉரப்பனூருக்கு சுமார் 2 கி.மீ. வடமேற்கே உள்ளது. இவ்வூரின் கிழக்குப்புறம் அமைந்துள்ள கண்மாயின் தென்புறக் கரையில் உள்ள மதகின் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் மூன்று செவ்வக வடிவக் கற்களில், ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ளது. இம்மதகில் காணப்படும், சில கல்வெட்டுள்ள கற்களின் வடிவமைப்பைப் பார்க்கும் போது, இவற்றை ஒரு சேதமடைந்த முற்காலக் கோவிலிருந்து எடுத்து, இம்மதகைக் கட்ட பயன்படுத்திருக்கலாம் என்று கருத வாய்ப்புள்ளது.

**நடுகற்கள்**

கீழே விவரிக்கப்படும் எட்டு நடுகற்களில், ஆறு நடுகற்கள் (குப்பணம்பட்டியில் உள்ள நடுகற்கள் எண் 2-3ஐத்தவிர) முன்பு வாலாந்தூரில் இருந்ததாகவும், பின்பு அங்கு காவல் நிலையக் கட்டிடம் எழுப்பப்பட்ட போது, மற்ற கிராமங்களில் வசிக்கும் பங்காளிகள், இறந்தவர்கள் தங்கள் மூதாதையர் என்பதனால் அவற்றைத் தங்கள் கிராமங்களுக்கு கொண்டு சென்றதாக செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

இவற்றில் மூன்று சொக்கத்தேவன் பட்டியிலும், இரண்டு கன்னியம்பட்டியிலும், ஒன்று குப்பணம்பட்டியிலும் காணப்படுகின்றன. முன்பு வாலாந்தூரில் ஒரே இடத்தில் இருந்ததாகக் கூறப்பட்ட போதிலும், இவை வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு சண்டையிலோ அல்லது வேறு காரணத்தினாலோ இறந்தவர்களுக்காக எழுப்பப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இந்நடுகற்களின் சிற்பவமைதி, வடிவமைப்பு மற்றும் தொடர்புடைய நாட்டுப்புற வழக்காறுகள் இதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இங்கு விவரிக்கப்படும் அனைத்து நடுகற்களும், உச்சியில் சிங்க முகத்துடன் திருவாசியைப் போன்ற அமைப்புடன் உள்ளன. கன்னியம்பட்டியில், தெற்கு நோக்கி உள்ள இரண்டு நடுகற்களைத் தவிர, மற்றவை அனைத்தும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன.

**சொக்கத்தேவன் பட்டி**

இவ்வூர், உசிலம்பட்டியிலிருந்து 9 கி.மீ. கிழக்கே உள்ள வாலாந்தூருக்கு வடக்கே சுமார் அரை கி.மீ தொலைவில் உள்ளது. இவ்வூருக்கு சுமார் 300மீ வடமேற்கே உள்ள ஒரு ஊரணிக்கு மேற்கே மூன்று நடுகற்கள் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. இந்நடுகற்கள் பாப்பாபட்டி மற்றும் வாலாந்தூர் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையில் இறந்தவர்களுக்காக எழுப்பப்பட்டவையாக கூறப்படுகிறது. இந்தச் சண்டை இந்நடுகற்கள் இருக்கும் இடத்திற்கு 100 மீ மேற்கே நடந்ததாக ஊர் மக்கள் நம்புகிறார்கள்.

நடுகல் எண் 1 (1.2 + அடித்தளம் 0.45 × 0.63 × 0.25 மீ) (படம், 41:1)

நடுகல் எண் 1, இம் மூன்று நடுகற்கள் கொண்ட வரிசையின் வடகோடியில் அமைந்துள்ளது. இதில், நிற்கும் ஒரு வீரனின் உருவம், நிறுத்திய நிலையில் உள்ள ஓர் ஆளுயுர ஈட்டியை இடதுகையில் பிடித்தவாறு உள்ளது. இடுப்பின் மீது வைத்தது போல் உள்ள வலதுகையில் பிடித்திருக்கும் பொருள் என்னவென்று தெரியவில்லை. ஆனால் ஊர்மக்கள் இதை வங்கி எனப்படும் போர்க்கருவி என்று கூறுகின்றனர்.

நடுகல் எண் 2 (1 + அடித்தளம் × 1.5 × 0.3 மீ)

இது, நடுகல் எண் 1க்கு தெற்கே, சுமார் 5 மீ தொலைவில் பெருமளவு புதைந்து காணப்படுகிறது. இந்த நடுகல்லில் பாயும் குதிரைமீதமர்ந்து, உயர்த்திய வலது கையில் வாளுடனும், இடதுகையில் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தவாறும் உள்ள ஒரு வீரனின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வீரனின் வலப்புறத்தில் குடையைப் பிடித்தவாறு ஒரு சிறிய உருவமும், இடப்புறத்தில் மங்கலச் சின்னங்களுடன் நின்ற நிலையில் இரண்டு பெண் உருவங்களும் உள்ளன. இந்த பெண் உருவங்களில், வீரனின் அருகில் உள்ள உருவம் (சுமார் 60 செ.மீ) மற்றொன்றை (சுமார் 30 செ.மீ) விட உயரமாக உள்ளது.



42:1



42:2



42:3



42:4



42:5



42:6

படம் 42. நடுகற்கள்: 1,2. சொக்கத்தேவன்பட்டி; 3,4. குப்பணாம்பட்டி; 5,6. கன்னியம்பட்டி.

நடுகல் எண் 3 (1.3 + அடித்தளம் × 1.5 × 0.33 மீ) (படம் : 42.2)

இது நடுகல் எண் 2லிருந்து சுமார் 8 மீ தெற்கில் உள்ளது. இதில் குதிரை வீரனும், அவனது இடப்புறத்தில் மங்கல சின்னங்கள் ஏந்தியவாறு ஒரு பெண்ணுருவமும் காணப்படுகின்றன. இந் நடுகல்லில் குடை காணப்படவில்லை. ஆனால் குதிரையின் கீழ் ஒரு சிறிய உருவம் காணப்படுகிறது.

**குப்பணம்பட்டி**

குப்பணம்பட்டி உசிலம்பட்டியிலிருந்து 6 கிமீ தொலைவில் மதுரை செல்லும் சாலையில் உள்ளது. இவ்வூரில் மூன்று நடுகற்கள் உள்ளன. இவற்றில் நடுகல் எண் 1, வாலாந்தூரிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நடுகல் எண் 1 (1.25+ அடித்தளம் × 0.85 × 0.3 மீ) (படம் : 42.3)

இந்நடுகல் ஊரின் கிழக்கே, சமீபத்தில் கட்டப்பட்ட மண்டபத்தில் உள்ளது. இதன் அமைப்பு, சொக்கத் தேவன்பட்டி நடுகல் எண் 1ஐ ஒத்துள்ளது. ஆனால் இந்நடுகல்லில், இரு கை கூப்பி வணங்கிய நிலையில் ஒரு சிறிய பெண்ணுருவம் கூடுதலாகக் காணப்படுகிறது. இவ்வூர் மக்கள், இப்பெண்ணுருவம் நடுகல்லில் காணப்படும் வீரனின் தங்கையைக் குறிப்பதாகவும், இவ்வீரன் தன் தங்கைக்கு உதவச் சென்றபோது இறந்ததாகவும் கூறுகின்றனர்.

நடுகல் எண் 2 (1.10 + அடித்தளம் × 0.70 × 0.30 மீ)

இது ஊருக்குத் தென்மேற்கே சுமார் 150மீ தொலைவில் உள்ளது. நிற்கும் வீரனின் உருவம் செதுக்கப்பட்ட இந்நடுகல், அமைப்பில் சொக்கத்தேவன்பட்டி நடுகல் எண் 1ஐ ஒத்துள்ளது.

நடுகல் எண் 3 (1.20 × 0.95 × 0.30 மீ) (படம் : 42.4)

இந்நடுகல், நடுகல் எண் 2க்கு 100மீ தென்மேற்கே சமீபத்தில் கட்டப்பட்ட மண்டபத்தில் உள்ளது. இதன் நடுப்புறத்தில் ஒரு ஆண் உருவமும், அதன் இரு புறங்களிலும், ஒவ்வொரு பெண்ணுருவமும் காணப்படுகின்றன. இம் மூன்று உருவங்களும் இருகை கூப்பி வணங்கிய நிலையில் உள்ளன. இதில் காணப்படும் ஆணுக்கு இரு மனைவிகள் இருந்ததாகவும், இவர் நடுகல் எண் 2ல் உள்ள வீரனின் அண்ணன் என்றும் கூறப்படுகிறது.

**கன்னியம்பட்டி**

கன்னியம்பட்டி, உசிலம்பட்டியிலிருந்து திருமங்கலம் செல்லும் சாலையில் சுமார் 7 கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு கிழக்கு, மேற்காக செல்லும் தெருவின் வடபகுதியில் இரண்டு நடுகற்கள் காணப்படுகின்றன

நடுகல் எண் 1 (1.10 + அடித்தளம் × 1.20 × 0.25 மீ) (படம் : 42.5)

இதில் குதிரைவீரனின் உருவமும், குடையைப் பிடித்தவாறு உள்ள ஒரு சிறிய உருவமும், கையில் மங்கலச் சின்னங்களுடன் நிற்கும் ஒரு

பெண்ணுருவமும் செதுக்கப்பட்டுள்ளன.

நடுகல் எண் 2 (1.20 + அடித்தளம் × 0.10 × 0.25 மீ) (படம் : 42.6)

இது நடுகல் எண் 1ஐ ஒத்துள்ளது. ஆனால் இதில் காணப்படும் குதிரை வீரனின் இருபுறங்களிலும் ஒவ்வொரு பெண்ணுருவம் உள்ளன.

இந்த இரண்டு நடுகற்களின் அருகில் கள்ளக் காமன் எனப்படும் வீரனின் நினைவாக எழுப்பப்பட்ட, உருவங்கள் பொறிக்கப்படாத, ஒரு கல் காரணப்படுகிறது. இவ்வீரனை தொட்டப்பநாயக்கனூர் ஜமீன்தார் போருக்குச் செல்லுமாறு கூறிய போது, அவன் ஜமீன்தாரிடம் 'நான் இறந்தால் எனக்கு என்ன கிடைக்கும்?' என்று கேட்டதாகவும், அதற்கு ஜமீன்தார், 'உன்னை மக்கள் தெய்வமாக வழிபடுவார்கள்' என்று கூறியபின், அவன் போருக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது. இந்த இரண்டு நடுகற்களும் கள்ளக் காமனுக்கு போரில் துணை சென்ற வீரர்களுக்காக எழுப்பப்பட்டது என்று உள்ளூர் மக்கள் கருதுகின்றனர்.

**நடுகற்கள் பற்றிய குறிப்பு**

இந்த நடுகற்களின் அமைப்பை உற்று நோக்கும்போது இவை சமூகத்தில் அல்லது போர்ப்படைகளில் வெவ்வேறு நிலைகளில் இருந்தவர்களுக்காக எழுப்பப்பட்டவை எனத் தெரிகிறது. இவற்றின் சிற்பவமைதி மற்றும் நாட்டுப்புற வழக்காறுகளின் அடிப்படையில், இவை நாயக்கர்காலம் அல்லது நாயக்கர்களுக்குப்பின் ஆட்சி புரிந்த ஜமீன்தார் காலத்தைச் சேர்ந்தவை எனக் கருதலாம்.

இந்த நடுகற்கள் அனைத்தும் பொதுவாக ஒருவர் இறந்தபின்பு, உடனடியாக எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இயலாது. உசிலம்பட்டி பகுதியில் சில கிராமங்களில் (எ.கா.) பாப்பாபட்டி மற்றும் பசுக்காரன்பட்டி இறந்தவர்கள் நினைவாகச் சிற்பங்கள் பொறிக்கப்படாத கல் அல்லது விளக்குத்தூண் ஒன்றை வைத்து வழிபடும் வழக்கம் நிலவுகிறது. இவற்றைப் 'பட்டவன் சாமி' என்று ஊர்மக்கள் குறிப்பிடுகின்றனர். 'நேரமும் வசதியும்' அமையாததால் இவற்றிற்கு தக்க சிலை அல்லது நடுகல் எழுப்பப்படவில்லை என்று கூறப்படுகிறது. சமீபத்தில், கீரிப்பட்டு கிராமத்தில் பல தலைமுறைகளுக்கு முன் இறந்த ஒருவருக்கு சிலை வைத்திருப்பதாகக் கூறப்படும் செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# 43. தலைப்பலி நடுகல் சிற்பம்

நாக. கணேசன், கரூர்.

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், புஞ்சைப்புகளூர் கிராமத்தில் காவிரியின் தென்கரையில் உள்ள கண்டியம்மன் கோயில்.

காலம் : கி.பி. 11ஆம் நூற்றாண்டு.

செய்தி : 79 செ.மீ. உயரமும், 58 செ.மீ. அகலமும் கொண்ட பலகைக் கல்லில் தலைப்பலி கொடுக்கும் வீரன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இடைக்கட்டுடன் கால்களில் வீரக்கழல் அணிந்து, தனது வலது காலை மண்டியிட்டும், இடது காலை குத்திட்டும் அமர்ந்த நிலையில் தனது இடது கையினால் தலைமுடியை இறுகப்பிடித்துக் கொண்டு வலது கையிலுள்ள வாளின் மூலம் தனது கழுத்தை தானே அறுக்கின்ற பாவனையில் சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



படம் 43.1. புஞ்சைப் புகளூர். தலைப்பலி சிற்பம்

---

தகவல் அளித்தவர். ஓவியர் திரு. ராஜு, கரூர்.

# 44. அரிய இராவண அனுக்கிரக சிற்பம்

த. சந்திரகுமார், தஞ்சாவூர்.

இராவணன் கையிலாயத்தை தூக்குவது போன்ற சிற்பங்களை எல்லோரா, துமர்லேனா குடைவரைகளிலும் தமிழகத்தில் மல்லை போன்ற ஊர்களிலும் காணலாம். பொதுவாக இச் சிற்பங்கள் கைலாயத்தின் மீது பார்வதிதேவி சிவனை அணைத்துக்கொண்டும், கணங்கள் சூழ நின்றுகொண்டும், கின்னரர், வித்யாதரர்கள் பறந்து கொண்டு இருப்பது போன்றும், இருபது கைகளுடன் இராவணன் கீழே இருந்து மலையை தூக்குவது போன்ற அமைப்பில் உள்ளன. ஆனால் திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோவிலின் உள் சுற்றாலையிலுள்ள 15-16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பம் ஒன்று குறிப்பிடத்தக்க வேறு தெய்வப் படிமங்களோடு உள்ளது.

இச்சிற்பத்தில் இருபது கைகளைக் கொண்ட இராவணன் கைலாயத்தைத் தூக்குவது போன்று காட்டப்பட்டுள்ளது. அம்மலையின் மேலே பார்வதிதேவி சிவனை அணைத்துக்கொண்டு இருக்கிறார். சிவபெருமானும் முன் இடது கையால் பார்வதியை அணைத்துக்கொண்டு உள்ளார். முன் வலதுகை உடைபட்டுள்ளது. பின்கைகளில் மான் மழு தாங்கியுள்ளார். இவர் ஜடாபாரம் என்னும் தலை அலங்காரத்துடனும், தேவி கரண்ட மகுட அமைப்பினையும் கொண்டிருக்கின்றனர். சிவனின் இடது காதில் மகரகுண்டலமும் வலது காதில் சுருட்டிய ஓலையும் உள்ளன. வலது புறத்தில் நின்ற கோலத்தில் உள்ள விநாயகரையும், அஞ்சலி செலுத்தும் பாங்கில் உள்ள நந்திகேசுவரரையும், அவரது மனைவி சுயம்பிரபையுடன் மிக அழகுற செதுக்கி உள்ளனர். நந்திகேசுவரர் தன் பின்கைகளில் சிவனைப் போல் மான்மழு கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இடது புறத்தில் தன்தாயான பார்வதிதேவி நடுக்க முற்றிருக்கும் நிலையில் ஆபத்தை அறிந்துகொள்ள இயலாத பாலகனாக கந்தன் ஆடுவதுபோன்று அமைக்கப்பட்டுள்ளான். பக்கத்தில் நீண்ட கழிகொண்டு ஒல்லியான உருவத்துடன் பிருங்கி முனிவரும் உள்ளார். நந்தி இடது பக்கமும், சிங்கம் வலதுபக்கமும் உள்ளன. மேலும் வித்யாதரர்கள் அல்லது கந்தர்வர்கள் என்றழைக்கப் படுபவர்கள் மேற்புறங்களில் பறந்தவண்ணம் காட்டப்பட்டுள்ளனர். குன்றெடுக்கின்ற அரக்கனின் செயலை இகழ்கின்ற பாங்கில் இரண்டு சிவகணங்கள் நகைப்பது போன்று கீழே காட்டியுள்ளனர். மலை உச்சியில் பன்றியும், சிங்கம் ஒன்றும் இராவணனை நோக்கியவாறு செதுக்கப்பட்டுள்ளன. கயிலை மலையின் இரண்டு வாயில் காவலர் வணங்கும் நிலையில் பக்கத்திற்கு ஒருவராக மலையின் இருபக்கமும் நிற்பது போன்று செதுக்கியுள்ளனர்.

இங்கு புராணக் கதையும், சிற்பச் செய்தியும் முற்றிலும் புதியதொரு முறையில் சிந்தனை செய்யப்பட்டு சிற்பமாக உருவாக்கப்பட்டுள்ளது. பிற சிற்பங்களில் காணப்படாத தெய்வத் திருஉருவங்கள் பல இங்கு காட்டப்பட்டுள்ளன. சிவ குடும்பம் என்றழைக்கப்படும் நிலையில் விநாயகரையும், கந்தனையும் காட்டி உள்ளனர். தேவார மூர்த்திகளால் பாடப்பெறாத செய்திகள் சிற்பவடிவமாக இடம் பெற்றுள்ளன. பெற்றோர்களின் இடையே நடனமாடும் பாங்கில் அமைக்கப்பட்ட கந்தனை சோமாசுகந்தர் வடிவங்களில் பார்க்க முடியும். அந்த நடன நிலையை இங்கே எடுத்தாண்டுள்ளனர். இராவணனுடைய இருபது கைகளையும் காட்டி, சில கைகள் மலையை தூக்குவது போன்றும் சில கைகள் மடியில் இறுத்தி பலப்பிரயோகத்திற்கு துணை சேர்ப்பது போன்றும் காட்டப்பட்டிருப்பது சிறப்பாகும்.



படம் 44:1. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், இராவண அனுக்கிரக சிற்பம்.

# 45. மாபூசுகான் காசு

**ஆறுமுக சீதாராமன், தஞ்சை.**

கி.பி. 1752–ல் மதுரையில் நாயக்கர் ஆட்சியை மீண்டும் உயிர்ப்பிக்க மறவர் சீமை அரசுகள் சேர்ந்து எடுத்த முயற்சியை முளையிலேயே கிள்ளி எடுக்க அன்வருதீனுடைய மற்றொரு மகனாரகிய மாபூசுகான் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. வெற்றி கொண்ட மாபூசுக்கு மதுரையில் ஆளுநர் பதவி கிட்டியது. இந்நிலையில் மாபூசுகான் ஒரு கிளர்ச்சியை மேற்கொண்டதால் அதை அடக்கும் பொருட்டு கி.பி.1759–ல் கான்சாகிப் என்பவனை மதுரை ஆளுநராக அமர்த்தினார்கள்.



படம் 45. மதுரை, மாபூசுகானின் காசு

கி.பி. 1752 முதல் கி.பி. 1759 வரையில் உள்ள இடைவெளியில் மாபூசுகான் சுயேச்சையாக மதுரை சுபாவிற்கு நவாபாகச் செயல்பட்டுள்ளான் என்பதை நிரூபிக்கும் வகையில் அவனால் வெளியிட்ட செப்புக்காசு ஒன்று மதுரையில் கிடைத்துள்ளது. காசின் முன் பக்கத்தில் சதுரமான மூன்று கட்டங்களின் வெளியே, வேலைப்பாடுகளுடன் கூடிய தோரணவாயில் (தர்கா) உள்ளது. பின்பக்கத்தில் மூன்றுவரிகளில் 'மாபூசுக[ான்]' என்ற பெயர் தமிழில் உள்ளது.

நவாபுகளுக்குப் பாரசீக மொழியே ஆட்சி மொழியாயினும் காசில் தங்களது பெயர்களைப் பொறிக்கும்போது தமிழுக்கும் முக்கியத்துவம் கொடுத்து காசுகளைத் தமிழில் வெளியிட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

# 46. கான்சாகிப்பின் தமிழ்க் காசு

ஆறுமுக சீதாராமன், தஞ்சை.

மருதநாயகம் என்ற கான்சாகிப் கி.பி. 1759–ல் மதுரை சீமைக்கு ஆளுநர் ஆனார். அவர் காலத்தில் (கி.பி 1759 – 1764) வெளியிட்ட ஒரு செப்புக்காசு மதுரையில் கிடைத்துள்ளது. காசின் எடை 2.6 கிராம். காசின் முன்பக்கத்தில் நடுவில் ஆறு புள்ளிகளும், இதைச்சுற்றி விளிம்பில் வட்டமான புள்ளிகளும் அமைந்துள்ளன. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் 'கானு' என்று அண்மைக்கால தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக் கதைப்பாடலான 'கான்சாகிப் சண்டை' என்ற நூலில் கான்சாகிப்பிற்கு கானு, கானுசாயபு துரைகானு, துரைகானுசாயபு, மதுரை துரை கானு என்ற அடைமொழியே நூல் முழுவதும் வந்துள்ளது. அதனால் 'கானு' என்ற பெயர் பொறித்துள்ள காசு கான்சாகிப்பினால் மதுரையில் சுயேச்சை நிலையில் ஆட்சி செய்யும் போது வெளியிடப்பட்டது எனலாம்.



முன்பக்கம் பின்பக்கம்

படம் 46. மதுரை. கான் சாகிப்பின் காசு.

# 47. தென் இலங்கையில் பழந் தமிழ் நாணயங்கள்

*ஐராவதம் மகாதேவன், சென்னை.*

இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியம் பண்டைக் காலத்தில் ருஹுூன என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகராக திஸ்ஸமஹரம என்ற மூதூர் விளங்கியது. அதற்கு அருகிலுள்ள அகுருகொட என்ற சிற்றூரில் அண்மையில் வீடுகள் கட்டுவதற்காகத்தோண்டிய குழிகளிலிருந்து ஏராளமான நவரத்தினக் கற்கள், பாசிமணிகள், இலச்சினைகள், நீள்சதுர வெள்ளி முத்திரைக் காசுகள், ரோமானிய நாணயங்கள் மற்றும் ஈயத்தினாலான நூற்றுக்கணக்கான உள்ளூர்க் காசுகள் முதலிய தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றைக் கிராமத்து மக்கள் காசுக்கடைகளில் விற்றுவிட்டனர். இதைக் கேள்வியுற்ற எம். விக்கிரமசிங்கெ என்ற நாணய ஆய்வாளர் கிடைத்தவரை அத்தொல்பொருள்களைச் சேகரித்து ஆய்வு செய்து, பேராசிரியர் ஓஸ்மண்ட், பொப்பியராச்சியுடன் கூட்டாக ஓர் அரிய நூலை வெளியிட்டுள்ளார். இலங்கையிலிருந்து அண்மையில் வெளியாகியுள்ள நாணய ஆய்வுகளில் இந் நூலே மிகவும் முக்கியமானது என்று கருதலாம்.

இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள உள்ளூர் ஈய நாணயங்களில் பெரும்பாலானவற்றில் சிங்கள–பிராகிருத மொழியில் பிராமி எழுத்துகளில் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிங்கள மன்னர்களின் பெயர்களும் இலச்சினைகளும் காணப்படாததால் இக் காசுகளை அப்பிராந்தியத்தைச் சார்ந்த குறுநிலத்தலைவர்களோ அல்லது வணிகக் குழுக்களின் தலைவர்களோ வெளியிட்டிருக்கக் கூடும் என்று நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் இலங்கையிலுள்ள பிராமிக் கல்வெட்டுகளுடன் ஒப்பிட்டு எழுத்தமைதியின் அடிப்படையில் இக்காசுகள் ஏறத்தாழ கி.மு. 2 – கி.பி. 2ம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டவை என்றும் இவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள காசுகளின் தொகுப்பில் நான்கு காசுகளின் படங்களிலிருந்து அவற்றில் தமிழ் மொழியில் தமிழ்–பிராமி எழுத்துகளில் வாசகங்கள் உள்ளன என்று எனக்குத் தெரியவந்தது. தமிழ் - பிராமியில் போதிய பரிச்சயம் இல்லாததால் இந்நூலாசிரியர்களால் இக்காசுகளின் வாசகங்களைச் சரிவர வாசிக்க இயலவில்லை. இக்காசுகளின் முக்கியத்துவத்தையும் பழமையையும் கருத்தில் கொண்டு இவற்றை மீண்டும் வாசித்து வெளியிட பேராசிரியர் பொப்பியராச்சியின் முன் அனுமதி பெற்று ஓர் ஆய்வுக் கட்டுரையை நான் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறேன். ஆவணம் இதழின் வாசகர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்காக அக் கட்டுரையின் சுருக்கத்தைத் தமிழில் வெளியிடுகிறேன்.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நான்கு காசுகளும் ஈயத்தாலானவை; வட்ட வடிவானவை; அவற்றின் விட்டம் 14–17 மி.மீ; எடை 2–2.56 கிராம். காசுகளின் முன் பக்கத்தில் பலவகை உருவங்களும், பின்பக்கத்தில் தமிழ் மொழியில் தமிழ்–பிராமி எழுத்துகளில் வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன (படங்கள் 47: 1–4; முதல் நூலின் வரிசை எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன).

**தமிழ்–பிராமி வாசிப்பு முறை :**

இக்காசுகளை ஆய்வு செய்யுமுன்னர் தமிழ்–பிராமி எழுத்துகளைக் கூட்டி வாசிக்கத் தேவையான சில சிறப்பு விதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. உயிர்மெய் அகர–ஆகாரக் குறியீடுகள் ஒரே மாதிரியானவை
2. உகர–ஊகார உயிர்களும் அவற்றின் உயிர்மெய்க்குறியீடுகளும் ஒரே மாதிரியானவை
3. இலக்கிய நடையில் இரட்டிக்கும் ஒற்றுகள் தமிழ்–பிராமி வாசகங்களில் பெரும்பாலும் ஒற்றையாகவே வரும்
4. –அன், –ஒன், –ஒர், –இல் போன்ற விகுதிகள் பெரும்பாலும் தனித்தே எழுதப்பட்டிருக்கும்

**காசு எண் 1 (நூல் எண் A 17)** *(படம் 47:1)*

காசின் முன்புறத்தில் வலப்புறம் நோக்கிய சேவலின் உருவமும் பின்புறத்தில் நடுவில் சுவஸ்திகச் சின்னமும் அதைச் சுற்றித் தமிழில் வாசகமும் உள்ளன. இக் காசின் அச்சு, பிழையாக நேரிடையாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஆகையால் காசில் வாசகம் கண்ணாடியில் காண்பது போன்று மாறி அமைந்துள்ளது. மேலும் *சா* என்ற எழுத்து மட்டும் அச்சில் மாற்றிச் செதுக்கப்பட்டிருப்பதால் அது காசில் *செ* போன்று தோன்றுகிறது. காசின் திருந்திய வாசகம் வருமாறு :

**ம ல ச[ா] த அ ன**

இது இலக்கிய நடையில் பின்வருமாறு அமையும்:

**மல்ல சாத்தன்**

ம(ல்)லன் என்ற பெயர்அழகர்மலையிலும், சா(த்)தன் என்ற பெயர் திருப்பரங்குன்றம் முதலிய பல குகைகளிலும் தமிழ்–பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

**காசு எண் 2 (நூல் எண் A 20)** *(படம் 47:2)*

காசின் முன்புறத்தில் மலர்போன்ற வடிவமும் பின்புறத்தில் இரு குறியீடுகளுடன் தமிழில் வாசகமும் காணப்படுகின்றன. காசின் வாசகம் வருமாறு:

**க பா தி க டா ல அ ன**

இது இலக்கிய நடையில் பின் வருமாறு அமையும்:


**கபதி கடலன்**

கபதி என்ற சொல் சிங்கள மொழியில் க$_3$பதி அல்லது க$_3$பிதி என்றும், பிராகிருதத்தில் க$_3$ஹபதி என்றும் வழங்கும் பட்டப் பெயராகும். இதே சொல் தமிழ் இலக்கியத்தில் காவிதி என்றும், கல்வெட்டுகளில் கவிதி, காவதி, காவிதி என்றும் வழங்கியது. இந்தப்பட்டம் முற்காலத்தில் வணிகக் குழுக்களின் தலைவர்களுக்கும் அரசின் உயர் அதிகாரிகளுக்கும் அளிக்கப்பட்டது. பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காவிதி என்ற சொல் கணக்கன் என்ற பொருளில் மாறி வழங்கியது.


கடலன் என்ற பெயர் மாங்குளம் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் கா டா ல· அன என்று ஏறத்தாழ இக் காசிலுள்ளது போன்றே எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




47:1



47:2



47:3



47:4

படம் 47:1-4. தென்னிலங்கை, பழந்தமிழ் நாணயங்கள்.

**காசு எண் 3 (நூல் எண் A 21)** *(படம் 47:3)*

காசின் முன்புறத்தில் மலர் போன்ற வடிவமும் பின்புறத்தில் சுவஸ்திகச்சின்னமும் தமிழில் வாசகமும் காணப்படுகின்றன. காசின் வாசகம் வருமாறு :

**ஊ தி ரா ன**

இது இலக்கிய நடையில் பின்வருமாறு அமையும் :

**உத்திரன்**

இப் பெயர் உத்திர நட்சத்திரத்திலிருந்து பெறப்பட்டுள்ளது. அரிக்கமேட்டில் கிடைத்த ஒரு பானைச் சில்லில் **உத்திரன்** என்ற பெயர் தமிழ்-பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது.

**காசு எண் 4 (நூல் எண் A 37)** *(படம் 47:4)*

காசின் முன்புறத்தில் சக்கரத்தின் ஆரங்கள் போன்ற வடிவமும் பின்புறத்தில் ஒரு குறியீடும் தமிழில் வாசகமும் காணப்படுகின்றன. இதில் முதல் எழுத்து *தி* என்று இருந்திருக்க வேண்டும். இகர உயிர்மெய்க் குறியீடு விடுபட்டோ அழிந்தோ போய் இப்போது த-கரமே எஞ்சியுள்ளது. காசின் திருந்திய வாசகம் வருமாறு.

**[தி] ஸ பி டா ன**

இது இலக்கிய நடையில் பின்வருமாறு அமையும் :

**திஸ்ஸ பிட்டன்**

திஸ்ஸ என்ற பிராகிருதச் சொல் திஷ்ய (புஷ்ய) நட்சத்திரத்தின் பெயரிலிருந்து பெறப்பட்டதாகும். இப்பெயர் இலங்கைக் குகைக் கல்வெட்டுகளிலும் இந்தியாவின் பிராகிருதக் கல்வெட்டுகளிலும் பல இடங்களில் காணப்படுகிறது. அழகன்குளத்தில் கிடைத்த பானைச்சில்லில் *திசஅன்* என்றும், அழகர்மலைக் குகையில் *தியன்* என்றும் தமிழ்-பிராமி எழுத்துகளில் இப் பெயர் எழுதப்பட்டுள்ளது.

பிட்டன் என்ற பெயர் இக் காசில் உள்ளது போன்றே பி டா ன என்று கொங்கர்புளியங்குளம் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

**காசுகள் கூறும் தகவல்கள்**

மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இக் காசுகளைப் பற்றிப் பொதுவான சில கருத்துகளைக் கூறமுடியும் :

1. நான்கு காசுகளிலும் பெயர்கள் -அன் விகுதியில் முடிவதால் இவை தமிழ்ப் பெயர்களேயாகும். மேலும் தமிழ்-பிராமிக்கே உரிய சிறப்பு எழுத்தாகிய னகரமும் எல்லாக் காசுகளிலும் காணப்படுகிறது.

2. இக்காசுகளின் எழுத்தமைதியிலிருந்தும், எழுத்துகளைக் கூட்டிப் படிக்கும் முறையிலிருந்தும் இவை தமிழ்-பிராமிக் குகைக் கல்வெட்டுகளின் தொடக்க காலம் அதாவது சுமார் கி.மு. 2ம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கருதலாம். தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ள நாயணங்களில் பாண்டியன் பெருவழுதியின் இரு காசுகளே இவ்வளவு பழமை வாய்ந்தவையாகும்.

3. தமிழ் வணிகக் குழுவினர் தென்னிலங்கைக் கடற்கரைப் பகுதிகளில் குடியேறி இங்கு கிடைத்த நவரத்தினக் கற்களையும் அவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட பாசிமணிகளையும் இலங்கையின் பிற பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வந்தனர். (பண்டைத் தமிழகத்தில் கொங்குநாட்டில் கொடுமணல் நகரில் நவரத்தினக் கற்களிலிருந்து பாசிமணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இருந்தன என்பதையும், அங்கு நடந்த அகழ்வாய்வுகளில் பானைச் சில்லுகளில் கீறப்பட்ட தமிழ்-பிராமி, சிங்கள-பிராமி வாசகங்கள் கிடைத்துள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்).

4. இக்காசுகளைத் தமிழ் மொழியில் தங்கள் பெயர்களிலேயே வெளியிடும் உரிமையை தென்னிலங்கையில் குடியேறியிருந்த வணிகக் குழுக்களின் தலைவர்கள் பெற்றிருந்தனர் என்பது ஒரு சிறப்பான செய்தியாகும்.

---

நன்றி: இக் கட்டுரையை (ஆங்கிலத்திலும் தமிழிலும்) தம் நூலிலிருந்து படங்களுடன் வெளியிட முன் அனுமதி தந்த நூலாசிரியர்களுக்கு நன்றி படங்கள் நூலாசிரியர்களின் உரிமை பெற்றவையாகும்

**துணை நூல்கள்**

1. Osmund Bopearachchi & Rajah M. Wickremesinhe *Ruhuna: An Ancient Civilisation Re-visited. Numismatic and Archaeological Evidence on Inland and Maritime Trade*, Nugegoda, Sri Lanka, 1999.

2. Iravatham Mahadevan "Corpus of the Tamil Brahmi Inscriptions", *Seminar on Inscriptions*, 1966, Madras, 1968.

3. Iravatham Mahadevan, "Ancient Tamil Coins from Sri Lanka", *Journal of the Institute of Asian Studies*, Vol. XVII, No.2, March 2000 : 147-156.

# 48. யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது நாணயங்கள்

ப. புஷ்பரட்ணம், தஞ்சாவூர்.

பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகளே முதலில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசமைத்தவர்கள் எனக் கூறும் வரலாற்றறிஞர்கள் வரலாற்று இலக்கியங்களில் சிங்கை, யாழ்ப்பாணம் என வேறுபட்ட தலைநகரங்கள் கூறப்பட்டாலும் இவையிரண்டும் நல்லூரையே குறித்ததெனவும் கூறுகின்றனர் (இந்திரபாலா : 1972). இக்காலத்தில்தான் இலங்கைத் தமிழர்கள் முதன் முறையாக நாணயங்களை வெளியிடத் தொடங்கினார்கள் என்பதற்கு இம்மன்னர்கள் வெளியிட்ட ''சேது'' எனும் மொழி பொறித்த நாணங்களைச் சான்றாகக் காட்டுகின்றனர்.

இவ்வரசையாண்ட மன்னர்கள் கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ''சேது'' எனும் மொழி பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இவர்கள் தாம் இராமேஸ்வரத்திலிருந்து வந்தமையினையும், அத்தலத்துடன் தாங்கள் கொண்டிருந்த தொடர்பினையும் நினைவு கூறும் வண்ணம் தாம் வெளியிட்ட அரச ஆவணங்களிலும், கொடிகளிலும், கல்வெட்டுகளிலும், நாணயங்களிலும் சேது என்ற சொல்லை மங்கல மொழியாக, குலச்சின்னமாகப் பயன்படுத்தினர் (Pathmanathan : 1980:411-413). இதுவரை கிடைத்தவற்றுள் பெரும்பாலானவை செப்பு நாணயங்களாகும். இதனால் செப்பு நாணயங்களை மட்டும் வெளியிட்டார்கள் எனக் கூறப்பட்டு வந்தது. ஆனால் பேராசிரியர் பத்மநாதன் பொஸ்ரன் நூதனசாலையில் இம்மன்னர் வெளியிட்ட பொன்நாணயம் ஒன்றிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் இம்மன்னர் வெளியிட்ட வெள்ளி நாணயங்களைக் கண்டு பிடிக்க முடிந்தது (புஷ்பரட்ணம்: 1999:6–9). ஆனால் வகையிலும், தொகையிலும் செப்பு நாணயங்களையே அதிகமாக வெளியிட்டனர் எனக் கூறலாம்.

இலங்கையிலும், தமிழகத்திலும் இந்நாணயங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டும் இந்நாணயத்தை யார் வெளியிட்டார்கள் என்பது நீண்ட காலமாக அறியப்படாத ஒன்றாகவே இருந்துவந்தது. பிறின்செப் என்ற அறிஞர் தனது சேகரிப்பில் மூன்று சேது நாணயங்களை வைத்திருந்த போதிலும் தமிழ் மொழியில் பயிற்சியில்லாத காரணத்தால் இவற்றை ஆராய முற்படவில்லை (Prensep; 1858:423). றைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) என்ற அறிஞர் சேது நாணயங்களின் எடை, அளவு, தோற்றம் என்பன சிங்களமன்னன் பராக்கிரமபாகுவின் நாணயங்களை

ஒத்திருப்பதால் இம்மன்னனே பாண்டி நாட்டில் புழக்கத்திற்காக இந்நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறினார். இதற்கு பராக்கிரமபாகுவின் படைத்தளபதி பாண்டி நாட்டிற்குப் படையெடுத்துச் சென்ற போது அங்கு பராக்கிரமபாகுவின் பெயரில் நாணயங்களை வெளியிட்டான் எனச் சூளவம்சம் கூறுவதைச் சான்றாகக் காட்டினார் (*Culavamsa* 47:101). திரேசுசுவாமியார் (Rev.Tracey) இராமநாதபுரத்துச் சேதுபதிகள் வெளியிட்ட சேதுபதி என்ற மொழி பொறித்த நாணயங்களுக்கும், சேது என்ற மொழி பொறித்த நாணயங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி சேது மொழி பொறித்த நாணயங்கள் இலங்கையில் சிறப்பாக வடஇலங்கையில் கிடைப்பதைக் கொண்டு இவை இலங்கையிலேயே வெளியிடப்பட்டதாகக் கூறினார் (Tracey 1889-94:1-12). சுவாமி ஞானப்பிரகாசர் தமக்கு கிடைத்த 70 சேது நாணயங்களை ஆய்வுக்கு அடிப்படையாகக் கொண்டு இவற்றை நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த யாழ்ப்பாண மன்னர்களே வெளியிட்டனர் என்ற கருத்தை தக்க சான்றுகளுடன் வெளியிட்டார்(Gnana Prakasar 1920:172-179).

பிற்காலத்தில் கொட்றிங்டன் (Codrington: 1920), முதலியார் இராசநாயகம் *(1926)*, பேராசிரியர் வி.சிவசாமி *(1974)*, செ. கிருஷ்ணராசா *(1983)* போன்றோர் இலங்கை நாணயங்கள் தொடர்பாக ஆய்வு செய்தபோது தமக்குக் கிடைத்த சேது நாணயங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் 1978, 1980 காலப்பகுதியில் பேராசிரியர் சி. பத்மநாதன் மேற்கொண்ட ஆய்வு முன்னைய ஆய்வுகளை விடப் பலவகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது *(1978, 1980)*. இவர் தமக்குக் கிடைத்த 80க்கு மேற்பட்ட சேதுநாணயங்களை கால அடிப்படையில் முதன்முறையாக அட்வணைப்படுத்தியதோடு, அவற்றின் எடை, அளவு, குறியீடுகள், சின்னங்கள், கலைநயம் என்பவற்றின் பின்னணியில் இவற்றை ஆறு வகையாகப் பிரித்தார். அவற்றுள் சில நாணயங்களின் வடிவமைப்பு அளவு, நிறை என்பனவற்றில் உள்ள வேறுபாட்டைக் கருதி உப்பிரிவுகளாகப் கணித்துள்ளார் *(1980 : 414-417)*.

அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் வடஇலங்கையில் சிறப்பாக பூநகரி, தென்மராட்சி, கந்தரோடை, புத்தூர் ஆகிய இடங்களில் களஆய்விலும், மக்களிடமிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட சேது நாணயங்களைச் சேகரிக்க முடிந்தது. அவற்றுள் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் ஆய்வு செய்த நாணயங்களும், வேறு சிலவகை நாணயங்களும் உள்ளன. இவை நாணயங்களில் இடம்பெற்றுள்ள சின்னங்களுக்கிடையிலான பிரதான வேறுபாட்டை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பத்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**வகை** - *1 (படம் 48:1)*

இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் அதிகமாகக் கிடைத்த நாணயங்கள் இவ்வகையைச் சார்ந்தன. தமிழ்நாட்டு நாணயவியலாளர் பலரும்

இவற்றைச் சோழ நாணயமாகவே எடுத்துக்கொண்டனர். இதற்கு இந்நாணயங்களின் தோற்றமைப்பு சோழநாணயங்களைப் பெருமளவு ஒத்திருப்பதே காரணமாகும். யாழ்ப்பாண மன்னர் வெளியிட்ட ஆரம்பகால நாணயம் இதுவெனப் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் கருதுகிறார் (1980:417). இதன் பொதுவான அம்சங்கள்:

இடம் : கல்முனை (பூநகரி), விட்டம் : 1.8 செ.மீ, நிறை : 2.3 கிராம்.

முன்புறம் : வலது புறம் பார்த்த நிலையில் நிற்கும் மனித உருவம் வலது கை உயர்த்தப்பட்ட நிலையில் குடம் போன்ற ஒரு பொருளைத் தாங்கி நிற்கிறது. கீழே சந்திரன், இடப்புறம் குத்துவிளக்கு.

பின்புறம் : வலது புறம் பார்த்த நிலையில் அமர்ந்திருக்கும் மனிதவுருவம். அதனருகில் தமிழ் எழுத்துக்களில் சேது என்று உள்ளது.

**வகை -2** (படம் 48:2)

முதலாவது நாணயத்தைப் போல, ஆனால் கூடிய அழகும், கலை வேலைப்பாடும் கொண்டது. அத்துடன் மனித உருவத்துடன் அமர்ந்த காளையுருவம் முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது.

இடம் : கல்முனை (பூநகரி), விட்டம் : 1.9 செ.மீ, நிறை : 3.8 கிராம்.

முன்புறம் : இடப்புறம் நிற்கும் மனித உருவம். இருபுறமும் குத்து விளக்குகள்.

பின்புறம் : இடப்புறமாக அமர்ந்த காளையுருவம். மேல் பகுதியில் பிறைச்சந்திரன். காளையின் கீழ் தமிழில் சேது என்று உள்ளது.

**வகை - 3** (படம் 48:3)

இரண்டாவது வகையைப் பெரிதும் ஒத்தது. இடதுபுறத்தில் பூரணகும்பம் போன்று காணப்படுகிறது. காளையின் கழுத்தில் அலங்கரிக்கப்பட்ட மாலை காணப்படுவதுடன் சூரியன் முக்கிய சின்னங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

இடம் : நல்லூர் (பூநகரி), விட்டம் : 4.0 செ.மீ, நிறை : 4.0 கிராம்.

முன்புறம் : வலப்புறம் நிற்கும் மனித உருவம். இரு கைகளும் உயர்த்தப்பட்ட நிலையில் வலது கை ஏதோ ஒரு பொருளைத் தாங்கியவாறு நிற்கிறது. இடப்புறத்தில் பூரணகும்பம் போன்ற பொருள். வலப்புறத்தில் குத்துவிளக்கு.

பின்புறம் : இடப்புறமாக அமர்ந்திருக்கும் காளையுருவம். மேலே பிறைச்சந்திரனும், சூரியனும். காளையின் கீழ் தமிழில் சேது என்ற பெயர்.

**வகை - 4** (படம் 48:4)

முதல் மூன்று வகை நாணயங்களை விடச் சற்றுப் பெரியவை. அத்துடன் எண்ணிக்கையில் இவை கூடுதலாக கிடைத்துள்ளன. இதில் இடம்பெற்றுள்ள குத்துவிளக்கு சோழ நாணயங்களில் வரும் குத்துவிளக்கைப் பெரிதும் ஒத்தவை. இவை இரண்டாவது காலகட்ட நாணயங்கள்.

இடம் : கச்சாய் (தென்மராட்சி), விட்டம் : 1.8 செ.மீ, நிறை : 3.0 கிராம்.

முன்புறம் : இடப்புறம் குத்துவிளக்கு. வலப்புறம் காளை, நடுவில் வலப்புறம் பார்த்த நிலையில் நிற்கும் மனித உருவம்.

பின்புறம் : வலப்புறம் பார்த்த நிலையில் அமர்ந்திருக்கும் மனித உருவம். வலப்புறம் தமிழில் சேது என்ற பெயர் உள்ளது.

**வகை – 5** (படம் 48:5)

இவை மூன்றாவது காலகட்டத்தைச் சேர்ந்த நாணயங்கள்.

இடம் : இயற்றாலை (தென்மராட்சி), விட்டம் : 1.9 செ.மீ, நிறை : 3.0 கிராம்.

முன்புறம் : வலப்புறம் நிற்கும் மனித உருவம். இடப்புறமாக அமர்ந்த காளையுருவம். அதன் மேற்பகுதியில் பிறைச்சந்திரன். இந்த அம்சத்தை நான்காவது வகை நாணயங்களில் காணமுடியவில்லை. காளையின் வாற்பகுதியுடன் திரிசூலம் காணப்படுகிறது. இடப்புறத்தில் பீடத்துடன் கூடிய குத்துவிளக்கு உள்ளது.

பின்புறம் : இடப்புறம் அமர்ந்திருக்கும் மனித உருவம். வலப்புறம் தமிழில் சேது என்ற பெயர் காணப்படுகிறது.

**வகை – 6** (படம் 48:6)

இந்நாணயங்கள் கலைநயமும், அழகும் மிக்கவை. இவை பல அளவுகளிலும், வடிவங்களிலும் ஆக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வெள்ளி நாணயங்களும் இவ்வகையைச் சேர்ந்தவை. இதற்குப் புத்தூரில் கிடைத்த வெள்ளி, செப்பு நாணயங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

6 அ) இடம் : புத்தூர் (வலிகாமம்), உலோகம் : செப்பு, விட்டம் : 1.7 செ.மீ, நிறை : 2.8 கிராம்.


6 ஆ) இடம் : புத்தூர் (வலிகாமம்), உலோகம் : வெள்ளி, விட்டம் : 2.4 செ.மீ, நிறை : 11.6 கிராம்.

முன்புறம் : வலப்புறம் நிற்கும் மனித உருவம். வலது கை தோளுக்கு மேலே ஏதோ ஒரு பொருளை ஏந்தியவாறு உள்ளது. வலப்புறமாக குத்துவிளக்கு. இதற்குப் பக்கத்தில் வேல் காணப்படுகிறது. இடது கை கீழ்நோக்கி ஏதோ ஒரு பொருளைத் தொட்டவாறு உள்ளது. அது கிளைகளுடன் கூடிய மரமாக அல்லது வச்சிராயுதமாக இருக்கலாம்.

பின்புறம் : மனித உருவத்திற்குப் பதிலாக இடப்புறமாக அமர்ந்திருக்கும் காளையுருவம். அதன் மேற்பக்கமாகப் பிறைச்சந்திரனும், சூரியனும் உள்ளன. காளையின் கீழ் தமிழில் சேது என்ற பெயர் காணப்படுகிறது.

**வகை – 7** (படம் 48:7)

இவை மிகச் சிறியவை. மற்றைய நாணயங்களில் இடம் பெற்ற மனித உருவத்திற்குப் பதிலாக எட்டு இதழ் கொண்ட தாமரை மலரின் இதழ்கள்




படம் 48. சேது நாணயங்கள்; 1,2. கல்முனை; 3. நல்லூர்; 4. கச்சாய்;
5. இயற்றாலை; 6. புத்தூர்; 7. சிறுப்பிட்டி,; 8. கந்தரோடை;
9. வீரபாண்டியன் முனை; 10. ஈழவூர்.

இடம் பெற்றுள்ளன. காளையுருவம் பீடத்தில் அமர்ந்துள்ளது.

இடம் : சிறுப்பிட்டி (வலிகாமம்), விட்டம் : 1.8 செ.மீ, நிறை : 3.4 கிராம்.

முன்புறம் : வட்டம், வட்டத்திற்கு வெளியே விளிம்பை ஒட்டிப் புள்ளிகள். வட்டத்திற்குள் எட்டு இதழ் கொண்ட தாமரை மலரின் இதழ்கள். அதன் மத்தியில் தமிழில் சேது என்ற மங்கல மொழி உள்ளது.

பின்புறம் : பீடத்தில் இடப்புறம் பார்த்த நிலையில்அமர்ந்த காளை மேல்பகுதியில் பிறைச் சந்திரனும், சூரியனும் உள்ளன.

**வகை** – 8 (படம் 48:8)

இவற்றில் உள்ள சின்னங்கள் தெளிவாகவும், அழகாகவும் வார்க்கப்பட்டுள்ளன. இதில் இடம்பெற்றுள்ள மயில், மலர் என்பன ஏனைய நாணயங்களிலிருந்து இவற்றை வேறுபடுத்துகின்றன.

இடம் : கந்தரோடை (வலிகாமம்), விட்டம் : 2.0 செ.மீ, நிறை : 3.7 கிராம்.

முன்புறம் : இடப்புறம் பார்த்து நிற்கும் மனிதவுருவம். இரு கைகளும் மேலே உயர்த்திய நிலையில் மலர் போன்ற பொருளை ஏந்தியவாறு உள்ளன. இருபுறமும் பீடத்துடன் கூடிய குத்து விளக்கு.

பின்புறம் : இடது புறமாக காளை அமர்ந்துள்ளது. இதற்கு முன்னாள் வலப்புறமாக மயில் உள்ளது. காளைக்கு மேல் பிறைச்சந்திரனும், சூரியனும் உள்ளன. காளைக்கு கீழே தமிழில் சேது என்ற மொழி உள்ளது. விளிம்பைச் சுற்றி மலர் மொட்டுப் போன்ற உருவங்கள் காணப்படுகிறன.

**வகை** – 9 (படம் 48:9)

இவை எட்டாவது வகையைச் சார்ந்தவை. ஆனால் பின்புறத்தில் மயிலுக்குப் பதிலாக மலர் இடம் பெற்றுள்ளது.

இடம் : வீரபாண்டியன்முனை (பூநகரி), விட்டம் : 2.1 செ.மீ, நிறை : 3.0 கிராம்.

முன்புறம் : இடப்புறமாக நிற்கும் மனிதன். இருபுறமும் குத்துவிளக்கு.

பின்புறம் : இடப்புறம் அமர்ந்திருக்கும் காளையுருவம். அதன் மேல் பிறைச்சந்திரன், சூரியன். காளைக்கு முன் ஆறிதழ் கொண்ட தாமரை. காளைக்கு கீழே தமிழில் சேது என்ற மொழி காணப்படுகின்றது.

**வகை** – 10 (படம் 48:10)

முன்னைய இருநாணய வகையைச் சேர்ந்தவை. ஆனால் இதில் காளைக்கு முன்னால் மனித உருவம் காணப்படுகிறது.

இடம் : ஈழுணர் (பூநகரி), விட்டம் : 2.0 செ.மீ, நிறை : 2.6 கிராம்.

முன்புறம் : இடப்புறமாக நிற்கும் மனித உருவம். இருபுறமும் குத்துவிளக்கு.

பின்புறம் : இடப்புறம் அமர்ந்திருக்கும் காளையுருவம். அதன் மேல்

பிறைச் சந்திரன், சூரியன். காளைக்கு முன்னால் நிற்கும் மனித உருவமும், காளைக்கு கீழே தமிழில் சேது என்ற மொழியும் காணப்படுகின்றன.

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு 350 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்ததற்குச் சில சான்றுகள் உண்டு. ஆயினும் இதையாண்ட மன்னர்களின் பெயர், காலம், ஆட்சிப்பரப்பு என்பனவற்றை சரிவர அறிந்து கொள்ளப்போதிய சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. இந்நிலையில் மேற்கூறப்பட்ட நாணயங்களிடையே உள்ள வேறுபாடுகள், காணப்படும் இடங்கள் என்பன இவ்வரசின் நீண்டகால வரலாறு, பொருளாதாரம், அயல்நாட்டு உறவு என்பவற்றை உறுதிப்படுத்த ஓரளவு உதவுகின்றன. மேலும் நாணயங்களில் இடம்பெற்றுள்ள காளை, சூலம், வேல், மயில், தாமரை, குத்துவிளக்கு போன்ற மங்கலச் சின்னங்கள் இம்மன்னர்கள் சைவசமயத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றன.

**உசாத்துணை நூல்கள்**

Codrington, H.W. 1924, *Coins and Currency*, Colombo.

Gnanapragasar, S. *The Forgotten Coinage of the Kings of Jaffna*, *Ceylon Antiquary*, 5.

Prinsep, 1858, *Essays on Indian Antiquities*, London

Pathmanathan, S. 1978, *The Kingdom of Jaffna*, Arul M. Rajendran, Colombo

Pathmanathan, *S., 1980,* Coins of Medieval Sri Lanka: The Coins of the Kings of Jaffna, *Spolia Zylanica*, Vol. 35, Part I and II · 409-417.

இந்திரபாலா, க 1972, *யாழப்பாண இராச்சியததின தோற்றம்*, கண்டி

கிருஷ்ணராஜா, செ , 1983, யாழ்ப்பாணக்குடாநாடடில் கிடைத்த நாணயங்கள், *சிந்தனை*, தொகுதி 1 71–84

சிவசாமி, வி 1974, *யாழ்ப்பாணக் காசுகள*, தெல்லிப்பளை

புஷபரடணம், ப , 1993, *பூநகரி–தொல்பொருளாய்வு*, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு, யாழ்ப்பாணம்

புஷ்பரடணம், ப , 1998, பூநகரியில் கிடைத்த அரிய சங்ககால நாணயங்கள், *ஆவணம்*, தமிழகத்தொல்லியல் கழகம், 9 114 119

புஷ்பரட்ணம், ப., 1999, தென்னிலங்கையில் கிடைத்த பண்டைய தமிழ் நாணயங்களின் வரலாற்றுப் பின்னணி, *நாவாவின் ஆராய்ச்சி*, ஜுலை, 49 : 55–70

புஷ்பரட்ணம், ப , 1999, வடஇலங்கையில அரசதோற்றமும் பாண்டியா வெளியிட்ட நாணயஙகளும், *தமிழ் நாட்டு நாணயங்கள்*, அருஙகாட்சியகங்கள சென்னை

* இந்நாணயஙகளை வகைப்படுதத உதவிய நாணயவியலாளா திரு. அளக்குடி ஆறுமுகசீதாராமன் அவாகளுக்கும், இதற்கு வேண்டிய கட்டுரையை அனுப்பி வைத்த பேராசிரியா சி பதமநாதன அவர்களுக்கும் என் நன்றிகள்

# 49. பள்ளித்தொங்கலுடையார்

ந. முத்து, தஞ்சாவூர்.

பள்ளித்தொங்கல் என்ற சொல்லுக்கு பிங்கல நிகண்டு முதலிய பழைய நிகண்டுகளில் பொருள் கொடுக்கப்படவில்லை. ஆயினும், பள்ளி என்பதற்கு முனிவர் இருப்பிடம், ஊர், மக்கள், படுக்கை என்ற பல பொருள்களும், தொங்கல்[1] என்பதற்கு பூமாலை, குடை, ஆபரணத்தொங்கல், மயிற்றோகை போன்ற பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் பள்ளித்தொங்கல் ஒரே சொல்லாக காணப்படுகிறது. உண்மையில் பள்ளித்தொங்கலுடையார் என்ற கூட்டுச்சொல்லின் ஒரு பகுதியாக அது வருகிறது.

கல்வெட்டுகளில் வரும் பள்ளித்தொங்கலுடையார் யார் என்பது கேள்வி. திருக்கடையூரில் உள்ள 1160ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் (தெக. 22, எண். 41) திருப்பள்ளித்தொங்கலுடையார் என்ற குழுவைச் சேர்ந்தவர் முப்பது பேர் சுட்டப்படுகின்றனர். இவர்கள் அனைவருடைய பெயர்களும் கொற்றக்குடைக்கோன் என்ற விகுதியுடன் முடிகின்றன. எ. கா: சோழதிவாகர கொற்றக்குடைக்கோன். இந்தப் பெயர்களில் முன்னொட்டாக அரசர்களின் பட்டப்பெயர் உள்ளது. ஆகவே, இப் பெயர்களுக்கு உரியோர் அரசனால் சிறப்பு செய்யப்பெற்றவர்கள் என்று கருதலாம். இந்த 30 பெயர்களில் கண்காணி செய்வார், கைஞ்ஞாயகம் (படைநாயகம்?) செய்வார், மற்றும் படைத்தளவம் செய்வார் என்ற மூன்று வகையினர் இருந்தனர், திருக்கடையூரில் இவர்கள் வாழ்க்கைச் செலவுக்காக (ஜீவிதம்) நிலம் அளிக்கப்பட்டிருந்தது என்றும் அறிகிறோம். மேலும், இவர்களை நியாயம் என்றும் இதே கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதே போல் 1184ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு திருவீழிமிழலைக் கல்வெட்டு[2] திருப்பள்ளித்தொங்கல்–நியாயத்தாரைக் குறிப்பிடுகிறது. எனவே திருப்பள்ளிதொங்கலுடையார், படையில் ஒரு பிரிவாக இருந்தனர் எனத் தெரிகிறது.[3] இவர்களுடைய பெயர்களில் வரும் கொற்றக்குடைக்கோன் என்ற சொல், இவர்களுக்கும் கொற்றக்குடைக்கும் உள்ள தொடர்பை உணர்த்தும். அதாவது, அரசச்சின்னங்களில் ஒன்றான கொற்றக்குடையை ஏந்திச் செல்வதும், அதைப் பாதுகாப்பதும், இவர்களுடைய முக்கிய பணியாக இருந்திருக்க வேண்டும்.

பழங்காலத்தில் இருந்தே அரசச் சின்னங்களில் ஒன்றாக குடை கருதப்பட்டது என்று *தொல்காப்பியம்*[4] (பொருள் அதிகாரம், மரபியல் 72), *புறப்பொருள் வெண்பாமாலை*[5] முதலிய இலக்கண நூல்களில் இருந்து அறியலாம். குறிப்பாக, *புறப்பொருள் வெண்பாமாலை*, பாடாண்படலத்தில் குடைமங்கலம் அரசனின் கீர்த்திகளில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. அதே இலக்கணத்தில் காஞ்சிப்படலத்தில்

குடைசெலவு என்ற ஒரு சூத்திரம் அரசன் போருக்கு ஆயத்தம் செய்யும் பொழுது குடையை புறவீடு விடுத்தல் என்பதை ஒரு முக்கிய சடங்காகச் சொல்கிறது. கலிங்கத்துப்பரணியில் அரசனுடைய வெற்றியைக் குறிக்கும் வெண்மையான கொற்றக்குடை பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது (கண்ணி 268, 282, 287, 347). போர்க் களத்தில் பகை அரசர்களின் குடைகள் பல அணிவகுத்து இருந்தன என்றும் போரின் இறுதியில் தோற்ற அரசரின் குடைகள் போர்க்களத்தில் செங்குருதி வெள்ளத்தில் வெண்ணுரை போல் மிதந்தன என்றும் இந்நூலில் விவரிக்கப்படுகிறது (கண்ணி 397, 410). குடை முக்கியமான அரசச் சின்னம் எனக் கருதப்பட்டது என்பதால் எதிரியை வென்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றும் செயல் வடமொழியில் சத்ர பங்கம் (சத்ர – குடை, பங்கம் – அழித்தல்) என்று சொல்லப்பட்டது.[6]

அரசனுடைய குடையை ஏந்திச் செல்லும் திருப்பள்ளித் தொங்கலுடையார் போல கோயிலைச் சார்ந்தும் திருப்பள்ளித் தொங்கலுடையார் இருந்தார்கள் என்பதை சில கல்வெட்டுகள் மூலம் அறியலாம். காட்டாக, ஒரு சீரங்கம் கல்வெட்டில் (தெக.24, எண். 33) இரு திருப்பள்ளித்தொங்கலுடையார்கள் வருகின்றனர். 1. சீகுலசேகரப் பிரமமராயன், 2. அணிஅரங்க பிரம்மாராயன். அதே போல தஞ்சாவூரில் முதல் ராஜராஜன் கல்வெட்டில் (தெக.2, எண். 66) திருப்பள்ளித் தொங்கலுடையார்கள் பற்றிய செய்தி உள்ளது. – 1. குப்படிவன்னி ஷத்ரியசிகாமணித் தொங்கற்பேரையன், 2. உடையான் திருவிசலூர் மும்மடிசோழத் தொங்கப்பேரையன். இவர்கள் இருவருடைய பட்டப்பெயர்களும் தொங்கப்பேரையன் என்ற விகுதி பெற்றுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

---

**குறிப்புகள்**

1 *Tamil Lexicon* (சென்னைப் பல்கலைக்கழகம்)

2. *திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்* (தமிழநாடு அரசு தொல்பொருள் ஆய்வுததுறை, 1994), ப 208–209

3 நியாயம் படையைக் குறிககும எனபதறகுப பாாக்க Y. Subbarayalu, "*The State in Medieval South India*" (Ph.D. thesis, M.K. University, 1976), p.174-75

4 மா்ரே பதிபபு

5 உ.வே.சா பதிப்பு

6 D.C. Sircar, *Indian Epigraphical Glossary* (1966), p. 73

# 50. இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுகளில் நாணயப் பெயர்களும் அவற்றின் புழக்கமும்

மா. பவானி, தஞ்சாவூர்.

இதுவரை வெளியிடப் பெற்றத் தமிழ்க் கல்வெட்டுகளைக் கொண்டு இடைக்காலத்தில் வழங்கிய நாணயப் பெயர் வகைகள் அவற்றின் பயன்பாட்டு நிலைகளை அறிய இக்கட்டுரை முற்படுகிறது. ஆய்வின் கால எல்லை கி.பி. 800-1600 ஆகும். இக்கால எல்லையில் ஏறக்குறைய 6000 கல்வெட்டுகளில் 1019 இல் நாணயம் தொடர்பான தரவுகள் கிடைக்கின்றன. இவற்றில் 14 வகையான நாணயப் பெயர்கள் கிடைத்துள்ளன. அவை காலகட்டவாரியாகவும் மாவட்ட வாரியாகவும் 2 அட்டவணைகள் மூலம் இறுதியில் விளக்கப் பெற்றுள்ளன.

நாணய வகைகளில் அக்கம் போன்ற சில சொற்கள் தனித்து வருகின்றன. ஆனால் காசு, பணம், அச்சு, பொன், மாடை, குளிகை போன்ற நாணய வகைகள் பின்னொட்டைக் கொண்டே பிரிக்கப் பெற்றுள்ளன. காட்டாக, அச்சு என்ற பின்னொட்டுடன் முடியும் நாணயங்களில் ஸ்ரீயக்கி பழஞ்சலாகை ஆணை அச்சு; ஸ்ரீயக்கி இடைச்சலாகை ஆணை அச்சு; ஸ்ரீயக்கி புதுச்சலாகை ஆணைஅச்சு; புதுப்பொன் அச்சு; இதுபோன்று உட்பெயர்களை கொண்டிருப்பினும் இவை அனைத்தும் அச்சு என்ற நாணயப்பெயரைச் சார்ந்ததாகவே வகைப்படுத்தப் பெற்றுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அச்சும், சலாகையும் வெவ்வேறு நாணய வகை போன்று தோன்றுகின்றது. ஸ்ரீயக்கி என்பதும் தனி வகை நாணயம் என்ற கருத்தும் நிலவுகிறது.

அன்றாடு நற்காசு என்பதும் தனிவகை நாணயப் .பெயராகத் தோன்றவில்லை. இதன் பொருள் அன்றைய (கல்வெட்டு எழுதப்பட்ட கால) வழக்கிலிருந்த நாணயம் என்பதே. இது காசு என்ற பெயர் கொண்ட நாணயத்தை மட்டுமே உணர்த்தாது; பொதுவாக எல்லா வகை நாணயத்தையுமே குறிக்கப் பயன் பெற்றுள்ளதை தஞ்சை மாவட்ட நன்னில வட்டக் கல்வெட்டுகளில் அன்றாடு நற்காசினால் பணம் என்ற தொடர் பரவலாக இடம் பெற்றிருப்பதன் மூலமும், சில இடங்களில் அன்றாடு நற்காசினால் ஆகவராமன் பணம், புலனேகவீரன் பணம் என்ற சொற்றொடர் இடம் பெறுவது கொண்டும் அறிய முடிகிறது.

காசு (337), பொன் (221), பணம் (216), அன்றாடு நற்காசு (88) அச்சு (59) ஆகியவை எண்ணிக்கையில் கணிசமான அளவில் கிடைக்கப் பெறுவதால் இவற்றையே அக்காலத்தில் புழக்கத்திலிருந்த முக்கிய நாணயங்களாகக் கருதலாம். மற்றவகை நாணயங்களான திரமம் (28),

மாடை (28), ஈழக்காசு (21), காணம் (19), பழங்காசு (18), வராகன் (15), அக்கம் (11), குளிகை (7), சின்னம்(3) ஒரு சில காலகட்டங்களில் தோன்றி பின்பு அருகி மறைந்து விடுகின்றன.

காசு, பொன் ஆகிய இருவகை நாணய வகைகள் மட்டுமே ஆறு காலகட்டங்களிலும் இடம் பெறுகின்றன. எனினும் பொன், முதல் இரண்டு காலகட்டங்களிலும் காசு 3,4 – ஆம் காலகட்டங்களிலும் மட்டுமே அதிக எண்ணிக்கையில் வழங்கிப் பின்பு சரிந்துள்ளது. காணம், ஈழக்காசு போன்றவை முதல் காலகட்டத்தில் இடம் பெறுவதைப் போல் குளிகை, சின்னம், திரமம் போன்ற நாணயங்கள் 3-ஆம் காலகட்டத்தில் தோற்றம் பெற்றுள்ளன. அச்சு, மாடை ஆகியவை 2-ஆம் காலகட்டத்தில் தோற்றம் பெற்றிருப்பினும் எண்ணிக்கையில் மிகக் குறைந்து காணப் பெறுகின்றன. ஒருவகை நாணயம் அருகி மறையும் நிலையில் மற்றொரு நாணய வகை தோற்றம் பெற்றிருக்கும்போல் உள்ளது. காட்டாக, பொன் எண்ணிக்கையில் அருகும் நிலையில் காசும் அன்றாடு நற்காசு இரண்டும் அருகும் நிலையில் பணமும் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றை நோக்குகையில் எவ்வகையிலோ தொடர்ந்து நாணயப் புழக்கம் இருந்தது என்பதை அறிய முடிகிறது.

முதல் இரண்டு காலகட்டங்களில் இடம் பெறும் பொன், கழஞ்சு என்ற எடை அளவில் கொடுக்கப் பெற்றிருப்பதால் இது நாணயமாக இல்லாமல் பொற் கட்டிகளாக இருந்திருக்கக் கூடும் என்று கருத இடமளிக்கிறது. 3-ஆம் காலகட்டத்தில் மாடையோடு ஒக்கும் பொன் என்ற தொடர்கள் இடம் பெறுவதால் இக்கால கட்டத்திலிருந்தே பொன் என்பது ஒரு நாணயத்தைக் குறித்தது என்று தெரிகிறது. 5,6 ஆம் காலகட்டங்களில் பொன் கழஞ்சு எடையில் குறிப்பிடப் பெறாமல் எண்ணிக்கையில் குறிப்பிடப்பெற்று இருப்பதால் இக்காலகட்டங்களில் பொன் நாணயமாகவே பயன்பெற்றிருப்பதை அறிய இயலும், இருப்பினும் இக்காலகட்டகங்களில் பொன்னின் எண்ணிக்கை குறைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு நாணய வகை கணிசமாக புழக்கத்திலிருப்பினும் 3,4-ஆம் காலகட்டங்களிலேயே நாணயங்கள் எண்ணிக்கையில் அதிகமாக கிடைக்கின்றன.

இரண்டாம் காலகட்டத்தை விட 3,4 ஆம் காலகட்டகங்களில் நாணயங்கள் அதிகமாக கிடைப்பதுடன், 3-ஆம் காலகட்டத்தில் கிடைக்கும் நாணய வகைகளில் பெரும்பாலானவை 4-ஆம் காலகட்டத்திலும் கிடைக்கின்றன. எனவே இக்கால கட்டங்களில் நாணயப் புழக்கம் ஒரு நிலைத்த தன்மையை பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

காலகட்ட வாரியான பகுப்பாய்வு போன்று மாவட்ட வாரியான ஆய்வும் அவசியமாகிறது. அக்கம், ஈழக்காசு ஆகியவை தஞ்சை

மாவட்டத்திலேயே அதிக அளவில் கிடைக்கின்றன. அதுபோல் அச்சு கன்னியாகுமரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலேயே அதிக அளவில் கிடைக்கின்றது. பணம் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களிலேயே அதிக அளவில் கிடைத்துள்ளது. மொத்தமாக பார்க்கையில் தஞ்சாவூர் (381), செங்கல்பட்டு (116), தென் ஆர்க்காடு (97), திருச்சி (95), புதுக்கோட்டை (81), கன்னியாகுமரி (60), வட ஆர்க்காடு (60), போன்ற மாவட்டங்களில் நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் இருந்துள்ளன. இதற்கு அரசியல் காரணம் இருக்க வேண்டும்.

பழங்காசு 8 மாவட்டங்களில் இடம் பெற்றிருப்பினும் செங்கல்பட்டு மாவட்டத்தில் எண்ணிக்கை சிறிது அதிக அளவில் கிடைக்கப் பெற்றுள்ளது. பழங்காசு என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் முதற்காலகட்டத்திலேயே இப்பெயர் வருகின்றது. ஆகவே, பழமை என்பது எக்காலக்கட்டத்தை சேர்ந்தது என்பதை அறிய இயலவில்லை. இருப்பினும் இது பல்லவர் காலத்தைக் குறிப்பதாக இருக்கலாம். ஆனால் அக்காலத்தில் காசு என்ற தொடர் அதிக அளவில் பயின்றதாக தெரியவில்லை. காணம், பொன் போன்ற தொடர்களே நாணயத்தை குறிக்கப் பயின்று வந்துள்ளன. ஒருகால் இவற்றைக் குறிக்கும் பொதுவான சொல்லாக காசு என்பதை பிற்காலத்தில் பயன்படுத்தியிருக்கலாம்.

ஒருசில பெயர்வகை நாணயங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே பெரிதும் வழங்கப்பட்டுகின்றன. எடுத்துக்காட்டாக மாடை, தமிழகத்தின் வடக்குப் பகுதியான செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு இம்மாவட்டங்களிலேயே அதிகம் செல்வாக்கு பெற்றுள்ளது. எனவே இது சாளுக்கியரின் செல்வாக்கினால் இங்கு வந்திருக்கக்கூடும்.

அச்சு நாணயங்கள் (58) கன்னியாகுமரி (20) கோயம்புத்தூர் (16) திருநெல்வேலி (9) பகுதிகளிலேயே அதிக எண்ணிக்கையில் உள்ளன. இவை இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் கிடைப்பதனால் பகுதி வாரியான நாணயப் பரிமாற்றம் இருந்திருப்பதை அறிய முடிகிறது.

# 1. காலகட்ட வாரியான நாணயவகை

| நாணயம் | காலகட்டம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | I 850-985 | II 986-1070 | III 1071-1179 | IV 1180-1279 | IV 1280-1350 | VI 1351-1600 | |
| அக்கம் | 2 | 6 | 1 | 2 | – | – | 11 |
| அச்சு | – | 4 | 13 | 32 | 9 | – | 58 |
| அன்றாடு நற்க்காசு | – | 5 | 36 | 41 | 5 | – | 87 |
| ஈழக்காசு | 17 | 2 | – | 1 | – | 1 | 21 |
| காசு | 27 | 79 | 104 | 108 | 15 | 4 | 337 |
| காணம் | 15 | – | – | 4 | – | – | 19 |
| குளிகை | – | – | 1 | 3 | – | 3 | 7 |
| சின்னம் | – | – | 3 | – | – | – | 3 |
| திரமம் | – | – | 18 | 9 | 1 | – | 28 |
| பணம் | – | 4 | – | 37 | 55 | 76 | 172 |
| பழங்காசு | 5 | – | 6 | 7 | – | – | 18 |
| பொன் | 94 | 50 | 18 | 25 | 5 | 24 | 216 |
| மாடை | – | 1 | 11 | 13 | 2 | 1 | 28 |
| வராகன் | – | – | – | 3 | 7 | 4 | 14 |
| மொத்தம் | 1160 | 151 | 211 | 285 | 99 | 113 | 1019 |

# 2. மாவட்டவாரியான நாணயவகை

| மாவட்டம் | அக்கம் | அச்சு | அன்றாடு நற்காசு | ஈழக்காசு | காசு | காணம் | குளிகை | சில்லம் | திரமம் | பணம் | பழங்காசு | பொன் | மாடை | வராகன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இராமநாதபுரம் | - | 5 | - | - | 4 | - | 1 | - | 3 | 10 | 1 | 2 | 1 | 2 | 29 |
| கன்னியாகுமரி | - | 20 | - | 2 | 6 | 4 | - | - | 1 | 22 | 1 | 3 | 1 | - | 60 |
| கோயம்புத்தூர் | - | 16 | - | - | - | - | - | - | - | 5 | - | 5 | - | - | 26 |
| சித்தூர் | - | - | - | - | 2 | - | - | - | - | 4 | - | 3 | 2 | - | 11 |
| செங்கல்பட்டு | - | - | 5 | - | 26 | 10 | - | - | 5 | 18 | 8 | 34 | 9 | 1 | 116 |
| சேலம்/தர்மபுரி | - | - | - | - | 2 | 1 | - | - | - | 5 | - | 11 | - | - | 19 |
| தஞ்சாவூர் | 9 | 2 | 41 | 14 | 188 | - | 1 | 2 | 7 | 44 | 2 | 63 | 5 | 3 | 381 |
| திருச்சி | - | 2 | 15 | 1 | 26 | 1 | - | 1 | 1 | 7 | 1 | 36 | - | 4 | 95 |
| திருநெல்வேலி | 1 | 9 | - | 1 | 9 | - | 1 | - | 3 | 5 | 2 | 2 | - | - | 33 |
| தென்ஆற்க்காடு | - | - | 12 | 1 | 43 | - | - | - | 2 | 8 | 1 | 26 | 4 | - | 97 |
| புதுக்கோட்டை | - | 1 | 9 | 1 | 16 | - | 1 | - | 7 | 33 | 2 | 9 | - | 2 | 81 |
| மதுரை | 1 | 3 | - | 1 | 2 | - | 1 | - | 1 | 1 | - | - | - | 1 | 11 |
| வடார்க்காடு | - | - | 5 | - | 13 | 3 | - | - | - | 10 | - | 22 | 6 | 1 | 60 |
| மொத்தம் | 11 | 58 | 87 | 21 | 337 | 19 | 5 | 3 | 30 | 172 | 18 | 216 | 28 | 14 | 1019 |

குறிப்பு : மாவட்டங்களின் பெயர்கள் கல்வெட்டுப் பாடங்கள் வெளியான காலத்தவை.

# 51. EVOLUTION OF THE EARLY BRAHMI IN HISTORICAL OUTLINE

**M.R. Raghava Varier**, Kozhikode.

The pioneering studies in Indian Palaeography were necessarily characterised by descriptive accounts of the shape of individual letters and their changes in the successive stages of evolution.[1] These studies were highly useful for professionals for learning the archaic scripts and for deciphering archaic documents. At times they were useful in suggesting a comparative chronology for undated records.[2] A serious limitation of this method is that there is little scope in it to enquire into more basic factors which were instrumental in bringing about the changes in the system of writing. Therefore, such studies could not go beyond the boundaries of conventional historiography and to frame fresh questions that may venture new explanations for the evolution of characters. Above all, the emergent interdisciplinary approaches in social sciences have started expecting information from all sorts of sources and the 'art of writing' is conceived as an instituted process. Conventional palaeography is hardly capable of giving any valuable information to these new perspectives excepting a decipherment of a difficult script or a variant version of a text or so.

Recently there are enquiries into the relations among literacy, social development, writing etc.[3] In the light of these new insights, new topics such as the uses of writing in a given historical context, an its effects in the society are increasingly discussed.[4] Nevertheless, they are the least concerned about the palaeographical aspects of archaic writing.

---

* தி ந சுபபிரமணியன அறக்கட்டளைக் சொற்பொழிவுகள் ஆற்றப் பெறவேணடும் என்ற விழைவில, திரு ஐராவதம மகாதேவன இ ஆ ப (ஓய்வு) அவாகள, தமிழக தொலலியல கழகததிறகு 1998 ஆம் ஆணடு ரூ 20,000 நலகையளிததார் அததொகையிலிருந்து இசசொறபொழிவுகள் ஆணடுதோறும் நடததபபட வேண்டும் என்பதும், சொற்பொழிவு நடததும் ஆயவாளருக்கும ரூ 2.000 அளிக்கப்படவேணடும் என்பதும அவா அவா அல்வகையில முதல சொறபொழிவு பாண்டிச்சேரியில 24 7 1999 நிகழ்நதது அன்று பேராசிரியர் எம் ஆா ராகவ வாரியாா அவாகள் ஆற்றிய உரையின் முழுவடிவம் இங்கு தரப்பட்டுள்ளது

The present paper is intended to understand the social, cultural and technological forces which are at work in changing the shape of characters and the nature of writing materials. For such an enquiry we are looking afresh at the Mauryan Brahmi which is the mother script of all regional scripts in almost entire South Asia. The Mauryan edicts, which are the earliest of all datable Indian inscriptions, employ four scripts for communicating with the people. In the extreme west of the empire, Asoka used the Greek and Aramaic scripts whereas in the regions of Shabazgarhi and Mansehra near modern Peshawar, he employed Kharoshti, a derivative of the Aramaic script. Elsewhere in the subcontinent his edicts are engraved in the Brahmi Characters. The variety of scripts used in communicating the same ideas implies the development of local subjects on different cultural heritage.

Palaeographical studies of the Mauryan Brahmi have shown that the script had several variants.[5] This may be viewed as resulting from the local tradition of writing as well as personal styles. In addition to these, there is the southern variety of Brahmi, which figures consistently in the lists of characters of the traditional literary texts. The southern brahmi is not simply a local variant of the Northern or Mauryan Brahmi though both are mutually connected by a strong tradition of indigenous style. The southern Brahmi conceived basic signs for vowels and consonants, medical vowel sign and compound letters in a different way from the system of Mauryan Brahmi.[6] This would perhaps show that the local varieties of writing were taking shape in their respective localities under various influences including linguistics and historical forces. In this paper we are focussing on the Mauryan Brahmi with occasional references to the southern variety of Brahmi also.

The earliest datable specimen of Brahmi occurs in the Asokan edicts. Its almost finished and perfect form seems to imply some previous stages of evolution. Some scholars are of the opinion that the Brahmi script was 'most popular and was known right through the country from one end to another'.[7] Some of the edicts themselves suggest just the opposite by instructing high officials to read out the edicts to the people's gatherings. Common people are also advised to hear them when they are read out on accasions specially meant for the purpose.[8] What follows seems to be that, firstly, access to writing was restricted to some government personnel and probably the inhabitants of the *viharas* who were instrumental for a transition in the *sangha* from orality to literacy and in spreading the art of writing among pre-literate communities. Secondly the content of the edicts was not meant for individuals but they were addressed to the community as a whole, or a section thereof or the bureaucracy which was to propagate the policy of Dhamma.

The pre-literate stage of the cultural development of communities coupled with the nature of content of the edicts determine the character of the writing materials. Important places of periodical public gathering were chosen to publicise the royal proclamations by engraving them on natural boulders or free - standing pillars . On the hard surface of the dressed stone chisel-and-hammer method was used for engraving letters. These materials necessitated the use of straight lines and simple strokes in forming the shape of characters. A careful examination of the Mauryan Brahmi letters would show that all of them are engraved using only two basic signs of straight line as well as circle or part thereof. A step further, it is highly interesting to note that in all cases of characters with a circle or arc, there are angular variants made up of straightlines alone.[9] This is perhaps an indication of the fact that an angular variant or prototype had been in use in the case of which the number of basic units of signs can be reduced to a single straight line stroke.

The Mauryan Brahmi characters with their predominant basic unit of straightline strokes indicate that they were originally designed to write on a hard surface. However, this does not preclude its use for writing on softer objects such as the birch bark, palm leaf, etc. A text like the *Arthasastra* of Kautalya presupposes the use of writing for academic and administrative purposes. Most probably, the circular and cursive types of writing infiltrated into the original angular variety due to the increase in the use of writing on softer surfaces. In this historical context, the use of writing was confined to an extremely narrow sector of society. For the rest of the population written texts were a semiotic symbol of power and authority. This was perhaps the reason for perpetuation of a style of writing for a long period.

The script used in the earliest evidences of writing in South India is a variety of Brahmi which is known differently as cave characters, Dravida Brahmi. Tamil Brahmi, etc. The close similarity between the northern and southern scripts is explained by a simple diffusionist perspective of cultural borrowing. An aspect of culture is borrowed wholesale and not piece-meal as conceived by several people including experts in some areas of scholarship. In the case of the Southern Brahmi the letters are conceived in a different way and this has resulted in a change in the visual representation of sounds.[10] This seems to suggest that the whole system of writing is conceived differently from the northern system. Still the basic characters are retained, adapted and reshaped to suit the requirements of the Dravidian phonology. It is not totally improbable that the Tamil Brahmi system of writing developed independently from an archaic stock which reached upto the far south even before the days of

the edicts. It is a well established fact that the commercial and cultural contacts between the north and the south started much earlier. The southern variety of Brahmi is not confined to the region of cave labels alone. It is found in Bhattiprolu in Krishna Valley in Andhrapradesh.[11]

Writing occurs in the South in different contexts of merit acquiring religious donations, profiteering trade and commerce and the mundane day to day life. Written evidence is mainly in the form of lables consisting of names of donors, donees etc. The cave lables seem to have addressed themselves to monks, Chieftains and wandering tradesmen. In the case of traders also the short labels were means for storing memory and keeping accounts. But the inscribed potsherds found in several habitational sites would indicate the prevalence of writing albeit rudimentary level among the common folk.[12] This is not to argue that the evidence of inscribed potsherds goes to prove that there was an unprecedented increase in literacy among the common folk in early historical South India. What we intend to suggest here is that the introduction of the use of writing to a wider section of society would result in the emergence of a number of 'rural' styles, parallel to the standardised and professional style serving in royal courts and urban centres. These rural styles would bring about several amateurish variants for standardized forms of characters.[13] We come across several such variants on potsherds, cave lables, etc. They hardly brought in any basic change since the technology remained changeless.

An evolutionary stage in the writing of the early Brahmi is discernible in a set of western Indian epigraphical records which are distributed in a number of Buddhist centres such as Kanheri, Kuda, Mahad, Bhaja, Karle, Nasik, Junnar, etc[14]. A careful look at the inscriptional texts indicates the prevalence of some pattern in the recording of religious gifts. Thus a gift depends, for its value, on several factors such as the faith, learning, morality and intention of the giver, the manner and moment of gift and the qualities of the donee. The best of all gifts are those given to the virtuous and enlightened saints.[15] Interestingly, this idea of gift as a merit acquiring act is different from the primitive reciprocal gift and this changing connotation of a social act is an outcome of corresponding changes in the social order. The meritorious and religious gift giving is best explained and supported by the Mahayanist principle of *Bodhisattva*. According to earlier Buddhist belief, each individual had to strive for himself for attaining *moksa*, the eternal bliss, *nirvana*. Mahayana philosophy believes that the merit acquired by one can be transferred to another and this is known as *punyaparinamana*. In other words, 'the independent individual responsibility stressed in early Buddhism has disappeared and instead we have a world dependent on benevolent lords'.[16] According to

the changed concept of *Bodhisattva,* the merit acquired by him is transferred to his devotees and bide his time until even the smallest insect had reaches the highest goal.[17] Almost all the records of the Buddhist caves and *chaitya* of western India are about religious gifts and transference of merit, the two major privotal principles of the Mahayana Buddhism. The royal patronage extended by some Satavahana kings to the Mahayana priestly groups of the *Bhadrayanika-s, Mahasanghika-*s etc. are tangible evidence to the spread and influence of the Mahayana belief system including its ritual gifts into the western Deccan.[18]

The large number of donors figuring in the records belong to different sections of society including kings, military chiefs, royal officials and functionaries of high and low statuses, merchants, heads of patriarchal families. Monks, nuns, mendicants, various artisans, smiths, workers and so on. Gifted objects generally include votive objects like structural buildings such as *Vihara, Caitya* and parts thereof. The changed concept of gift would necessitate recording of the details of gifts on the gifted object itself. The art of writing is employed here in a new function but the donor need not be a literate in this case. Therefore the changed concept of gift cannot be taken to bring in a change then in liteacy or in the system of writing. But in the Deccan region two important objects of gift made their appearance for the first time in the first and second centuries of the Christian era-Money as endowment and land as gift to the priestly monks. The highest number of land grants is recorded at Nasik and Junnar - 6 each. [19] A break-up of these grants would significantly show that when five grants in the form of villages are made by ruling authorities, seven are made by private individuals. With the emergence of money and land as objects of donation the recording of gift acquired added importance. As a means of living, land was valuable and its transaction needed some effective strategies for the validation of its ownership.

Recording the grants on imperishable material like copper plate, rock surface etc. was in practice but the original order of the royal authority was on palm leaves. It was necessary for the title holders to produce the document of ownership when a counter claim or a doubt arises about the property or its boundary. The document had to be on portable material. Unlike the moral instructions of *Dhamma* of the Asokan edicts and the record of the ritual gift of the Buddhist cave centres, written documents become an object to be possessed by the individuals or groups. It is in this context that the writing required a stylistic change-a change which was brought about replacing chisel and hammer by palm leaf and the stylus. In addition to the ownership of landed property, some administrative rights were also given up for the first time in the grants of

Gautamiputra Satakarni in the 2nd century A.D. [20] This practice was to increase in the later times as shown by several records of the successive periods [21] The rights and privilege also required some document of authority in order to make them valid and acceptable to the others. This was another site of writing slowly spreading into various spheres of life.

Royal courts had official arrangements for recording the orders of the ruler when they were orally issued.[22] The use of palm leaf and stylus was essential for such instant documentation. Another site of extensive writing and preservation was gathering momentum with the practice of reducing religious texts to writing. New schools of thought had to compose texts to ascertain their positions. It is in this period that several Mahayanist texts such as *Milindapanho, Ratnakuta* collection and commentaries to earlier works appeared.[23] The extensive use of palm leaves for writing purpose is well supported by the composing and copying of texts and this indicates a shift of society from orality to literacy. It is interesting in this context to remember that fields were granted to plant palm trees, evidently for collecting palm leaves for writing.[24]

From the above facts it seems that two distinct centres, namely the royal courts and Buddhist *viharas* were emerging as sites of prolific writing. From the contents of the written texts it is clear that they were addressed to a small section of society which had access to knowledge and power. Amateurish writing was not sufficient for the type of work demanded by the centres where the art of writing flourished. The writing attained some standardisation which led to patterning and stylization of the Brahmi characters. This pattern of writing was perhaps the reason for identifying an early variety of Brahmi as the Satavahana Brahmi. In delineating the characteristics of the Satavahana Brahmi it can be noted that there is a tendency for shortening of the lengthy vertical and horizontal lines and strokes. This is typical of the writing with a stylus. Secondly, a change of angularity to cursiveness is evident in most characters and this is needed to suit the structure of palm leaf. But the replacement of straight line vertical and horizontal strokes by circular and spiral cursive signs was yet to take place. Thirdly there is a tendency to employ cursive lines to write each letter in a continuous flow. Finaly an attempt at beautification of characters is discernible in the records. These peculiarities are met with not only in the Satavahana records but also in varying quantities in the inscriptions of the Kshatraps-s, Ikshvakui-s and Salankayana-s as shown by the palaeographical charts of ancient Indian scripts prepared by the pioneers. The changes that were taking place in the writing can be explained as demanded by the materials used for writing. In other

words, change in technology was the most important force in the evolution of writing and the character of new technology was decided by socio-economic and cultural processes which where working in society at a deeper level.

In the Satavahana territories these were manifest in the form of a set of new land relations and a principle of transference of merit releasing ordinary people from the burden of individual religious suffering and at the same time harnessing them to a new set up with total dependence on lords.

Judging from the available specimen of later scripts the course of development of the Southern Brahmi was not very different from the Deccan. However, sources with necessary detailed information are wanting to delineate the evolution of the earlier cave characters to the Pallava Grantha and Tamil Grantha on the other. What we miss here is the real pointers to the historical content in which the changes took place. From the evolved characters of the above systems of writing one is likely to infer that the development was caused by similar changes in the land relations and the owning patterns. From the Pallava records of Hirahada halli and Mayidavolu one could very well infer a change in the writing materials in the case of the records in Deccan. The exact nature of the forces compelling such a change is not known.

Regarding *Vatteluttu,* its evolved form appears in records of grants to private individuals, temples etc. For tracing the evolution of the *Vatteluttu* characters from the Tamil Brahmi, it is necessary to identify certain stages for development. The characters employed in the early cave labels are simple, upright and linear with long straight vertical and horizontal strokes and sharp angels, curves and circles are minimal. The first stage in the evolution is characterised by a tendency to shorten the vertical lines of the signs. This tendency can be seen in the Araccalur label. The second stage of development is discernible in the Pugalur record. The later cursive form of the alveolar na is employed in this record along with the linear type. The occurence of both the type in the same record appears to suggest a stage in the process of evolution. The third stage is represented by the Thirunatharkunru record in which most of the letters get a cursive or roundish shape while the remaining ones retain their linear shape with a tendency to become cursive. Allograph of vowel marker for the long and short 'i' have all become circular while the linear strokes are retained. Another peculiarity is that almost all the letters are written possibly at a stretch in a continuous chain in contradistinction with the earlier type made of linear units.

A careful examination and comparison of the *Vatteluttu* and the Tamil Brahmi characters would make it clear that the evolution was completed with the displacement of the vertical and horizontal straight lines and angles by circular lines and curves. It appears that a pattern is followed in the process of evolution. This can be enumerated as follows :-

1. Horizontal and verical lines are turned curves, circular lines and spirals
2. Angularities are changed into curves
3. The letters are written at a stretch in a continuous chain as a single unit.
4. The positions of curved lines and spirals is slightly shifted wherever necessary to conform to the line space. These characteristic features are acquired as a result of the practice of writing with a stylus. The stylus, held in the right hand with its point downwards turned on its axis, often on a pivot of a groove in the nail of the engraver's left thumb. This type of writing would require the formation of circular, curvilinear and spiral units. This system once standardized, the stone-engravers also copied it despite the nature of their material

**Notes and References**

1. For pioneering studies on Indian Palaeography see, J.G. Buhler, Indian Palaeography in *Indian Antiquary,* Vol.XXXII; 1904; G.H. Ojha, *Prachinalipimala* (Hindi), 2nd edn. 1918; T.A. Gopinatha Rao, *Travancore Archaeological Series,* Vol.I & II Trivandrum, 1911-12; Sivaramamurthy, *Indian Epigraphy and South Indian Scripts,* Bulletin of the Madras Government Museum, Vol.III, No.4, 1952; T.V Mahalingam, *Early South Indian Palaeogrphy,* Madras, 1967.
2. Uses and limitations of palaeographical dating are discussed in a paper by K.V. Ramesh See his '(F)utility and (F)utility of Palaeography in dating undated inscriptions', *Studies in Indian Epigraphy,* Vol III, 1976, pp 156-63.
3. J Goody and I. Watt 'The Consequences of Literacy', in J. Goody, ed. *Literacy in Traditional Societies,* Cambridge, 1968. See also, W. Ong, *Orality and Literacy,* London, 1982 and H.J. Graff, *Literacy and Social Development in the West,* Cambridge, 1981.
4. Rajan Grurkkal, 'Writing and its uses in the Ancient Tamil Country', *Studies in History,* 12, 1, n.s (1996) pp. 67-81.
5. C.S. Upasak, *The History and Palaeography of Mauryan Brahmi Script,* Patnja, 1960
6. The difference between the Northern and Southern Brahmis has been noticed by Buhler while publishing the Bhattiprolu relic casket inscription found in the Krishna District, Andhrapradesh. See Buhler's article in the *Epigraphia Indica,* Vol. II, pp.323 ff. For some general remarks and obser-

vations on the Tamil Brahmi see, T.N. Subramanian, *Pantait Tamil Eluttukal* (Tamil), Chennai, 1996, pp.23-24.

7. Upasak, *op.cit.*, p.25

8. Separate Edicts for Kalingas I and II, Calcutta- Bairat Minor Rock Edict, Saranath Minor Rock Edict. In the Sarnath edict it is stated that a separate copy of the edicts may be kept for the use of the common people. Here, it seems to suggest that the people could approach the monks/nuns to hear the moral instructions contained in the edicts.

9. For different variants of the Mauryan Brahmi Characters see C.S. Upasak, *op.cit.* For a similar view on the letters 'Ya' and its orthography see page 94.

10. In the Mauryan Brahmi the vowel sound of 'a' is inherent in the pure consonant signs if not otherwise indicated. In the southern Brahmi consonants are conceived as pure consonants without an inherent vowel sound. Therefore a stroke to the right is added to denote the presence of short a sound. In the northern variety this would denote long 'a' sound. The difference is not external but inner and conceptual.

11. Buhler, 'The Relic Casket Inscription of Bhattiprolu', *Epigraphia Indica*, Vol.II, p.323ff. See also C. Sivaramamurthy, *'Indian Epigraphy and South Indian Scripts*, Bulletin of thue Madras Government Museum, G.S III.4.

12. For studies on inscribed potsherds from South Indian site see, R.E.M. Wheeler, *Ancient India*, 2, p. 109; T.V. Mahalingam, 'Inscribed Potsherds from Alagarai and Uraiyur', in *Seminar on Inscriptions* (Ed.) Nagaswamy, Madras 1996; Subramaniam R, *Salihundam, A Buddhist Site in Andhrapradesh* - 1964, S. Gurumurthy, 'Inscribed Potsherds from South Indian Excavations, *Studies in Indian Epigraphy*, Vol. III, Mysore, 1976, pp. 120ff. For a similar view on literacy in early South India, see. I. Mahadevan, 'From Orality to Literacy: The case of the Tamil Society'. *Studies in History*, 11.2, Delhi, March 1995, pp. 173-88. For a counter argument see, Rajan Gurukkal, 'Writing and its uses in the ancient Tamil Country', *Studies in History:* 12:1, 1996, pp.67-81

13. For a brief discussion on urban and rural palaeogrpahy K.V. Ramesh, *op.cit.*, pp. 158-9.

14. For a list of these inscriptions, see H. Ludders Berlin, *A List of Brahmi Inscriptions from the Earliest Times to About A.D. 400* with the exception of those of Asoka, Delhi 1973. For the Western Indian Sites, see nos. 984-1183

15. A.B. Keith, *Buddhist Philosophy*, (1922) reprint, Chowkhamba Sanskrit Series, Vol.XXVI Varansi, 1963, p.204.

16. A.K. Warder, 'Feudalism and Mahayana Buddhism, 'in R.S. Sharma (ed.) *Indian Society: Historical Probings*, N.Delhi, 2nd edn. 1977, p.171.

17. Keith, *op.cit.*, p.285.

18. Luders List, Nos.1105 (Karle) and 1124 (Nasik)

19. *Ibid.* 1123-1126, 1130, 1158, 1162, 1163, 1164, 1166, 1167

20. D.C. Sircar, *Select Inscriptions Bearing on Indian History and Civilization* I, Calcutta, 1942, pp. 192, 194-5

21. *Ibid* . passim. See also R.S. Sharma, *Indian Feudalism,* Madras, 1990 (reprint)p.2

22. An order of Vasithiputa Siri Pulumavi to the *amaca* Sivakkandila of Govardhana, was written by Mahasenapati Medhuna. Luder's list, 1124. Another order of Gotami Balasiri was written by *amaca* Sivagupta, see, no. 1125. In another case an order of Gotamiputa Satakarni was written by *pratihari* (door-keeper) and was copied on copper plate by a certain Sujivin. See no. 1126. In the case of private individuals such details are not given perhaps they had to get it done by the local authorities.

23. A.K. Warder, *Op.cit.,* P. 168ff.

24. Luder's list no.1163. The grant was made to the holy assembly *(siddhuagana)* of the Aparajita-s.

# 52. செய்தித்திரட்டு

## 52:1

**ஒரு அளவுகோல்**

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருக்கண்ணீச்சுரம் சிவன்கோயில் வடக்குச் சுவரில் சுமார் 15–16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அளவுகோல் செதுக்கப்பட்டுள்ளது. நான்கு கூட்டல் குறிகளால் இந்த அளவுகோல் குறிக்கப்பட்டுள்ளது. ஒரு குறியீட்டுக்கும் மற்றொரு குறியீட்டுக்கும் இடையில் 141செ.மீ உள்ளது. மொத்தம் 565 செ.மீ. நீளமுள்ளது. 30 செ.மீ ஒரு அடி எனக்கொண்டு இந்த அளவு கோல் தற்கால அடிக்கணக்கில் 18 அடிக் கோலெனக் கொள்ளலாம்.*

**ஆனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி.**

## 52:2

**வெள்ளி முத்திரைக் காசு** *(படம் 52:1)*

*கரூர் நகர அமராவதி ஆற்றுப்படுகையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எண்கோண வடிவில் வெள்ளித் தகட்டினால் ஆன காசு கண்டெடுக்கப் பட்டுள்ளது. 2.84 கிராம் எடையுள்ளது. இக்காசின் ஒருபக்கத்தின் நடுவில் தொட்டியும், அத்தொட்டியில் ஆமை உருவமும், தொட்டியின் இடது கீழ்புறம் சூரியனும் இடது மேல்புறம் மலைமுகடும், மலைமுகட்டிற்கு இடதுபுறம் சக்கரமும் தொட்டிக்கு மேல் வலப்புறம் இருவட்ட வடிவ உருவங்களும், அதற்கு கீழ் நின்ற நிலையில் மனித உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபக்கத்தில் எவ்வித குறியீடுகளும் பொறிக்கப்படவில்லை.*

**நாக. கணேசன் கரூர்.**

## 52.3

**பௌத்திரம் நடுகல்** *(படம் 52:2)*

*கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பௌத்திரம் கிராமத்திலுள்ள புலிக்குத்திப்பாறை என்ற இடத்தில் இந்நடுகல் உள்ளது. இதன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு. சுமார் 3½ அடி உயரமும் 2½ அடி அகலமும் கொண்ட பலகைக்கல்லில் புடைப்புச் சிற்பமாக உள்ளது. தலையில் கொண்டையும் இடையில் ஆடைக்கட்டும் மெலிந்த உடலமைப்பும் கொண்ட இரு வீரர்களில் ஒருவன் தனது இடது கையினால் குதிரையின் தலையைப்பிடித்துக் கொண்டு வலது கையில் உள்ள வாளின் மூலம் குதிரையின் கழுத்தில் குத்துவது போன்றும் மற்றொரு வீரன்*

தன்னிடமுள்ள ஈட்டியைக்கொண்டு குதிரையோடு அதன்மீது அமர்ந்த வீரனையும் சேர்த்து குத்துவது போன்றும் சிற்பங்கள் உள்ளன. இத்தகைய நடுகல் கரூர் பகுதியில் முதன்முறையாகக் கிடைத்துள்ளது. தகவல் தந்தவர், காருடையாம் பாளையம் திரு. பெரியசாமி.

**நாக. கணேசன், கரூர்.**

## 52.4

### நீலமங்கலத்து உலோகச் சிலைகள்

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள நீலமங்கலம் என்ற ஊரில் கணேசர், தேவி, பிரதோசமூர்த்தி, சண்டிகேஸ்வரர் ஆகிய நான்கு உலோகச் சிலைகளும், ஒரு கொம்பும் புதையலாகக் கிடைத்துள்ளன.

**கணேசர் சிலை :** இதன் உயரம் 18 அங்குலம். தும்பிக்கை வலமாகச் சுழிந்துள்ளது. சிலைக்கு நான்கு கைகள் உள்ளன. வலது கால் ஊன்றியும் இடதுகால் சற்று தளர்த்தியும் நிற்பது மற்றும் உடல் கைகள் ஆகியவற்றின் வடிப்பில் உயர்ந்த கலைத்திறன் தெரிகிறது. சிலைக்கு அழகிய நீள் வட்ட திருவாச்சி பொருத்தப்பட்டுள்ளது. சிலையை சிறிய மகுடம் அணிசெய்கிறது.

**தேவி :** இச்சிலையின் உயரம் 26 அங்குலமாகும், இரண்டு கைகளுடன் நளினமாக நிற்கும் கோலம். வலதுகை மலர் பிடித்த நிலையிலும் இடது கை தொங்கியவாறும் உள்ளன. கரண்ட மகுடம் தலையை அணி செய்கிறது. தேவி நிற்கும் தாமரைப் பீடம் சதுரபீடத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

**பிரதோச மூர்த்தி :** சிலையின் உயரம் 15 அங்குலம். சிவபெருமான் பார்வதியை இடதுகையால் அணைத்தவாறு நிற்கிறார். தலையில் ஜடாமகுடம் உள்ளது. வலது கீழ்க்கை காக்கும் நிலையைக் காட்டுகிறது. தேவி திரிபங்க நிலையில் நிற்கிறார். கரண்ட மகுடம் தேவிக்கு உள்ளது. வலது கை பிடிக்கும் கையாகவும் இடது கை தொங்கியும் காணப்படுகிறது.

**கொம்பு :** இவ்விசைக்கருவி இறைவனின் வழிபாட்டின் போது இசைக்கப்படும். உலோகத்தால் செய்யப்பட்டதாகும். இதன் மொத்த நீளம் 24 அங்குலம். கொம்பினை இரண்டாகப்பிரித்து வைக்கும் வகையில் செய்யப்பட்டிருக்கிறது. இசை வெளிவரும் வாய் அகலமாக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதில் ''உடையார் திருவங்கிசுரமுடைய நாயனாற்கு ஐஞ்நூற்றுவத் தட்டான் இளவ இட்ட கொம்பு'' என்று கி.பி. 11 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

**ம. காந்தி, வேலூர்.**



52:1



52:2



52:3



52:4



52:5



52:6



52:7





52:9

படம் 52:1. கரூர், வெள்ளி முத்திரைக் காசு; 2. பௌத்திரம், நடுகல்;
3. மாதனூர் பொன்னகர், தீர்த்தங்கரர்; 4. பாப்பாக்குடி, கங்காதரர்;
5. கொண்டங்கி, விஷ்ணு; 6. கீழக்குறிச்சி, புத்தர்; 7. கீழக்குறிச்சி, கல்வெட்டு;
8. வள்ளிமலை, எழுத்துப்பொறிப்புள்ள மணித் துண்டு;
9. கரூர், பொன் மோதிரம்.

## 52:5

***கி.பி. 13 ஆம் நூற்றாண்டுத் தீர்த்தங்கரர்** (படம் 52:3)*

*வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், மாதனூர் பொன்னகர் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு தீர்த்தங்கரர் கற்சிலையை வேலூர் உதவும் உள்ளங்களின் தலைவர் திரு. இரா. சந்திரசேகரன் கொண்டு வந்து மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்க அவர் அதை வேலூர் அரசு அருங்காட்சியத்திற்கு ஒதுக்கியதால் தற்பொழுது அருங்காட்சியகத்தில் பொது மக்களின் பார்வைக்குள்ளது. சதுர பீடத்தில் தியானத்தில் அமர்ந்துள்ளவாறு கைகள் தியான முத்திரையில் செதுக்கப்பட்டுள்ளன. தலைக்கு மேல் சிறிய பிரபையும் அதற்கு மேல் உயரமான முக்குடைகளும் இரு மருங்கிலும் அழகிய பூ வேலைப்பாடுகளும் உள்ளன. தீர்த்தங்கரரை அழகிய வேலைப்பாடு அமைந்த தலையணை தாங்க, முனைகளில் சாமரம் வீசுபவர்கள் வலது கைகளில் சாமரத்தைப் பிடித்துள்ளனர். இடது கைகள் இடையில் உள்ளன. சாமரம் வீசுபவார்களின் தலையை நெடிய கரண்ட மகுடங்கள் அழகு செய்கின்றன. தலைக்குப் பின்பக்கத்தில் ஒளி வட்டம் செதுக்கப்பட்டிருக்கிறது. சாமரம் வீசுபவர்களின் கரண்ட மகுடம் சாளுக்கிய பாணியாகத் தெரிகிறது. வாணிபத் தொடர்பால் இத்தாக்கம் ஏற்பட்டிருக்கலாம். இதன் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு எனலாம்.*

***ம. காந்தி, வேலூர்.***

## 52:6

***வைணாயகி கற்சிலை***

*வேலூர் மாவட்டம், வாலாசாபேட்டை வட்டம், ஒழுகூர் சிவன் கோயிலில் வைணாயகி என்னும் பெண்ணுருவக்கணபதி கற்சிலை அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. இச்சிலை கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. நான்கு கைகள் உள்ளன. அவற்றில் ஆயுதங்கள் தெளிவாகச் செதுக்கப்படவில்லை.*

***ம. காந்தி, வேலூர்.***

## 52:7

***பாப்பாக்குடி வரலாற்று எச்சங்கள்** (படம் 52:4)*

*திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில், திருநெல்வேலிக்கும் பொட்டல் புதூருக்கும் இடையில் கடனாநதியின் சிற்றாறான உள்ளாற்றின் கரையில் அமைந்துள்ளது பாப்பாக்குடி. இவ்வூர் கி.பி. 1570ல் பாப்பாக்குடியான ஆதித்தவன்ம சதுர்வேதிமங்கலமாக இருந்துள்ளது (இக. 1916:478)*

தற்போது இவ்வூரில் நாயக்கர் காலத்தினைச் சேர்ந்த திருக்கடுக்கன் மூன்றீசுவரர் என்ற சிவன் கோயில் உள்ளது. இக்கோயிற் கல்வெட்டுகள், கருவுநல்லூர் பற்றினைச் சேர்ந்த பூசனைச் சேரியான கொல்லங்குளத்தில் நிலங்கள் மற்றும் குளத்தை இக்கோயிலுக்கு தானமளித்ததையும் (இக. 1916:477) கருமுகிலன் கேரளாதித்திய தேவன் என்பவனைக் கோவில் பரம்பரைக் கணக்கராக நியமித்ததையும் தெரிவிக்கின்றன. இவ்வூரின் அணைக்கட்டில் வைக்கப்பட்டுள்ள பலகைக் கல்வெட்டொன்று இவ்வணைக்கட்டை கி.பி. 1664ல் வடமலையப்பபிள்ளையின் பிரதிநிதியான திருமலைக் கொழுந்தபிள்ளை என்பவரின் நலனுக்காக தம்பிரான் தோழப்பிள்ளை மற்றும் சிதம்பரநாதபிள்ளை ஆகியோர் கட்டிமுடித்ததாகக் கூறுகின்றது (இக 1916:480).

திருக்கடுக்கை மூன்றீசுவரர் கோயிலுக்கு வடமேற்குப் பகுதியில் உள்ள அணைக்கட்டில் விஷ்ணுவின் சிலை ஒன்று காணப்படுகிறது. கழிஓடை என்று தற்போது அவ்வூர் மக்களால் அழைக்கப்பெறும் உள்ளாற்றின் கரைகளில் ஆங்காங்கே வட்டெழுத்துக் கல்வெட்டுத் துண்டுகள் காணப்படுகின்றன. இங்குள்ள கோயிலின் முன்புள்ள பாலத்தின் அடிப்பக்கத்தின் கல் ஒன்றிலும் வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்பெறுகின்றது. எழுத்தமைதிப்படி 10ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இக்கல்வெட்டில் அரசனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இவ்விடங்களில் கட்டிடக் கலைத்துண்டுப் பகுதிகளும் கிடைக்கின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் கல்வெட்டுத் துண்டுகளும், சிதைந்த விஷ்ணுவின் சிலை ஒன்றும் அணைக்கட்டுச் சுவர்களில் பதிக்கப்பட்டிருப்பது இவ்வூரில் அழகிய வைணவக் கோயில் ஒன்று அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றது.

உள்ளாற்றின் கரையில் படிக்கட்டில் 9-10ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த அழகிய கங்காதரர் சிற்பம் காணப்படுகின்றது. இதில் சிவபெருமான் தனது இடது கையைத்தூக்கி கங்கையைத் தன் முடியில் தாங்குகின்றார். அவருக்கருகே பார்வதிதேவி கருணையே உருவாக நிற்கின்றார். இச்சிற்பம் இவ்வூரின் தொன்மையான சிவன் கோயில் ஒன்றில் இருந்திருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. இதே காலத்தினைச் சேர்ந்த சண்டேசர் சிற்பம் ஒன்றும் தற்போதுள்ள கோயிலின் மேற்குப் புறத்தில் செடிகளுக்கிடையே காணப்படுகின்றது. கோயிலின் தென்மேற்குக் கோடியில் பத்மநிதியின் உருவமும் கிடைத்துள்ளது.

**கு. சேதுராமன், மதுரை.**

## 52:8

***பழமைவாய்ந்த விஷ்ணு சிற்பம்*** *(படம் 52:5)*

1500 ஆண்டுகள் பழமைவாய்ந்த விஷ்ணு சிற்பம் ஒன்றை தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம், விழுப்புரத்திலிருந்து தென் மேற்கில்

பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கொண்டங்கி என்னும் சிற்றூரில் உள்ள முருகன் கோயில் மதில்சுவற் புறத்தே கண்டுபிடித்துள்ளது. இச்சிற்பத்தைப் பற்றிய தகவல் அளித்தவர் பள்ளி ஆசிரியரான வீரராகவன். இதைப் போன்ற ஒரு திருமால் சிற்பம் இதுவரை தமிழகத்தில் கண்டறியப்பட்டதில்லை என இந்நிறுவனத்தார் தெரிவிக்கின்றனர். இச்சிற்பத்தின் கலையமைப்பு, தடித்த ஆடை, அணிகலன்களின் வடிவமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பல்லவப் பேரரசர் சிம்மவர்மன் அல்லது சிம்ம விஷ்ணு காலத்தைச் சேர்ந்ததாக (கி.பி. 5ம் நூற்றாண்டில் இறுதிக் காலம்) கருதலாம்.

சம பங்கத்தில் நிற்கும் இச்சிற்பம் தலையில் அழகான கிரீட மகுடத்தையும், காதுகளில் மகர குண்டலங்களையும், தடித்த பதக்கத்தைக் கழுத்திலும், பெருத்த காப்புகளை முன்னங்கைகளிலும், பருத்த வளையைதம் தோள்களிலும் அணிந்துள்ளது. மேலிரு கைகளில் சக்கரமும், சங்கும், கீழிரு கரங்களில் வலக்கரம் அபயமளிக்கும் கரமாகவும், இடக்கரம் இடுப்பாடையின் ஒரு முனையை இறுகப்பிடித்த நிலையிலும் உள்ளன. இடையாடையைக் இடக்கையால் பற்றி நிற்கும் மகேந்திரவர்மன் காலத்திய துவாரபாலகர் சிற்பம் முன்பே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இச்சிற்பம் மாமல்லபுரம் ஆதிவராஹக் கோயிலிலுள்ள சிம்மவர்மன் உருவத்தையும், வந்தவாசி வட்டம் பொன்னூரில் உள்ள தத்தாத்ரேயர் சிற்பத்தையும் விட காலத்தில் முந்தையதாகத் தோற்றமளிக்கிறது. இச்சிற்பத்தின் தலையமைப்பு கிராமிய கலையமைப்பைப் போன்று தோன்றும். ஆனால் சிற்பக் கலையின் வளர்ச்சியைக் கூர்ந்து ஆராயும் போது இது சிற்பக் கலையின் தொடக்க நிலையை எடுத்தியம்புவதை அறிய முடியும்.

**தினமலர், சென்னை, 2.2.2000லிருந்து நடனகாசிநாதன், சென்னை.**

## 52:9

**நாகலாபுரம் சிற்பம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் - பெரம்பலூர்ச் சாலையில் 7 கி.மீ. தொலைவில் பெருமாள் மலைக்கு அருகில் கற்பலகையில் காளை உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டு உள்ளது. இதன் உயரம் 1மீட்டர், அகலம் 60 செ.மீ. காளை ஒன்று நடுநாயகமாக காட்டப்பட்டுள்ளது. அதன் கழுத்தில் இருக்கும் கயிற்றை வலிமையான உடற்கட்டு கொண்ட ஒருவனும், மற்றொருவனும் பிடித்துக் கொண்டிருக்க காளை அவனை நாவால் தடவிக் கொண்டுள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது. வீரன் அருகே ஒரு பெண்ணும், சிறுவனும் உள்ளனர். வீரன் சிகையலங்காரம், நகைகள் ஆகியவை நாயக்கர் கால கலைப்பாணியாகும். சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் ஆறு உருவங்கள் மேலே உள்ள வீரனை வழிபடுவது போல காட்டப்பட்டுள்ளன. சிற்பத்தின்

மேற்புறம் சூரியனும், பிறையும் காட்டப்பட்டுள்ளன. காளை ஒன்றை அடக்கி வீர மரணம் அடைந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல்லாக இது இருக்கலாம். காலம் கி.பி. 17ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இச்சிற்பம் பற்றித் தகவல் தந்தவர், வரலாற்று ஆய்வு மாணவர், திரு. பிரபாகரன், துறையூர்.

***கி. ஸ்ரீதரன், திருச்சிராப்பள்ளி.***

## 52.10

***கிழக்குறிச்சி புத்தர் சிற்பமும், கல்வெட்டும்.*** *(படம் 52:6,7)*

திருச்சிராப்பள்ளி வட்டம், கிழக்குறிச்சியில் 11–12ம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தர் சிலை உள்ளது. உயரம் 1.5மீட்டர் அகலம் 50 செ.மீ. செவ்வக வடிவக் கல்லில் நான்கு பக்கங்களிலும் மங்கலச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதியில் பூரணகும்பம் அதன் இருபுறமும் விளக்குகள் காணப்படுகின்றன. அதற்கு மேலே கத்தியும், வில்லும், தர்மச் சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் உடுக்கை போன்ற பசும்பையும், கலப்பை (மேழி) வடிவமும் அதற்கும் மேலே சாமரங்களும் திருமறுவும் காணப்படுகின்றன. மங்கல சின்னங்களுக்கு மேலே கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரதாவளத்தில் பௌத்தப்பள்ளிக்கு இந்த செந்தாமரை கண்ணநல்லூர் முதலடங்க இறைலியான பள்ளிசந்தம்

திரு. போசு. திரு. மாணிக்கம், கிழக்குறிச்சி; திரு. ஸ்தபதி வே. இராமன் மற்றும் திரு. ப. இராசேந்திரன், தொல்லியல் துறை, திருச்சி ஆகியோர் தகவலளித்து உதவினர்.

***கி. ஸ்ரீதரன், திருச்சிராப்பள்ளி.***

## 52:11

***தமிழ்க்கோட்டம்***

தமிழ்க்கோட்டம் என்னும் புதிய அமைப்பு புதுக்கோட்டை வெள்ளி மண்டபத்தில் 26–02–2000 அன்று குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் முன்னிலையில், முன்னாள் அமைச்சர் திரு. ச. இரகுபதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ப.க. வேலாயுதம் அவர்கள் பொறுப்பேற்றுள்ளதோடு இவ்வமைப்பிற்கு ஒரு இலட்ச ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளார். பல வரலாற்று ஆசிரியர்களும், புலவர்களும் கலந்துகொண்ட இவ்விழாவில் அடிகளார் தலைமையுரையும் திரு. வி.டி. செல்வம், திரு. மா. ராசசேகர தங்கமணி ஆகியோர் வாழ்த்துரையும் வழங்கினார். இவ்விழாவில் தமிழ்க்கோட்டத்தின் முதல் வெளியிடாக புலவர் பு.சி. தமிழரசன் எழுதிய

'கொடும்பாளூர் வேளிர்கள்'' எனும் தொகுப்பு வெளியிடப்பட்டது.

**அ. சந்திரபோஸ், தஞ்சாவூர்.**

## 52:12

***மைசூர் என். சீனிவாஸ்***

*சிறந்த இந்திய சமூகவியல் அறிஞரான இவர் தம் 83-ஆம் வயதைக் கொண்டாடிய ஒரு வாரத்திற்குள் 30.11.99ல் காலமானார். இவர் முதுகலைப் படிப்பை சமூகவியல் துறை பம்பாய் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். குடகு* (Coorg) *இனமக்களைப் பற்றிய கள ஆய்வு அடிப்படையில் முனைவர் பட்ட ஆய்வினைச் செய்தார். அதனைப்பாராட்டி ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இந்திய சமூகவியலுக்கான விரிவுரையாளர் பதவியை அளித்துப் பெருமைப்படுத்தியது. அதைத் தொடர்ந்து மைசூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் சாதி அமைப்பு பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். ஆக்ஸ்போர்டில் மேற்கொண்ட அவர் ஆய்வு* Religion and Society among the Coorgs of South India *என்னும் தலைப்பில் நூலாக 1952ல் வெளிவந்தது. பின்பு பாரோடாவில் உள்ள எம்.எஸ். பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். இந்தியச் சமூகம் பற்றி அவர் வெளியிட்ட முக்கிய கோட்பாடு ''சமஸ்கிருதமயமாதல்'' என்பதாகும். அதாவது 1. இந்து சமூகம் எதையும் தன்னுள் கிரகித்துக் கொள்ளும் தன்மையது. பல்வேறுபட்ட பண்பாடுகளையும் சாதிகளையும் தன்னகத்தே ஈர்த்துக்கொள்ளும் 2. அடித்தள மக்கள் மேற்தள மக்களின் சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றி ''சமஸ்கிருதமயமாதல்'' என்னும் போக்கின் வழியே மேல்தளத்திற்கு வருவார்கள். இக்கோட்பாடு பரவலாரக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அண்மைக் காலங்களில் விமர்சனத்துகுள்ளாகி வருகிறது.*

**The Hindu,** ***8.2.1999 –விலிருந்து கி.ரா. சங்கரன், தஞ்சாவூர்.***

## 52:13

***எழுத்துப் பொறித்த மணித்துண்டு*** *(படம் 52:8)*

*வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருகில், உடைந்த மணியின் ஒரு பகுதி கிடைத்துள்ளது. அதில் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றை ... பெருமானடிகளுக்கு உறுப்புட்டூர்... என்று படிக்கலாம். மணி 16 செ.மீ விட்டம் கொண்டது. கிடைத்துள்ள துண்டுப் பகுதியின் எடை 94.32 கிராம்*

***சங்கரன் இராமன், சென்னை.***

## 52:14

***கரூர் முத்திரைப் பொன்மோதிரம்** (படம் 52:9)*

கரூர் அமராவதி ஆற்றுப்படுகையில் ஒரு முத்திரைப் பொன்மோதிரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த மோதிரத்தின் முகப்பின் நீளம் 12 மி.மீ., அகலம் 10 மி.மீ., குறுக்களவு 17 மி.மீ., எடை 6.4 கிராம். மோதிரத்தின் முகப்பில் எழுத்துக்கள் ஒரு வரியில் செதுக்கப்பட்டுள்ளன. மோதிரம் முத்திரையாகப் பயன்படுத்தப்பட்டதால் எழுத்துகள் கண்ணாடியில் காண்பது போன்று வலப்புறத்திலிருந்து இடப்புறமாக மாற்றிச் செதுக்கப்பட்டுள்ளன. (படிக்க வசதியாக மோதிரத்தின் படம் இங்கு நேராக அச்சடிக்கப்பட்டுள்ளது).

*ப்ரவதஸ* என்று தமிழும் பிராகிருதமும் கலந்த நடையில் எழுதப்பட்டுள்ளது. பவதத்தனுடையது என்று பொருள் தரும்.

மோதிரத்தில் உள்ள வாசகத்தை தொல்லெழுத்தறிஞர் ஐராவதம் மகாதேவன் படித்தளித்தார்.

**சங்கரன் இராமன், சென்னை.**

## 52:15

***மாங்குளத்தில் சங்ககாலக் கட்டிட எச்சங்கள்***

மதுரை மாவட்டம் மாங்குளம் (அல்லது மீனாக்ஷிபுரம்) மலைக்குகைகளில் உள்ள தமிழ்பிராமி கல்வெட்டுகள் யாவரும் அறிந்தவையே. இவை உள்ள குகைகளின் அருகில் இரு இடங்களில் செங்கல் கட்டிடத்தின் அடித்தளம் காணப்படுகின்றது. செங்கற்கள் 14 அங்குல நீளமும் 7 அங்குல அகலமும் 2,25 அங்குல தடிமனும் கொண்டுள்ளன. இடிபாடுகளோடு சேர்ந்து கூரையோடுகள், கருப்பு, சிவப்பு மற்றும் மெருகூட்டிய சிவப்பு மட்கலச் சில்லுகள் காணக்கிடக்கின்றன. இக்கூரையோடுகள் அரிக்க மேடு, வல்லம், உறையூர் முதலிய அகழாய்வுகளில் காணப்பட்ட ஓடுகளை ஒத்துள்ளன. இங்கு சில இரும்பாணிகளும் உள்ளன என்பது அண்மையில் மேற்கொண்ட களஆய்வில் கண்டறியப்பட்டது. இங்கு முறையான அகழாய்வு மேற்கொண்டால் பல அரிய செய்திகள் வெளிப்பட வாய்ப்புண்டு.

**வெ. வேதாசலம், மதுரை.**

## 52:16

***பாண்டிச்சேரி தொல்லியல் கருத்தரங்கம் பற்றிய அறிக்கை***

தமிழகத் தொல்லியல் கழகத்தின் பத்தாம் ஆய்வுக் கருத்தரங்கம் பாண்டிச்சேரியில் முத்தியால்பேட்டையில் உள்ள சோலைநகரில்

அமைந்துள்ள இளைஞர் விடுதியில் 1999 ஜூலைத் திங்கள் 24, 25 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உள்ளூர்ச் செயலர் திரு. வில்லியனூர் வேங்கடேசன் அவர்களும், முனைவர் கோ. விஜய வேணுகோபால் அவர்களும் சிறப்புறச் செய்திருந்தனர். இக்கருத்தரங்கத்தின் தலைமையுரையை முனைவர் சம்பத், மைசூர் மைய தொல்பொருள் அளவீட்டுத் துறையின் கல்வெட்டியல் பிரிவு இயக்குநர் நிகழ்த்த திரு. வில்லியனூர் வேங்கடேசன் அவர்கள் வரவேற்புரை நல்கினார். தொடக்க விழா உரையை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. எஸ்.பி. சிவக்குமார் அவர்கள் நிகழ்த்தினார். ஆவணம் 10ஆம் இதழை புதுவை அரசு துணைச் செயலர் திரு. தி. ஜானகிராமன் அவர்கள் வெளியிட்டார். வாழ்த்துரையை திருமுடி. ந. சேது, அசோக்குமார் அவர்களும், கழகத் துணைத்தலைவர் கொடுமுடி சண்முகன் அவர்களும் வழங்கினர். நன்றியுரையை முனைவர் கோ. விஜய வேணுகோபால் அவர்கள் வழங்கினார்.

தமிழகத் தொல்லியல் கழகத்தின் தலைவர் குடந்தை திரு. என். சேதுராமன் அவர்கள் படத்தை புதுச்சேரி மாநில கல்வியமைச்சர் அவர்கள் திறந்து வைத்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினார். திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களால் நிறுவப்பட்ட திரு. தி.ந. சுப்பிரமணியன் அறக்கட்டளையின் சார்பாக முதற் சொற்பொழிவை கோழிக்கோடு பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் ராகவவாரியார் அவர்கள் நிகழ்த்தினார். ஐந்து அமர்வுகளில் 28 கட்டுரைகள் படிக்கப்பட்டன.

நிறைவு விழாவில் புதுவை வரலாற்றுச் சங்கத்தை நிறுவிய திருமுடி. முத்துசேதுராமனார் அவர்களின் படத்தை முனைவர் சோ. முருகேசன் பிள்ளை அவர்களும், திரு. பி.எல். சாமி அவர்களின் படத்தை திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களும் திறந்து வைத்து அவர்களின் நற்பணிகளைப் பாராட்டி மகிழ்ந்தனர். முனைவர் எம்.டி. சம்பத், முனைவர் ராகவவாரியார், திரு. வீரராகவன் ஆகியோர் கருத்தரங்க நிகழ்ச்சி தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

**கா. ராஜன், செயலர்.**

# 53. புதிய வெளியீடுகள்

## 53:1

***வீரா. அழகிரிசாமி**, தமிழக வரலாற்றில் சமயப்பூசல், காந்தி மீடியா சென்டர், காந்தி அருங்காட்சியகம், மதுரை 1999 பக். 238 (விலை 75/-)*

இருபது நூற்றாண்டுகள் முடிவுற்றுள்ள இன்றைக்கும் நமது சமுதாயத்தில் சமயத்தின் அடிப்படையிலான பூசல்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நடந்து வருவதை அறிவோம். தமிழக வரலாற்றில் சமயப்பூசல் என்னும் இந்த ஆய்வு நூல் தமிழ் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. முரண்பாடு அல்லது மாறுபட்ட கருத்துகள் இந்நூலில் பூசல்களாகக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடக்க காலத்திலிருந்து சமயங்களால் ஏற்பட்ட மாற்றங்கள், அதன் போக்குகள், விளைவுகள் இலக்கியத்தில் எவ்வகையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதை இந்நூல் நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ் இலக்கியங்கள், காப்பியங்கள் பெரும்பான்மையிலும் சமயம் சார்ந்து படைக்கப்பட்டமையும், இவற்றில் காணப்படும் சமண, பவுத்த, சைவ, வைணவ சமயங்களின் தாக்கங்களையும் தமிழக வரலாற்றின் சமயப்பூசல்களாக சங்ககாலம் முதல் இடைக்காலத்தைச் சார்ந்த பெரியபுராணம் வரையிலான இலக்கியங்கள் ஊடாகக் காட்டப்பட்டுள்ளன.

நான்கு இயல்களைக் கொண்டுள்ள இந்நூலின் முதல் இயலில் சமயப் பூசலுக்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. தொடக்கக் காலத்தில் கோட்பாடு பிரதானமாகவும் பின்னர் சமயச் சடங்குகள், வேள்வி முறைகள், அவைதீகச் சமயங்களின் தோற்றம், தீவிர கடவுள் பற்று, கடவுளர்களின் உயர்வு தாழ்வு பாராட்டல் போன்றனவும் பூசலுக்குக் காரணங்களாக இருந்தமை காட்டப்பட்டுள்ளன. அடுத்த இயலில் சமயப்பூசலுக்கான இலக்கிய ஆதாரங்கள் விளக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சமயம் என்ற சொல் காணப்படவில்லை யென்றாலும் சங்ககால இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நிலத் தெய்வங்கள், கடவுளர்கள், புராணக் கதைகள் பற்றிய குறிப்புகள் சமயப்பூசலுக்கான தோற்றமாகக் கொள்ளப்படுகின்றன. தொல்காப்பிய காலத்திற்கு முன்பே ஆரிய வைதீகச் சமயங்கள் தமிழர்களின் பண்பாட்டில் நுழைந்துவிட்டன என்பது காட்டப்படுகின்றது. பரிபாடல் வரிகளில் திருமால் வணக்கம், முருக வணக்கம் இரண்டிற்கும் இருந்த காழ்ப்பு போன்றவை வைதீகச் சமயங்களான சைவ, வைணவத்தின் உட்சமயப் பூசலாக எழுந்தவை. பவுத்த சமய நெறியே கிருஷ்ண வழிபாடாக மாறிற்று

என்ற டி.டி. கோசாம்பி போன்ற ஆய்வாளர்களின் கருத்துகளும் இங்கு காட்டப்பட்டுள்ளன.

மூன்றாம் இயலில் சமய வாதமும், சமய நிலை மாற்றமும் என்ற தலைப்பில் அவைதீகச் சமயங்களான சமணம்-பவுத்தம் போன்றவற்றின் செல்வாக்கு காட்டப்படுகிறது. சமணம்-வைதீகம், சமணம்-பவுத்தம், சைவம் - வைணவம் எனப் பூசல்கள் பல இலக்கிய காட்டுகளுடன் விளக்கப்படுகின்றன. பூசல்களுக்கு சமயங்களின் சுயநல நிலைப்பாடு காரணமாக இருந்துள்ளதை ஆசிரியர் சுட்டுகிறார். சிலப்பதிகாரத்தில் சமணனாகக் காட்டப்பட்ட கோவலன் மணிமேகலையில் பவுத்தனாகக் காட்டப்படுவதும், வைதீகச் சமயத்தாரின் போலித் துறவை சீவகன் சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்தி சமணம் தழுவச் செய்தமையை சீவகசிந்தாமணி கூறுவதும், வைதீகக் கடவுளர்களுக்கு பலியிடல் என்பதை சமணம் எதிர்த்ததாக நீலகேசி சுட்டுவதோடு புத்த துறவிகள் பற்றி இழிவாகப் பேசுவதும் இலக்கியத்தில் காணப்படும் சமயப்பூசல்களாகக் காட்டப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் சமணம் உரைக்க கவுந்தியடிகள், மணிமேகலையில் பவுத்தம் உரைக்க அறவணடிகள் என பாத்திரப் படைப்புகள் சமயத்தின் முக்கியத்துவத்திற்காகவே படைக்கப்பட்டதையும், குண்டலகேசி காப்பியத் த்லைவி சமணத்திலிருந்து பவுத்தம் தழுவியமையையும் சுட்டிக்காட்டி அவைதீகச் சமயங்களான சமணம், பவுத்தம் போன்றவற்றில் இதுபோன்ற காலத்திற்கேற்ற போக்குகள் பல காட்டப்பட்டுள்ளதோடு சமய நிலை மாற்றத்தில் தொடக்க காலத்தில் சமண, பவுத்தர்கள் முனைப்போடு செயல்பட்டதையும் காப்பியச் செய்திகள் வழி விளக்கியுள்ளார்.

வைதீகச் சமய வளர்ச்சி, பண்பாடு சார்ந்து தமிழகத்தில் எவ்வாறு மாற்றங்கள் பெற்றது என்பதை நான்காம் இயலில் வெளிக் கொணர்ந்துள்ளார். சம்பந்தரும், நாவுக்கரசரும் சைவ சமயப் பிரச்சாரம் செய்ததோடு அரசு அதிகாரத்தின் மூலம் சமண பவுத்தர்களைத் துரத்திய பல செய்திகள் பெரிய புராணம் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. அரசியல் செல்வாக்குடைய சமயம் பிற சமயங்களைப் பழிவாங்கத் தவறியதில்லை என்பதற்கு சைவ சமயமும் விலக்கன்று என்பது பல காட்டுகளுடன் அமைந்துள்ளமை சிறப்பாகும். வேத மரபுகளை முழுமையும் உள்வாங்க முடியாமலும் அதினின்று விடுபடமுடியாமலும் இருந்த சைவ வைணவ சமயங்கள் தங்களுக்குள் இருப்பை விரிவுபடுத்த முயன்றபொழுது சைவம் அரசு ஆதரவுச் சமயமாகவும், தமிழ்ச் சமயமாகவும் திகழ்ந்தது என்பதோடு பிற்காலச் சோழர்களின் காலத்தில் சைவக் கோயில்கள் தமிழகத்தில் ஏராளமாகக் கட்டப்பட்டதையும் குறிப்பாக சிவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதையும் இச்சமயத்தின் அரசு செல்வாக்கிற்கு உதாரணமாகக் காட்டுகிறார். சமணக் கோயில்கள் பல சைவக் கோயில்களாக மாற்றப்பட்டதை சுரேஷ் பிள்ளையின் ஆய்வைச் சான்று காட்டி விளக்கி இருக்கிறார். தீட்டு என்ற கருத்து சமூகத்தில் எவ்வாறு

தோன்றியது, இது ஆரியர்களின் தாக்கத்தாலா, பிராமணமயமாக்கலுக்கும் தீட்டு/தீண்டாமைக்கும் உள்ள தொடர்பு, பெரியபுராணத்தில் தீட்டு பற்றிய கருத்துகள் போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன.

கி.பி, ஆறாம் நூற்றாண்டுக்குப் பின் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை தோன்றிய தேவாரம் முதலான பக்தி இலக்கியங்களும், பெரியபுராணமும் சமூகத்தையும், சமயத்தையும் மறு கட்டமைப்புச் செய்ய முனைந்தன எனவும், இதில் சமண பவுத்தம் அழிக்கப்பெற்று வைதீகம் எழுச்சி பெற்றதெனினும் அவைதீகச் சமயங்களான சமணமும், பவுத்தமும் அழிக்கப்பட்டாலும் அவற்றின் எச்சங்கள் இலக்கிய வடிவில் அழியாத கருவூலங்களாகத் தமிழகத்தில் இன்றும் நிலைபெற்றுள்ளதாக நிறைவாகக் காட்டியுள்ளார். தொல்லியல், கல்வெட்டுகள், சிற்பங்கள் தொடர்பான வரலாற்றுச் சான்றுகள் சில ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. சமுக வரலாறு, சமய வரலாறு, அரசியல் வரலாறு தொடர்பான ஆய்வாளர்களுக்கு இந்நூல் துணை சேர்ப்பதாக அமையும். இன்றைய சூழலில் சிந்தனையாளர்கள் யாவரும் படிக்க வேண்டிய நூல்.

**பா. ஜெயக்குமார், தஞ்சாவூர்.**

## 53:2

கார்த்திகேசு சிவத்தம்பி, **மதமும் கவிதையும்**, மக்கள் வெளியீடு - 50, 24 உனிசு அலிசாகிப் தெரு, எல்லிசு சாலை, சென்னை, 1999, பக். 95 விலை ரூ. 30/-

ஆசிரியரின் சில உரைகளும், கட்டுரைகளும் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன. 'மதமும் கவிதையும் - தமிழ் அநுபவம்' என்ற தலைப்பில் மனிதத் தேவைகளின் வெளிப்பாடான மதத்திற்கும், கவிதைக்கும் உள்ள தொடர்பு காட்டப்படுகிறது. தனிமனிதனின் தனிமையே கவிதை நிலைக்கு இட்டுச் செல்வதைக் கொண்டு பக்தி இலக்கியத்தின் இலக்கியத் தளம் குறித்து ஆராய்ந்துள்ளார். உணர்ச்சி நிலைகளின் வெளிப்பாடான கவிதை தொடர்பு முறைமையை உருவாக்குவதுபோல் மதமும் கவிதைவழி வெளிப்பட்டதால் மதக் கவிதை மனதைப் பிழிவதாகவும், பிணைப்பதாகவும் அமைந்துள்ளதாகக் கருதுகிறார். அப்பர், சம்பந்தர், மணிவாசகர் போன்றோரின் பாடல்களினூடே காணப்படும் அழுத்த வேறுபாடுகள், இவை அகம், புறம் போன்ற இலக்கியப்பாடல் மரவிலிருந்து வேறுபடும் விதிசார் நெறியின்மை எனப் பலகருத்துக்கள் உள்ளன. தெய்வத்துடன் ஆள் நிலைப்படும் ஓர் உறவை நேரடி உறவுத்தன்மை எனச் சுட்டுவதோடு இப்பாடல்களின் வெற்றி உணர்வாழத்தில் உள்ளதாகச் சுட்டுகிறார். கோயிற்பண்பாடு பக்திப்பாடல்கள் தொடர்பு, திருத்தொண்டர் புராணம் இயற்றிய சேக்கிழாரைக் காட்டாகக் கொண்டு அரச பண்பாடு எவ்வாறு

கோயிற்பண்பாட்டைப் பயன்படுத்தியது என்பன சுட்டப்படுகின்றன. கோயிற் பண்பாட்டை நிராகரிக்கும் சித்தர் பாடல்களும் தமிழுக்குப் புதியதோர் இலக்கியப் பண்பை ஊட்டுவதாகக் காட்டுவதோடு, ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், கமில் ஸ்வெலபில் இருவரின் சிறு குறிப்புகள் தவிர இது குறித்து விரிவான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்ற ஆதங்கமும் காணப்படுகிறது. தாயுமானவரையும், குணங்குடி மஸ்தான் சாகிபுவையும் ஒப்பு நோக்கி மறைஞானக் கவிதைகள் தமிழ்ச்சூழலில் ஒரே தன்மையைக் கொண்டிருப்பதையும், சுப்பிரமணிய பாரதியிடத்து மத அநுபவம் சமூக ஒருமைப்பாடு, பொதுவுடமை எனப் புதிய பரிமாணத்தைப் பெற்றிருந்ததையும் சுட்டுவதோடு மத இலக்கியங்களை பாராயணப் பாடல்களாக மாத்திரம் பாராமல் கவித்துவக் களஞ்சியங்களாகவும் பார்க்கும் போக்கினை வளர்க்க வேண்டுமென்கிறார்.

'தமிழின் இரண்டாவது பக்தியுகம்' என்ற பகுதியில் 15–17ஆம் நூற்றாண்டுகளுக்குரிய அருணகிரிநாதர், குமரகுருபர், அபிராமபட்டர், தாயுமானவர் ஆகியோரின் சைவ பக்தி இலக்கியங்கள் ஆராயப் பட்டுள்ளன. திருப்புகழில் சந்த வேறுபாடுகளுக்கும், யோகம் பற்றிய குறிப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது சுட்டப்படுகிறது. மிதமிஞ்சிய பாலியல் திளைப்பை நீக்கி நோக்கினால் அருணகிரியார் சாதாரண வாழ்க்கை நிலையிலுள்ள மக்களின் மனவுணர்ச்சிகளுக்கு நெருங்கியவராகக் காணப்படுவதாகக் காண்கிறார். திருமலை நாயக்கர் காலத்தைச் சார்ந்தவரான குமரகுருபரர் பாடியுள்ளவை பிற்காலப் பக்தி இலக்கியங்களின் இலக்கிய சிரத்தைக்கு உதாரணமாகக் கொள்கிறார். வைணவத்தில் கண்ணன் குழந்தையாகப் பார்க்கும் மரபு போன்று முருகன் சைவத்தில் குழந்தையாகப் பார்க்கப்படும் தன்மை பக்தி பரிமாணத்தின் விரிவாக்கமாகக் கொள்கிறார். சந்தம் அருணாகிரியாரின் சிறப்பம்சமாகப் போற்றப்பட்டாலும் அப்பண்பு குமரகுருபரர் தாயுமானவர் ஆகியோரிடத்தும் காணப்படுவதாக வலியுறுத்துகிறார். தாயுமானவரின் பாடல்கள் தமிழின் பக்தி இலக்கிய நோக்கில் ஒரு முக்கியமான திசைத் திருப்பமாகக் கருதப்படுகிறது. 900-1400 காலகட்ட பக்தி இலக்கியங்களில் காணப்பட்ட தத்துவ (மெய்யியல்) நோக்குகள் இக்கால கட்டத்தில் காணப்பட்டாலும் சிந்தனைப் போராட்ட மரபு ஒன்றுக் காணப்பட்ட தேவார காலத்தில் போலல்லாமல், இக்காலகட்டத்தில் தென் தமிழ்நாடு முக்கிய பண்பாட்டு மையமாகத் திகழ்ந்தமை, விஜயநகர ஆட்சியில் ஏற்படும் சில மாற்றங்கள், குறிப்பாகக் கோயில்கள் அரசியற்கருவிகளானதால் வட்டார மக்களிடத்து காவல்தெய்வ வழிபாடு அதிகரித்தமை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துகிறார். 16–17 நூற்றாண்டுகளில் இலங்கையிலும், தமிழகத்திலும் காணப்பட்ட கிறிஸ்தவத் தமிழ்ப் பண்பாட்டுடன் ஒன்றிணைந்தன என்பது 'தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்' பகுதியில் பேசப்படுகிறது. இங்கு மொழிவழிப்பண்பாடு எனும் கோட்பாடு வலியுறுத்தப்படுவதோடு, சமயங்களின்

நிலைப்பாட்டை மொழி வெளிப்படுத்தியதும் காட்டப்படுகிறது. இதனடிப்படையிலேயே தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட சமயத்தவரும் வாழ்கின்ற சார்பற்ற பண்பாடு தோன்றியதாகக் கூறுவார். தமிழ் நாட்டுத் தளத்தில் தோன்றிய அறபுத்தமிழ் இலக்கிய வளர்ச்சியையும் கோடிட்டுக்காட்டத் தவறவில்லை. பெஸ்கி முதலான பாதிரிமார்களின் தமிழ்நூல் வெளியீடுகளின் பங்கு குறிப்பிடப்படுகிறது. மதம் என்பதற்குத் தேவைப்படும் இரு அம்சங்களாக சமூகவியலாளர்கள் கருதும் சடங்கு (ritual) மற்றும் புனைவ (myth) என்பதைப் பூர்த்தி செய்வதாக எண்டிறிக்குப் பாதிரியாரினுடைய நூல்கள் இருந்தமை, இந்தப் பண்பாட்டிணைவிற்குப் பெரிதும் உதவியாக தமிழில் பிரார்த்தனைகளையும் மத அனுட்டானத்துக்கு வேண்டியதையும் எழுதியமை, மதத்திற்கு வட்டாரமொழி எந்தளவிற்கு தேவை போன்றன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பிற்காலங்களில், குறிப்பாக சுதந்திரத்திற்குப் பின்னர் திராவிட இயக்கங்கள் மார்க்சிஸ்டுகள் பக்தி இலக்கியங்கள் மீது கொண்டிருந்த பார்வை, அதன் தற்போதைய நிலை எனப் பின்னுரையாகச் சில கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு பல ஆய்வுகளுக்குத்தளம் அமைத்துள்ளது எனில் மிகையன்று.

**பா. ஜெயக்குமார், தஞ்சாவூர்.**

## 53:3

ச. கிருஷ்ணமூர்த்தி, **திருவாவடுதுறை ஆதீன வரலாறு,** உண்ணாமலை பதிப்பகம், 12/1 புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம், 1999, பக் 222, +16

ஆசிரியர் தனது பணி தொடர்பான ஓலைச்சுவடி ஆய்வுக்காக பலமடங்களுக்குச் சென்ற போது திருவாவடுதுறை மடத்தில் அவருக்கு ஒருவிதப் பற்றுதல் ஏற்பட்டு அங்கு செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகளை ஆய்வு செய்ததின் வெளிப்பாடு இந்நூல், கி.பி. 16 ஆம் நூற்றாண்டு தொடங்கி இம்மடத்தின் தலைவர்களான 23 தேசிகர்கள் பற்றியும் அவர்கள் கால மடத்துச் செய்திகள் பற்றியும் இந்நூல் விவரிக்கிறது. 1936 ஆம் ஆண்டளவில் இம்மடம் 131 கிளை மடங்களைக் கொண்டிருந்தமையை ஒரு பட்டியல் விளக்குகின்றது. ஆசிரியர் கிளை மடங்களுக்குச் சென்ற போது அங்கங்கு படித்த கல்வெட்டுகளின் பாடங்கள் சிலவற்றையும் நூலில் தந்துள்ளார். மடத்தின் சைவப் பணி மற்றும் தமிழ்ப்பணியையும் விளக்கியுள்ளார். 'வரலாறு' என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்நூலில் தரவுகளின் தொகுப்போ, அறிமுகமோ தரப்படவில்லை. அடிக்குறிப்புகளும் எங்கும் தரப்படவில்லை. இது பெருங்குறையாகும்.

**சு. இராசகோபால், சென்னை.**

# 54. புதிய கருத்துக்கள்

## 54:1

**குடுமியான்மலை தமிழ்-பிராமிக் கல்வெட்டில் ஒரு திருத்தம் :**

ஆவணம் இதழ் 10ல் குடுமியான்மலை தமிழ் பிராமிக் கல்வெட்டு **நாழன் கொறறந்தய ப.ய** என்று உள்ளதாக வெளிவந்துள்ளது. அதன் பதினோராம் எழுத்து முற்றிலும் அழிந்துபோய் அங்கு இப்பொழுது ஒரு வெற்றிடம் தான் உள்ளது என அதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அக்கல்வெட்டினை நேரில் சென்று பார்க்கும் போது அந்த பதினோராம் எழுத்து அழியவில்லை. அங்கு 'ரி' என்னும் எழுத்து உள்ளது தெளிவாய்த் தெரிகிறது. எனவே அதனை **நாழன் கொற்றந்தய பரிய** என்று படிப்பதே சரியாகும். பரியங்கம், பரியல்திகை, பரியயம் ஆகிய சொற்களும் படுக்கையினையே குறிப்பதால் ஞாழல் என்ற ஊரைச் சேர்ந்த கொற்றந்தை என்பான் அமைந்த படுக்கை என்றே பொருள் கொள்ளலாம்.

**– செ. கோவிந்தராஜ், உதகை.**

---

# கட்டுரையாளர்கள்

**திரு. ஆறுமுக சீதாராமன்,**
12, ராஜராஜன் நகர்,
மானோஜிபட்டி (தெற்கு)
தஞ்சாவூர்

**முனைவர் க. இராசகோபால்,**
கல்வெட்டாய்வாளர்,
தொல்லியல்துறை,
சி.பி.டி. வளாகம்,
சென்னை - 113.

**திரு. கரு. இராசேந்திரன்,**
ஆசிரியர்,
மேலப்பனையூர் அ.நி.,
விராச்சிலை வழி - 622 420

**திரு. க. ஈஸ்வரன்,**
தொல்லியல் துறை,
சி.பி.டி. வளாகம்,
தரமணி, சென்னை - 113.

**திரு. கோ. உத்திராடம்,**
அன்னம்பாக்கம்

**திரு. ஐராவதம் மகாதேவன்,**
இ.அ.ப. (ஓய்வு)
வித்யா ஸ்ரீ
18, ஏ, 4வது கடற்கரை நோக்குச் சாலை,
வால்மீகி நகர்,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.

**திரு. நாக. கணேசன்,**
காப்பாட்சியர்,
தொல்லியல்துறை அகழ்வைப்பகம்,
ஜவஹர்பஜார்,
கரூர் - 639 001.

**திரு. மா. கலைவாணன்,**
காப்பாட்சியர்,
தொல்லியல்துறை அகழ்வைப்பகம்,
1, முகமது அலி கிளப் சாலை,
தருமபுரி.

**திரு. நடன. காசிநாதன்**
136, 5வது தெரு, மல்லீஸ்வரிநகர்,
சேலையூர், சென்னை - 600 073.

**திரு. ம. காந்தி,**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கோட்டை,
வேலூர்.

**திரு. ம. காந்திராசன்**
சென்னை

**திரு. ஆனந்தபுரம். கோ**
**கிருஷ்ணமூர்த்தி,**
ஆனந்தபுரம்

**திரு. கி. குமார்**
சென்னை

**திரு. தே. கோபாலன்,**
தொல்லியல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியார் அலுவலக
வளாகம்,
நாகர் கோயில்.

**திரு. செ. கோவிந்தராஜ்,**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
பாலி இல்லம், மைசூர் சாலை,
உதகமண்டலம் - 643 001.

**கி.இரா. சங்கரன்,**
ஆய்வாளர், கல்வெட்டியல் துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திரு. சங்கரன் இராமன்,**
D1-8, ஆனந்தா குடியிருப்பு,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.

**முனைவர் ப. சண்முகம்,**
பேராசிரியர்,
தொல் வரலாறு, தொல்லியல்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

**முனைவர் த. சந்திரகுமார்**
பேராசிரியர்,
சிற்பத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திரு. அ. சந்திரபோஸ்**
கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திரு. சொ. சந்திரவாணன்,**
காப்பாட்சியர்,
தொல்லியல்துறை அகழ்
வைப்பகம், சன்னதி தெரு,
குற்றாலம்.

**திரு. சொ. சாந்தலிங்கம்**
தொல்லியல் அலுவலர்
திருமலை நாயக்கர் அரண்மனை,
மதுரை - 625 001.

**முனைவர் சு. சுவாமிநாதன்,**
உதவி கல்வெட்டியல்
கண்காணிப்பாளர்,
இயக்குநர் (கல்வெட்டியல்)
அலுவலகம், இந்தியத் தொல்லியல்
அளவீட்டுத்துறை,
மைசூர் - 570 005.

**வி. செல்வக்குமார்,**
ஆய்வாளர்,
தொல்லியல் துறை,
தெக்கணக் கல்லூரி,
புணெ - 410 006.

**முனைவர் கு.சேதுராமன்,**
பேராசிரியர்,
கலை வரலாற்றுத்துறை,
மதுரை காமராஜர் பல்கலைக்
கழகம், மதுரை - 625 021.

**திரு. இரா. தனபால்,**
காஞ்சிபுரம்.

**திரு. இல. தியாகராஜன்,**
பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
அரசுகலைக் கல்லூரி,
அரியலூர் - 621 704.

**திரு. து. துளசிராமன்,**
காப்பாட்சியர்,
தொல்லியல் துறை
அகழ்வைப்பகம்,
ஆர்க்காடு - 632 503.

**திரு. எம். நம்பிராசன்**
சென்னை.

**திரு. இரா. நாகேஸ்வரசிவம்,**
சிவன் கோயில் குருக்கள்,
இருகூர், கோவை மாவட்டம்.

**முனைவர் ஆ. பத்மாவதி,**
கல்வெட்டாய்வாளர்,
தொல்லியல் துறை,
சி.பி.டி. வளாகம்,
சென்னை - 113.

**செல்வி மா. பவாணி,**
ஆய்வாளர்,
கல்வெட்டியல், தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**புலவர் அ. பழனியப்பன்,**
95, பழனியாண்டவர் கோயில் தெரு,
சம்பை - 638 312.

**திரு. க. பன்னீர்செல்வம்,**
உதவி கல்வெட்டாய்வாளர்,
இயக்குநர் (கல்வெட்டியல்)
அலுவலகம், இந்தியத் தொல்லியல்
அளவீட்டுத் துறை,
மைசூர் - 570 005.

**திரு. ஆர். பாலச்சந்திரன்,**
திருத்தங்கல்,
விருதுநகர் மாவட்டம்.

**திரு. க.அ. புவனேசுவரி,**
முதுநிலை தமிழாசிரியை,
கே.ஜி. பெண்கள் மேல்
நிலைப்பள்ளி, அன்னூர் - 641 653.

**திரு. ப. புஷ்பரட்ணம்,**
ஆய்வாளர், கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திரு. ர. பூங்குன்றன்,**
காப்பாட்சியர், தொல்லியல் துறை,
கோயமுத்தூர் - 641 012.

**திரு. ப. பூபாலன்,**
9, பாட்டைத் தெரு,
நவல்பூர்,
இராணிப்பேட்டை - 632 402.

**செல்வி ந. முத்து,**
கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 615 005

**Dr. M.R. Ragava Varier,**
Professor, (Retd.)
Department of History,
Calicut University, Kozikodu.

**முனைவர் க. ராஜன்,**
இணைப் பேராசிரியர்,
கல்வெட்டியல், தொல்லியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திரு. மு. ராஜேஷ்,**
கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திருமதி சு. வசந்தி,**
அகழாய்வாளர், தொல்லியல் துறை,
சி.பி.டி. வளாகம்,
சென்னை - 113.

**முனைவர் நா. வள்ளி,**
பேராசிரியை,
இராமசாமி தமிழ்க்கல்லூரி,
காரைக்குடி.

**முனைவர் வெ. வேதாசலம்,**
கல்வெட்டாய்வாளர்.
திருமலை நாயக்கர் அரண்மனை,
மதுரை - 625 001.

**திரு. சி. வீரராகவன்,**
66, முத்துவேல் லே அவுட்,
கே.கே. சாலை,
விழுப்புரம் - 605 606.

**திரு. ப. வெங்கடேசன்,**
3/178, கம்பன் தெரு,
பெல்லியப்பா நகர்,
வாலாஜாப் பேட்டை - 632 513.

**திரு. பா. ஜெயக்குமார்,**
கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

**திரு. இர. ஜெயராமன்,**
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்,
தொல்லியல் துறை,
தஞ்சாவூர்.

**திரு. கி. ஸ்ரீதரன்,**
9ஏ, மேல் அடையவிளஞ்சான் வீதி,
திருவரங்கம்,
திருச்சிராப்பள்ளி.

# TAMIL NADU ARCHAEOLOGICAL SOCIETY,
## THANJAVUR

**Receipts and Payments Account for the year ended 31.3.2000**

| | | | |
|---|---|---|---|
| To Opening Balance | | By Bank FD | 1,20,000.00 |
| " Cash in Hand | 603.34 | " Printing | 18,070.00 |
| " Cash at Bank Indian Bank Thanjavur | 696.00 | " Typing Charges | 1,766.75 |
| | | " Audit Fees | 450.00 |
| " SBI, Thanjavur | 9,379.41 | " Salary | 450.00 |
| " Bank FD | 1,30,000.00 | " Honorarium | 2,000.00 |
| " Sale of Books | 8,010.00 | " Postage | 1,919.00 |
| " Membership Fees | 11,670.00 | " Bank Charges | 277.00 |
| " Interest | 9,367.41 | " Freight | 194.00 |
| | | " General Expenses | 1,364.00 |
| | | " Closing Balance Cash at Bank SBI, TNJ | 22,097.82 |
| | | IB, TNJ | 728.00 |
| | | " Cash in hand | 409.59 |
| | 1,69,726.16 | | 1,69,726.16 |

**(Sd.) V. Ramasamy,** B.Com., ACA
Chartered Accountant
No. 1137, East Main Street,
Thanjavur

# TAMIL NADU ARCHAEOLOGICAL SOCIETY,
## THANJAVUR

### Income and Expenditure for the year ended 31.3.2000

| Expenditure | | Income | |
|---|---|---|---|
| To Printing Charges | 18,070.00 | By Sales of Books | 8,010.00 |
| " Typing & Stationery | 1,766.75 | " Membership Fees | 11,670.00 |
| " Audit Fees | 450.00 | " Interest | 9,367.41 |
| " Salary | 450.00 | | |
| " Honorarium to T.N. Subramanian Endowment Lecture | 2,000.00 | | |
| " To Postage | 1,919.00 | | |
| " Bank Charges | 277.00 | | |
| " Transport (Freight) | 194.00 | | |
| " General Expenses | 1,364.00 | | |
| " Excess of Income Over Expenditure | 2,556.66 | | |
| | 29,047.41 | | 29,047.41 |

Balance Sheet as 31.3.2000

| Liabilities | | Assests | |
|---|---|---|---|
| Opening Balance | 1,40,678.75 | Fixed Deposit | 1,20,000.00 |
| Add : Excess of | | Cash at Bank | |
| Income Over | | Indian Bank TNJ | 728.00 |
| Expenditure | 2,556.66 | SBI Thanjavur | 22,097.82 |
| | | Cash in Hand | 409.59 |
| | 1,43,235.41 | | 1,43,235.41 |

**(Sd.) V. Ramasamy,** B.Com., ACA
Chartered Accountant
No. 1137, East Main Street,
Thanjavur

# ஆவணம்

## தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆண்டு இதழ்

ஆவணம் தமிழக வரலாற்றை வளப்படுத்தும் எல்லா அடிப்படைச் சான்றுகளையும் வெளியிடும் நோக்கம் கொண்டது இதுவரை வெளியிடப்படாத கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், காகித ஆவணங்கள், தொல்பொருள்கள், காசுகள், கலைப்பொருள்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளையும், கட்டுரைகளையும் ஏந்தி வருகிறது இது தமிழக வரலாற்றில் ஈடுபாடுடைய யாவருடைய நூலகங்களுக்கும் இன்றியமையாத வரலாற்று கருவூலம்.

| | |
|---|---|
| ஆவணம் 1, 2 | இருப்பு இல்லை |
| ஆவணம் 3 – 10 | ரூ. 100.00 (இதழ் ஒன்றுக்கு) |
| நொபொரு கராஷிமா, வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம் (சோழர் காலம்) | ரூ. 100.00 |

தமிழகத் தொல்லியல் கழக இதழ்களைப் பெற விழைவோர், சரியான தொகையை வரைவோலையாகவோ காசோலையாகவோ **பொருளாளர், தமிழகத் தொல்லியல் கழகம். மே/பா. கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்**, 613 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் வரைவோலை, காசோலைகள், தமிழகத் தொல்லியல் கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும் காசோலையாக இருந்தால் மேற்கண்ட தொகையுடன் ரூ 20ஐச் சேர்த்து அனுப்பவும்

பிற தகவல்களுக்கு செயலர், தமிழகத் தொல்லியல் கழகம், மே/பா கல்வெட்டியல்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 613 005 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்

---

**For Further Information :**

Secretary, Tamilzakat Tolliyal Kazakam,
(Tamil Nadu Archaeological Society),
C/o, Department of Epigraphy and Archaeology,
Tamil University, Thanjavur - 613 005.